"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்"

# வைத்திய கலாநிதி

# THE VAIDYA KALANIDHI

A TAMIL MONTHLY JOURNAL OF MEDICINE AND SANITATION

EDITED BY
Ayurveda Bhushanam
PANDIT M. DURAISWAMI AIYANGAR,
Senior Physician in charge S.K.P.D. Hospital

பத்திராதிபர்,
ஆயுர்வேத பூஷணம்
பண்டிட் எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்திரியின் பிரதான டாக்டர்

Vol. VIII. புஸ்தகம் 8.
துன்மதி வருஷ புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மீ
SEPT. OCT. & NOV. 1921.
No. 9, 10, 11. ஸஞ்சிகை 9, 10, 11.

10 MAY

பொருளடக்கம்.

விசேஷ வியாஸங்கள்:— பக்கம்.

வாதகபஜ்வரத்தைத் தடுக்கும் வகை:—எம். எஸ். ஐயங்கார், மெடிகல் பிராக்டீஷனர் ... 81

பாண்டுரோகம்:—ஜி. கண்ணுசாமி வைத்தியர். ... 82

கனிகள் உணவாகவும் வியாதி நிவாரணமாகவும் உபயோகமாதல்:—W. கிருஷ்ணசாவமி ராவ், ஸப் அஸிஸ்டெண்டு ஸர்ஜன் ... 84

சிசுக்களைப் பரிபாலிக்கும் பொதுமுறை.—டாக்டர். எ. மாணிக்க முதலியார், மெடிகல் பிராக்டீஷனர் ... 87

குடலிலுண்டாகும் கிருமிகள்:—ஜி. கண்ணுசாமி வைத்தியர் ... 89

பத்திராதிபருடைய வியாஸங்கள்:—ஆயுர்வேத முறையை விருத்தி செய்யும் வகை ... 91

சுதேச வைத்திய பரிசீலனை கமிட்டி ... 100

கடிதங்கள்:—குடல் கோளாறு, ஆயுர்வேத பரீக்ஷைகள், ச்யவநப் பிராசம் முதலியது, ... 103

ஔஷதங்களும் சிகித்ஸையும்:—தசமூல தைலம், நவாசாரம் தேள் முதலியது கொட்டுவதைப் போக்க, யூகலிப்டஸ் இலையும் மதுமேஹமும், விக்கலில் லவங்காதி சூர்ணம், காயம் கர்ப்பஸ்ராவத்தைத் தடுக்கும், கடுகெண்ணெயைத் தேய்த்துக் கொள்ளுதல். ... 107

பலவகைக் குறிப்புகள்:—எல்லா இந்திய ஆயுர்வேத மஹாமண்டலம், தேசீய வைத்திய விமர்சகஸபிதி, பம்பாயில் சுதேச வைத்திய பரிசிலனை, தேஹ தாதுக்களின் உற்பத்தியும் அழிவும், சூதகசன்னிக்கு ஒரு சிறந்த பரிசோதனை, ஜப்பானில் வீடுகளுக்கு வெள்ளையடித்தல், தலைச்சுற்றல் அல்லது மயக்கத்துக்குப் பரிஹாரம். ... 109

மாதவநிதானம்:— 25—40

ஆயுஷ்ய ரஸாயநம்—இது வெகு சிலாக்யமான பல விருத்தி மருந்து. ப்ருங்காமலக தைலம்—முதல் தரமான ஸ்நான தைலம். சிரஸ்ஸையும், கண்களையும், பொதுவாக தேஹத்தையும் குளிரச்செய்வது இந்த இரண்டு முக்கியமான ஔஷதங்களைப்பற்றிய விவரங்களை இந்த ஸஞ்சிகையின் விளம்

THE MOST CHARMING PERFUME

# OTTO DILBAHAR

(REGISTERED.)

எல்லோர் மனதையும் அதியுத்சாகப்படுத்தும் சுகந்தம்.

## ஆடோ டில்பஹாரா் (ரிஜிஸ்டர்ட்.)




நீடித்திருக்கக்கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷமுண்டாகக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாது, பொருக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினால் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைக்குட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாஹ காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னம் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இந்த ஆடோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிரப்பி விற்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெரியது புட்டி 1-க்கு | (4 டிராம் அல்லது ½ அவுன்ஸ்) | விலை ரூ. | 2— 0—0 |
| வேறு ,, | (2 டிராம்) | ,, | 1— 4—0 |
| மத்தரம் ,, | (1 டிராம்) | ,, | 0—12—0 |
| சிறிய புட்டி ,, | (½ டிராம்) | ,, | 0— 8—0 |
| மாதிரி ,, | | ,, | 0— 2—0 |
| வாசனைக் கார்ட்டு 1-க்கு | | ,, | 0— 1—0 |

} தபாலாபீஸின் புதிய விதிப்படி ஒவ்வொன்றுக்கும் தபால் சார்ஜ் பிரயோகம் சார்ஜ் செய்யப்படும்.

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதேமாதிரி அநேக பெயர்கள் இருப்பதால் வாங்கும்பொழுது புட்டிகள்பேரில் ஆடோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று ஜாக்கிரதையுடன் கவனிக்கவும்.

ஹோல் ஏஜண்டுகள் :—ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மா மஜீத் மார்க்கட், பம்பாய்

ஏஜண்டு :—மேதா புருஷோத்தம் மூல்ஜீ,





# "TAMILAHAM"

10 MAY 19

## தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப்பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய், பிரதி புதன், சனிக் கிழமைகள்தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உட்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் சென்றிருக்கும் 3-லக்ஷத்திற்கு மேற்பட்ட தமிழ்ஜனங்களின் நன்மைகளைக்கருதியும், உரிமைகளைக்காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கிய மலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர், பத்து ரோட்டில், 186, 188, 190-ம் நெ. கட்டடங்களில் அமைக்கப்பெற்றிருக்கும் இண்டஸ்டிரியல் அச்சுக்கூட ஸ்வான்தாரர் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக்கொண்டு நடத்தப்படுவது. இது மலாய்நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுவதால் விளம்பரங்கள் செய்வதற்கு மிகவும் சிறந்த பத்திரிகையாகும். இதன் வருடச்சந்தா ரிங்கி 10-0-0, ஆறுமாதத்திற்கு ரிங்கி 5-5-0, மூன்று மாதத்திற்கு ரிங்கி 3-0-0, நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| "TAMILAHAM" OFFICE, | மானேஜர், "தமிழகம்" ஆபீஸ், |
| No. 190, Batu Road, | நெ. 190, பத்து ரோட், கோலாலம்பூர், |
| Kuala Lumpur, | ஐக்கிய மலாய் நாடுகள் |
| (F. M. States.) | |

## ஆயுஷ்ய ரஸாயநம்

### தேஹ பலத்தை விருத்தி செய்யும் மதுரமான ஔஷதம்.

ஆயுஷ்ய ரஸாயநம் என்கிற இவ்வருமையான ஔஷதம் உணவு குடலில் நன்கு ஜீர்ணித்து இரக்தத்திற் சேருவதற்கு உதவி செய்கிறது. தேஹ போஷணையை விருத்தி செய்கிறது. க்ஷீணமாகும் தேஹ தாதுக்களை மீண்டும் சரிப்படுத்தி பலப்படுத்தி விடுகிறது. க்ஷயரோகத்தில் ஆகவே, இதை உபயோகிப்பது மிகவும் நல்லதென்று தேர்ந்த சிகித்ஸகர்கள் கூறுகிறார்கள். இது மூளைக்கும், நரம்புகளுக்கும் சிறந்த உணவு. ஆகவே நரம்புத்தளர்ச்சி, பார்ச்வ வாயு முதலிய வாதரோகங்கள், மூளை பலஹீனப்படுதல் இவற்றிற்கு ஆயுஷ்ய ரஸாயநம் வெகு அநுகூலமானது. புத்தியையுழைத்து வேலை செய்பவர் ஆயுஷ்ய ரஸாயநத்தை உபயோகிப்பதால் வெகு ஸந்தோஷமாகத் தமது வேலையை எளிதிற் செய்து முடிப்பார். இருதயம் பலஹீனமாயிருந்தால் அக்கோளாறைப் போக்கி, இருதயத்தை பலப்படுத்துவதற்கு ஆயுஷ்யரஸாயநந்தான் உத்தம மருந்து. ஆயுஷ்யரஸாயநம் எல்லாவற்றினும் மேலாகச் செய்யக்கூடிய சிறந்த குணம் தாதுபுஷ்டியே; ஸ்த்ரீ-புருஷர்கள் நல்ல சந்ததியைப் பெறுவதற்கு இதை உபயோகிப்பது விசேஷம். இரத்தத்தைச் சுத்தி செய்து, பாண்டுரோகம், சொறி சிரங்குகள், மற்றுமுள்ள தோலைப்பற்றிய கடுமையான வியாதிகள் இவற்றை நிவ்ருத்தி செய்வதும் ஆயுஷ்யரஸாயநமே. வெளிறியும் இளைத்தும் வெகு பலஹீனப்பட்டுள்ள குழந்தைகளுக்கு ஆயுஷ்யரஸாயநம் ஏற்ற மருந்து. இது ஸ்த்ரீகளின் கர்ப்பாசயக் கோளாறுகளை சமநம் செய்து, அவர்களின் ஆரோக்கியத்தையும் விருத்தி செய்யும். இவ்வொரு ஔஷதத்தில் முன் குறிப்பிட்ட பல அருங்குணங்கள் அடங்கியிருப்பதாகச் சுமார் 14 வருஷ அநுபவத்தின் பேரில் அறிந்து ஆயுர்வேத பூஷணம் பண்டித எம் துரைஸ்வாமி ஐயங்கார், எ கே எ. ஸி. அவர்கள், பொதுஜனநன்மையைக் கோரி இங்ஙனம் இவ்வௌஷதத்தை வெளியிட முன்வந்தார்.

இதன் விலை. ரூ. 3 0 0

ஆர்ய ஔஷதசாலை,
7, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி,
மதராஸ்.

---

## கைத்தொழிலும் வியாபாரமும்.

அதிகமான மூலதனமும் தனியான ஓர் ஸ்தலமும் பிறர் உதவியும் இல்லாமல் சொந்த பிரயாசையாலேயே எல்லா விடங்களிலும் எக்காலத்தும் ஏராளமாச் செலவழியக் கூடியதும் நல்ல இலாபம் கிடைப்பதுமான சுகசாதக மருந்துகள், ஷர்பத்துகள், பரிமள கூந்தல் தைலம், பரிமள சாமனங்கள், ரோம நாசக சாப், மைகள், வெள்ளிகில்ட், ஜர்மன் சில்வர், முத்திரை அரக்கு, வான்னிஷ்கள், சோப்முதலிய அனேகசாமான்கள் செய்யும் முறைகளையும் வியாபாரம் நடத்தும் விதங்களையும் தெளிவாய் தமிழ் பாஷையில் எழுதி வெளியிட்டுள்ள,

### "வர்த்தக மித்திரன்"

என்ற புத்தகத்தைத் தருவித்து சுதந்தரமாக உங்களுக்கு ஏராளமான பணம் சம்பாதிக்கச் சாத்தியமாவுள்ள இவ்வழியில் உடனே இறங்குங்கள். விலை புத்தகம் 1-க்கு ரூ. 1-8-0 வி-பி. சிலவு வேறு.

பி. எ. அய்யர்,
எ. கெ. ஔஷதசாலை, திருக்கூர், (வி) தென் இந்தியா.





**22 Gold Medals Awarded!!!**

# S. VAIDYA & Co.,

**MADRAS AND TRICHINOPOLY.**

## ஜிண்டான்

### ஜகப்பிரசித்திபெற்ற ஜிண்டான் மாத்திரை.

வெகு மேலான சுகந்த மாத்திரை.




சதா கைவசமிருந்தால் ஸகல உத்ஸாகத்துக்கும், தைரியத்துக்கும் எல்லா, வியாதி நிவர்த்திக்கும், சுருசுருப்புக்கும், விவேகத்துக்கும் காரணமாகிறது. இதின் உண்மை வாங்கி அநுபவித்தவர்கள்தான் அறிவார்கள். பெரிய பெரிய டாக்டர்கள் இதன் பெருமையைப் புகழ்வதின் காரணம் தெளிவாகிறது.

கையால் பிடுங்கிப்போடுவதை கோடாறிகொண்டு வெட்டுவார்கள் அதுபோல் சுலபத்தில் கைவசம் வைத்து ஆரம்பத்திலேயே அடியோடே நிவர்த்திக்கும் ஜிண்டானின் பெருமைதெரியாமல் வியாதியை முதிரவிட்டு சிரமப்படுபவருக்கு கர்மபலனே காரணம், இதுதான்.

## உண்மை. !!!

எல்லாக்கடைகளிலும் கேழ்க்கப் பெறலாம்: 260 மாத்திரைகளடங்கிய அழகான பொட்டளம் விலை ரூ. 1. இதில் கண்ணாடி வைத்த அழகிய டப்பி இனாமாக வைத்திருக்கிறது. 65 மாத்திரையும் சாதா டப்பியுடன் 4. அணா. 15 மாத்திரை அடங்கிய பொட்டளம் 1. அணா.

ஹோல் ஏஜண்டுகள் :—

**எஸ். வைத்யா அண்டு கோ.,**
பார்க்டவுன், மதராஸ்.

பிராஞ்சிகள் :—

2, கொண்டி செட்டித்தெருவு, எஸ்பிளனேட், மதராஸ்.
சைனாபஜார் தெரு, திருச்சி கோட்டை.

N. B. —இவர்களிடம் ஸகல சுதேசி சாமான்களும், செண்டுகளும், குடும்ப மருந்துகளும், பிஸ்கட்களும், கூந்தல் தைலம், பல்பொடி மேலானது, பித்தளை மெழுகுவத்தி ஸ்டாண்டுகள், இங்கேஎஸ்லென்ஸ் என்னும் குறுக்கின ஸத்துமசி-இத்துடன் 12 மடங்கு ஜலம் சேர்க்க மேலான மசி, ஸ்டீல் பேனா, பௌண்டென் பேனாக்களுக்கும் உபயோகமாகிறது. வேண்டியவர்றிற்கு எழுதினால் விவரம் அனுப்பப்படும்.


---

விளம்பரக்காரருக்குக் கடிதம் எழுதுகையில் — வைத்தியகலாநிதியைக் குறிப்பிடுங்கள்.

# KESARI'S THREE GEMS.
# கேஸரியின் இரத்ன த்ரயம்.

## LODHRA
**BEST UTERINE TONIC**

லோத்ர

ஸ்திரீகளுக்கோர் வரப்ரஸாதினி

ஸ்திரீகளுக்கு அநேக காரணங்களினால் ரஜோகர்ப்பாசயம் கெட்டு ருதுசூலை சம்பவிக்கிறது. இது ஸ்திரீகளுக்கு ஓர் பெரும் பூதமோ எனப் பயப்படக்கூடியது. இந்தக் கொடிய வியாதியுள்ளவர்கள் இன்னும் அநேக மர்ம வியாதிகளுக் கிரையாவதேயன்றி புத்திரபாக்கியமில்லாதவர்களாய்க்கூட இருக்கிறார்கள். இவ்வபாயமாகிய வியாதியை வேருடன் அறுப்பதற்கு எங்களிட "லோத்ர" அசமானமாகிய மருந்து.

இந்த 'லோத்ர' மேற்கூறிய வியாதியை நிவர்த்திப்பதேயன்றி காலத்தில் பஹிஷ்டையாகாமலிருப்பது, பஹிஷ்டை நின்று விடுவது, பஹிஷ்டை காலத்தில் ரஜஸ்வலை சரியாய் ஆகாமல், ஜாஸ்தியாய் அல்லது குறைச்சலாய் போவது, சோமரோகம், மேஹவியாதிகள், மூர்ச்சை, சந்தானமின்மை, தலைவலி, அஜீர்ணம், பலஹீனம், ரத்தஹீனம், சுரம், ஸ்தூலித்திருப்பது, இளைத்திருப்பது, மலபந்தம், இருமல், விக்காக்கை முதலிய வியாதிகளை மிகவும் சுலபமாய் நிவர்த்தித்து சரீரத்துக்கு காந்தியும் முகத்திற்கு தேஜஸையும் கொடுக்கின்றது.

ஆரியர்காள்! ஸ்திரீகளிடத்தில் அபிமானமுள்ள புருஷர்களெல்லாம் இவ்வவுஷத மணியை உபயோகிக்கச் செய்து அவர்கள் தேக சௌக்யத்திற்கு பாத்திரனாய் இருப்பீர்களாக.

அநேக ஸ்திரீகள் சந்தான ஹீனர்களாய் அரசமரப்பிரதக்ஷணம், ஆஞ்சநேய ப்ரதக்ஷணம், அநேக புண்ணிய க்ஷேத்திரயாத்திரை முதலியவை செய்தும் பலனடையாமல் கடைசியில் எங்களிட "லோத்ர" வையுபயோகித்து புத்திர பாக்கியமடைந்து சுகமாயிருக்கிறார்கள்.

இதன் விலை பெரியபுட்டி ரூ. 3—0—0. சிறிய புட்டி ரூ. 1—10—0.

## AMRITA
**BEST BLOOD PURIFIER**

அம்ருத

இரக்தசுத்தி திராவகம்.

இவ்வவுஷதராஜம் லோகப்பிரசித்தமானபடியால் இதைக்குறித்து இங்கு விவரமாய் எழுதுவது அநாவசியமென்று தோன்றியபடியால் சுருக்கமாய் எழுதுகிறோம்.

இதனால் ரக்தக்ஷீணம், ரக்ததோஷம், அஜீரணம், இந்திரிய நஷ்டம், சுவப்னஸ்கலிதம், பலஹீனம் மலபந்தம், பாண்டு, காமாலை, சர்மவியாதிகள், சுகசங்கடங்கள், தலைவலி, கண் எரிச்சல், வயிற்றுவலி, விக்காக்கை, இல்நோய், மேகரணங்கள் முதலிய வியாதிகள் அதிசீக்கிரமாய் நிவர்த்தியாவதேயல்லாமல் இது ரக்தத்தை சுத்தி செய்து பலஹீனம் எந்தக் காரணத்தினால் உண்டானபோதிலும் பெருங்காற்றி லடித்துக் கொண்டுபோகும் பருத்தியைப்போல் படாபஞ்சமாய் பறக்கச்செய்யும்.

இதன் விலை பெரிய புட்டி ரூ. 3—0—0.
சிறிய புட்டி ரூ. 1—10—0.

## ARKA
**BEST CURE FOR INFLUENZA AND ALL OTHER FEVERS.**

அர்க்க

இன்புளுயன்சா முதலிய சர்வ ஜ்வர நிவாரணி.

இதனால், பிரதிதினம் வரும் ஜ்வரம், ஒருநாள் முறை ஜ்வரம், நின்று நின்று வரும் ஜ்வரம், புராண ஜ்வரம், மலை ஜ்வரம், குளிர் ஜ்வரம், இன்புளுயன்சா முதலிய சர்வ ஜ்வரங்களும் மூன்று வேளையில், நிவர்த்தியாகும். இந்த அவுஷதத்தை உபயோகிப்பதினாலேயே ஜ்வரக்கட்டிகள் அதிக ஆச்சரியமாய் மாயமாய்விடும். இவ்வவுஷதம் மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டபடியால் குழந்தைகள் முதல் வயோதிகர் வரையில் எத்தகைய சந்தேகமுமின்றி உபயோகிக்கலாம்; தவிர இதனால் மலபந்தகம், சளிபிடிப்பு, அஜீரணம், தலைவலி முதலியவை நிவர்த்தியாகும்.

இதன் விலை புட்டி 1-க்கு ரூ. 1—8—0.

கே. என். கேஸரி, வைத்தியர் & வைத்யசாலாதிகாரி,
"லோகோபகாரம்" ஆயுர்வேத ஔஷதசாலை, 33, போலீஸ் கமிஷனர் ஆபீஸ் ரோட், எழும்பூர்.
எ. கெ. ஔ

விளம்பரக்காரருக்குக் கடிதம் எ... வைத்திய கலாநிதியைக் குறிப்பிடுங்கள்.


# வைத்திய கலாநிதி
# THE VAIDYA KALANIDHI


EDITOR:
Ayurveda Bhushan
Pandit M. Duraiswami Aiyangar A. K. A. C.
Senior Physician-in-charge, S. K. P. D. Hospital

பத்திராதிபர் :
ஆயுர்வேத பூஷணம்
பண்டித எ. துரைஸ்வாமி ஐயங்கார்,
எஸ். கே. பி. டி. ஆஸ்பத்ரியின் பிரதான டாக்டர்.

புஸ்தகம் 8. Vol. VIII. | துன்மதி௵ புரட்டாசி ஐப்பசி கார்த்திகைமீ SEPTEMBER, OCTOBER & NOVEMBER 1921. | No. 9, 10, 11 ஸஞ்சிகை 9, 10, 11.


## HOW TO AVOID INFLUENZA
### வாதகப ஜ்வரத்தைத் தடுக்கும் வகை.

By M. S. AIYANGAR,
*Medical Practitioner.*

எந்த வியாதியையும் முன் ஜாக்கிரதையாயிருந்து தடுப்பது விவேகமாகும். வியாதியைத் தடுக்க முயற்சியின்றி, அது வந்தபிறகு சிகித்ஸை செய்வது இரண்டாந்தரமான ஸாதாரண உபாயமாம். இக்கோட்பாடு முற்காலத்திலும் சரி, இக்காலத்திலும் சரி எல்லா சாஸ்திரஞ்ஞராலும் ஒரே மனதாகக் கூறப்படுவதாகும். வைத்தியர்களுக்கு நன்கு இவ்விஷயம் தெரிந்ததே. ஆனால், இக்கோட்பாட்டைப் பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களுக்கும், வைத்திய சாலை முதலிய விடங்களில் ரோகிகளுக்கு உபசாரம் செய்பவர்களுக்கும் போதனை செய்வதால் பொது ஜன சுகாதார விருத்தியில் அனுபவத்தில் வெகு விசேஷ பயன் உண்டாகும். முக்கியமாய் வாத-கபஜ்வரம் என்னப்படுகிற வாத-பலாஸகத்தைத் தடுக்கும் விஷயத்தில் அடியில் விவரிக்கப்படும் குறிப்புகள் அங்ஙனம் கவனிக்கத் தகுந்தவை:—

ஸூர்ய வெளிச்சத்தில் ஸாத்தியமான வரையில் இருந்து வரவும். நாம் இருந்து வருமிடத்தில் புதிதாகவும் சுத்தமாகவு முள்ள வாயு தாராளமாக வீசவேண்டும். பகற்பொழுது முடியவும் நன்றாக இழுத்து ச்வாஸ வேலையைச் செய்யப் பழகவேண்டும்.

இரவின் முன் நேரத்திற் படுக்கைக்குப் போய் அமைதியாய் நித்திரையுறவும், அதிகாலையில் எழுந்திருக்கவும், காலை நேரத்தில் வியாயாமமென்னும் தேஹப்பயிற்சியைச்செய்யவும், ஸ்நானம் பண்ணி, பகலிலும் இரவிலும் குறிப்பிட்ட நேரங்களில் போஜனம் செய்யவும், வேலை செய்யுமிடத்திற்கு நடந்துபோய் அங்கிருந்து நடந்து வரவும் ஒவ்வொருவரும் அப்யஸிக்கவேண்டும்.

எவர் இருமுகிறார்களோ அல்லது மூக்கைச் சிந்துகிறார்களோ அவர்களிடம் அச்சமயங்களில் அணுகக் கூடாது. வேலையிலிருந்து திரும்பி வந்ததும், பிணியாளிகளைப் பரிசித்து அல்லது அவர்களுக்கு உபசரித்து வந்ததும், சாப்பிடுவதற்கு முன்பும் கைகளை நன்றாகக் கழுவிக் கொள்ளவேண்டும். பொதுவாக ஜல தோஷத்தினாலும் ஜ்வரத்தினாலும் வருந்து

படுவிடம் அறைக்கூடாது. வாத கபஜ்வரம் ஒருவனுக்கு உண்டாயிருக்கையில், அவனுக்கு உபசாரம் செய்யும்போது மேலே ஒரு வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு, அவ்வேலை முடிந்தவுடன் அவ்வஸ்திரத்தை ஓரிடத்தில் பிரத்தியேகமா யெடுத்து வைத்து விடவும்.

உன் பாதங்கள் எப்பொழுதும் ஈரமில்லாமலும் உஷ்ணமாகவும் இருக்கும்படி பார்க்கவும். சிரஸ்ஸோ குளிர்ச்சியாயிருக்க வேணும். நீ வஸிக்குமிடத்தில் நல்ல வெளிச்சம் வேண்டும். உடையும், படுக்கையும் வெது வெதுப்பாயிருக்க வேண்டும். படுக்கை யறையின் ஜன்னல்களை மூடி வைக்கக் கூடாது.

அடியிற் கூறப்படும் முறைகளை அனுஸரித்து சரீரபலத்தை விருத்தி செய்துகொள்ளவும்:—

தினந்தோறும் இரவில் 8 அல்லது 9 மணி ஸாவகாசத்திற்குக் குறையாமல் நித்திரை செய்யவும்.

சரியான குறிப்பிட்ட நேரங்களில் இரண்டு அல்லது மூன்று வேளை அளவறிந்து போஜனம் செய்யவும். அவ்வுணவு மிகப் பரிசுத்தமாகவும், ஊசிப் பதன் கெடாததாகவும் இருத்தல் அவசியம். போதிய வளவு சுத்தமான தண்ணீரை அருந்தவும்.

சரியான நேரத்தில் தினந்தோறும் மலசோதனை செய்து வரவேண்டும். மல மூத்திர வேகங்களை அடக்கவே கூடாது.

ஒவ்வொரு நாளும் காலையில் அல்லது வேறு குறிப்பிட்ட ஸமயத்தில் நன்கு ஸ்நானம் செய்யவும்.

சிறிது ஸாதாரணமான உப்பை ஜலத்தில் கரைத்து, அந்த ஜலத்தைக்கொண்டு தொண்டை, நாசித்வாரங்கள் இவையெல்லாம் சுத்தமாகும்படி நன்கு வாய்க் கொப்புளிக்கவும். இதை தினத்திற்கு இரண்டு முறை செய்யலாம்.

பனியிலும், காற்றிலும் உடலைத் திறந்து கொள்ளவாவது, வெளியில் அதிக நேரம் திரிந்து சிரமப்படவாவது கூடாது.

சிறிது ஜலதோஷமோ தலைபாரமோ ஏற்பட்டிருப்பதாகத் தெரிந்தவுடனே, உனது வைத்தியரை அழைத்து, அதற்குத் தகுந்த பரிஹாரம் செய்து கொள்ளவும்; இந்த நிலைமையில் முற்குறிப்பிட்ட விதம் தொண்டை நாசிமுதலியவைகளை நன்றாய்க் கழுவிக்கொண்டு வரவேண்டும்.

பழைய மலத்தை வெளிப்படுத்துவதற்காக ஒரு முறை வஸ்திப்ரயோகமாவது (enema) சொற்பவிரேசனௌஷதத்தை யுட்கொள்ளவாவது வேண்டும். இரண்டையும் செய்வதும் சில ஸமயம் அதிக அனுகூலமானதே.

அப்போதைக்கப்போது சொற்ப அளவாக மிருதுவான அல்லது திரவமான உணவை சுடச்சுட உட்கொள்ளவும். போதியவளவு வெந்நீர், பால் இவற்றையும் பருகலாம்.

உடம்பு சிறிது அசௌக்கிய மாயிருந்த போதிலும், குடும்பத்திலுள்ளவர்களோடு ஸாத்தியமான வரையில் பழகாமல் விலகியிருக்கவேண்டும்.

எ. கே. ஔ.

---

## ANAEMIA.

### பாண்டு ரோகம்.

By. G. KANNUSAMI VAIDYAR.

நமது தேஹ போஷணைக்கும், ஜீவன் உடலில் நிலைத்திருப்பதற்கும் இன்றியமையாததாயிருப்பது இரத்தமேயாம். அவ்விரத்தத்திற்குக் கெடுதி யேற்படாவண்ணம் அதைக் காப்பது மிகவும் அவசியம். இரத்தம் தோஷமுள்ளதாக ஆவதற்கு அனந்த காரணங்கள் உண்டு. அக்காரணங்கள் [illegible] க்கியமான சில வற்றை இங்கு [illegible] விரும்புகிறேன். மல [illegible] சரிவர வெளியாகாமல் [illegible] ல் [illegible] கச் சிக்கிக் கொள்ளுதல்,



இரத்தம் கோளாறடைவதற்கு ஒரு காரணமாகும். இரண்டாவது உஷ்ணதேச வாஸிகள் காபி, தேயிலை, பிராந்தி முதலிய மது வகைகள் ஆக இப்பானங்களை அருந்துவதும் அபினி கஞ்ஜா முதலிய லாகிரி வஸ்துக்களைத் தின்பதும் இரத்தக் கோளாறுக்குக் காரணமாகும் என்று தெரியவருகிறது. குடலில் கிருமிமுதலியவை யுண்டாவதற்குக் காரணமாகக் கூடிய பல வகையான பழைய தின்பண்டங்களைக் கடைகளிலிருந்தும் இதரவிடங்களிலிருந்தும் வாங்கி புஜித்தலும் இரத்தக் கோளாறை யுண்டுபண்ணும். இரவில் நித்திரை யின்றி கண்விழித்திருத்தல், பகலில் அதிகமாகப் படுத்துறங்குதல், சிற்றின்பத்திற் பெரிதும் பற்றுகொள்ளுதல், அமிதமாய் தூமபானம் செய்தல், பிரதிதினமும் நன்றாக ஸ்நானம் செய்யாமலிருத்தல், சோம்பித்திரிதல், காலம் தவறி போஜனம் செய்தல், வெய்யிலில் விசேஷமாகத் திரிதல், துர்க்கந்தங்களையும் அசுத்தவாயுக்களையும் அடிக்கடி ச்வஸித்தல், கொசு முதலியவற்றால் அதிகமாகக் கடிக்கப்பட்டு அவற்றின் துர்நீர்கள் தேஹத்தினுள் செல்லுதல் ஆகிய இத்யாதி பல காரணங்களாலும் நமது இரத்தம் மிகக் கோளாறடைகின்றது. மேலும் ஜ்வரம், ஸந்நிபாத ஸம்பந்தமான கோளாறு, அஜீர்ணம், மலபந்தம், குன்மம், கிரஹணி, வாந்தி பேதி யென்னும் விஷூசி, வெட்டை யென்கிற பூயமேஹம், மூலம், அத்யுஷ்ணம் இவை முதலிய சில ரோகங்களும் இரத்தம் கோளாறடைந்து வெளிப்போவதற்குக் காரணங்களாவதுண்டு. பாண்டு மாத்திரமல்ல, காமாலை, சோகை இவ்விகாரங்களும் காணும்.

தவிரவும், ஸ்த்ரீகளுக்கு மாதவிடாய் கிரமம் தவறி யுண்டானாலும், அதனால் ஸோதக பாண்டு வென்கிற வியாதி காண்பதுண்டு. இதனால் தேஹம் வீங்குவதும், பிறகு அகால மரணம் நேரிடுவதும் உண்டு. இதில் கல்லீரல் வீங்கி, பித்தம் அதிகரிக்க, வறட்காமாலை முதலிய உபத்திரவங்களும் காணலாம்.

இத்தகைய வியாதி யுண்டாகாமல் முதலிலேயே தடுப்பதற்கு முயற்சிப்பது உத்தமம். அப்படிக்கின்றி, வியாதி நேரிட்டு விட்டால், இரத்தத்தை விருத்தி செய்யவும், தேஹத்தை பலப்படுத்தவும் தகுந்த உபாயம் செய்ய வேண்டும். இதற்கு ஏற்றதும் எனது அனுபவத்தில் உபயோக முள்ளதென்று தெரிந்து கொண்டிருப்பதுமான ஒரு முறையை இதனடியில் நான் குறிப்பிடுகிறேன். இதை நம்பிக்கையோடு உபயோகிக்கு மாறு நமது வைத்திய நண்பர்களை நான் வேண்டிக் கொள்கிறேன். இந்த முறை குழந்தை முதல் வ்ருத்தர்வரையில் அனைவருக்கும் உபயோகமானது. இதையுபயோகிக்கையில் யாதொரு பத்தியமுமில்லை.

ஔஷதமுறை: — இரும்புக்கிட்டம் கால் பலம் எடுக்கவும். இதைப் பழுக்கக் காய்ச்சிக் காய்ச்சி, பசுவின் மூத்திரத்தில் பத்துத் தடவைத் தோய்த்தெடுக்கவும். வெட்டுக்காந்தம் கால் பலமெடுத்து, அதையும் கிட்டத்தைப் போலவே காய்ச்சித் தோய்க்கவும். பிறகு சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல் இவை வகைக்கு ½ பலம். இவைகளை ஒரு கல்வத்தில் பொடி செய்து, வேண்டுமளவு கையாந்தகரைச் சாறு விட்டு அரைத்து, கல்வத்துடனே வெயிலில் உலர்த்தவும். மறுபடியும் அதே பச்சிலைச்சாற்றால் ஆட்டி, வெயிலில் உலர்த்திக் கொள்ளவும். இப்படி பத்துத் தடவை இதை அரைத்து எடுக்கவும். தினத்திற்கு ஒரு தடவை வீதம் இதைப் பத்துநாட்களில் அரைத்து முடிக்கவேண்டும். பிறகு இதை யெடுத்து, ஒரு குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

உபயோகிக்கும் வகை:—மேற்கூறிய ஔஷ

தத்தை வேளைக்கு ஒரு விராகனெடை வீதம் தினந்தோறும் காலையில் உட்கொள்ளலாம். இதற்கு அநுபானமாகக் காய்ச்சிய பசுவின் பாலையாவது வெள்ளாட்டுப் பாலையாவது பருகலாம். அவை கிடைக்காவிடில் ஜலத்தையாவது சிறிது பானம் செய்யலாம்.

பலன்:—இந்த ஔஷதம் மேலே சொன்ன ரோகத்தை (பாண்டுவை) அதற்குக் காரணமாயிருந்த மற்றக் கோளாறுகளோடு நிவாரணம் செய்யவல்லது. இரத்தத்தை விருத்தி செய்வதற்கும் இது நல்ல மருந்து. இதன் அருமையான பிரயோஜனம், அவரவர் பிணியாளிகளுக்கு இதைச் சரிவரப் பிரயோகித்துப் பார்த்தால் நன்கு அநுபவத்தில் தெரியவரும்.

---

## FRUITS THEIR FOOD VALUE AND USE IN DISEASE.

### கனிகள் உணவாகவும் வியாதிநிவாரணமாகவும் உபயோகமாதல்.

BY W. KRISHNASWAMI ROW,
*Sub-Asst. Surgeon (Retired)*

உடலமைப்பு ரீதியாகக் கவனித்தால், மனிதன் சாகவர்க்கங்களையும் தானிய வகைகளையுமே தின்றுப் பிழைப்பவன் என்று விளங்குகிறது; அவனுக்குக் கனிகள் அனைத்தினும் மேலான உணவென்பதும் கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது. கனிவர்க்கம் எண்ணிக்கையில் பலவகைப்பட்டதாகவும், உபயோகத்தில் வெகு சிலாக்கியமானதாகவும் இருக்கிறது. கிரமமாக, அப்யாஸத்தினால் மனிதன் ஒருவாறு ஸர்வ பக்ஷகனாகத் தன்னைச்செய்து கொண்டான்; அவன் தின்கிற பதார்த்தங்களில், பல, ஜீவாதாரமான தாத்வம்சங்களைப் போஷிப்பதற்கு அவசியமல்லாதவைகளாவும் இருக்கின்றன.

பழவர்க்கங்களோ இயற்கையில் மனிதனுடைய தேஹபோஷணைக்கு ஏற்றவைகளாய் ஏற்பட்டிருக்கின்றன. வெகு உதாரஸ்வபாவமுள்ள கடவுள் கனிவர்க்கங்களை அளவற்ற வகைகளாகப் படைத்திருப்பது பிரத்தியக்ஷம். உதாரணமாக ஆபுள் என்கிற இலந்தையில் மாத்திரம் சுமார் 1,100 வகைகளுக்கு மேற்பட்ட இனங்கள் உண்டு. மணம், சுவை இவற்றின் மேன்மையை மட்டும் கவனித்தாற்கூட, வேறு எந்த வகையான உணவும், கனிகளுக்குச் சமானமாகமாட்டாது. மற்றொரு முக்கியமான விஷயம் இதில் கவனிக்கக்கூடியதுண்டு; அதாவது: வியாதி முதலிய தீமைகளை விளைவிக்கும் அசுத்தங்களுடைய கலப்பில்லாமல் மிகப் பரிசுத்தமான நிலைமையில் நமக்குக் கிடைக்கக் கூடிய சிறந்த உணவு, கனிகளைக் காட்டிலும் வேறெதுவும் இல்லையென்பதேயாம். நன்கு பழுத்த கமலாக் கிச்சிலியென்ன, மாதுளையென்ன, சீமையிலந்தையென்ன, அத்திப்பழமென்ன, கொடிமுந்திரிகையென்ன, ஒட்டுமாவென்ன இஜ்ஜாதிகளில் ஒவ்வொரு பழமும் உள்ளே அழுக்காவது நுண்ணியிராவது புகமுடியாமல் இயற்கையிலேயே தகுந்த ஆவரணங்களால் போதிய சூடான நிலைமையில் மூடப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை நாம் சமைக்கவோ, வேறுவிதமாகப் பக்குவம் செய்யவோ அவசியமில்லை. கனிந்த பழத்தில் மிகப் பரிசுத்தமான நிலைமையிலுள்ள உணவும் தண்ணீரும் அடங்கியிருக்கின்றன; அவை தேஹாரோக்கியத்திற்கு ஏற்றவையாகவும், சிலாக்கியமானவையாகவும் இருக்கின்றன.

இப்பொழுது பழங்கள் பல நாட்கள் வரையில் கெட்டுப் போகாமலிருக்க அவற்றைச் செயற்கையாகவும் சேகரித்து வைக்கத் தகுந்த முறைகள் ஏராளமாகக் கையாளப்பட்டுவருகின்றன. மேலும் ஓரிடத்திலிருந்து மற்றொரு



தேசத்திற்கு அவற்றை அனுப்புவதற்கான ஸாதநங்களும் அநேகம் இக்காலத்தில் ஏற்பட்டிருக்கின்றன. ஆக இவ்விருவித காரணங்களாலும் செடிகள் பழுக்காத காலங்களிலும், பழங்கள் உற்பத்தியாகாத விடங்களிலும் முறையே அவைகள் ஸாதாரணமாய் கிடைக்கக் கூடிய ஸௌகர்யங்கள் இக்காலத்தில் உண்டு. மாரிகாலத்திலிருந்து, ஹேமந்த சிசிர ருதுக்கள் முடிய ஆபுல் என்கிற சீமையிலந்தை கனிப்பதற்கு ஏற்றகாலம். அக்காலங்களில் இக்கனியை ஏராளமாய் அனைவரும் உபயோகிக்கலாம். கமலாக்கிச்சிலி, வாழை, எலுமிச்சை இவை வருஷ முழுவதும் உற்பத்தியாகக் கூடியன.

வஸந்த-க்ரீஷ்ம ருதுக்களில் கனிவர்க்கங்கள் வெகு அதிகமாக விளைகின்றன; இவ்விதம் கனிகள் ஏராளமாய் கோடையில் உற்பத்தியாவதைக் கவனித்தால், காலவியல்பானது நமது உணவில் பழங்களை விசேஷமாகச் சேர்த்து மற்றக் காலங்களைக் காட்டிலும் இந்த ருதுக்களில் உபயோகிக்கவேண்டுமென்பதை அறிவிக்கின்றது. பொது ஜனங்களால் ஸாதாரணமாய் கனிவர்க்கம் உணவுப் பொருட்களில் மேன்மையுற்றதென்று எண்ணப்படுவதில்லை. ஆகையினால் தான், பிரதான உணவுகளோடு உபயோகிக்காவிட்டாலும், இடை வேளைகளில் பலாஹாரங்களிலாவது இவற்றைப் போதுமாறு ஜனங்கள் உண்பதில்லை. உஷ்ணகாலங்களில், பழங்களை அதிகமாகத் தின்றால், குடல் ஸம்பந்தமான கோளாறுகள் உண்டாவதாகச் சிலர் அறியாமையால் அபிப்பிராயப்படுகிறார்கள். விஷயம் அதல்ல; ஒரு ஸமயத்தில் ஒருவகையான பழத்தைப் போதுமாறுவுண்பது நலம். ஆனால் பலர், கிடைத்த உணவுகளையெல்லாம் வியவஸ்தையில்லாமல் தின்றுவிடுகிறார்கள்; இரைப்பையை வெவ்வேறு உணவுகளால் நிரப்பிவிட்டு, அதன் மேல் ஒன்று அல்லது அனேகவிதமான பழங்களையும், தின்பார்கள். இவ்வமித போஜநம் வியாதியைத் தூண்டுகிறது. ஆகவே, ஏதேனும் வயிற்றுக் கோளாறு நேரிட்டால், அதற்குப் பழங்கள் காரணமென்று நினைத்துவிடுவது சரியல்ல.

கனிகளே இயற்கையுணவு:—பழங்களைக் காட்டிலும் இயற்கையிற் சிறந்த ஆஹாரம் வேறில்லை. பழங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும்; அவற்றைக் காலத்தில் உபயோகிக்கவேண்டும்; எல்லாவிதமான கனிகளையும் தோன்றியவாறு கலந்து ஒருமிக்கப் புஜித்து விடுவதும் யுக்தமல்ல. பகுத்தறிவுடன் உசிதமாக உபயோகித்தால் கனிகள் நன்மையை மிகுதியாயுண்டுபண்ணுமேயன்றி, எவ்விதத்திலும் தீமையளிக்கமாட்டா. கனிகளின் இரஸாயனப் பாகுபாட்டைப் பரிசோதித்துப் பார்க்குமளவில், அவை உணவாக உபயோகிப்பதற்கான உயர்ந்த குணமுள்ளவையென்பதையறியலாம். பழங்களில் சுத்தமான தண்ணீர் தாராளமாய் அடங்கியிருப்பது அநேகருக்குத் தெரிந்ததே. ஆகையினால் கனிகள் தேஹபோஷணையை உடலெங்கும் ஒரு சீராகப் பரப்பும் உயர்ந்த பொருளென்றுணரலாம். ஏதோ சிலவற்றைத் தவிர பெரும்பான்மையான பழவர்க்கத்தில் தண்ணீர் மிகுதியாயிருப்பதும், அத்தண்ணீர் தேஹபோஷணைக்குரிய சிறந்த திரவமென்பதும் சாஸ்திரஞ்ஞர் ஒப்புக் கொண்டுள்ள விஷயமே. பழங்களில் தண்ணீரே அதிகமிருப்பதால், அவை தேஹபோஷணைக்குப் போதிய ஸத்துள்ள பதார்த்தங்களல்லவென்று சிலர் கூறுவது விஷயமுணராதவர்களின் கூற்று. பால் முக்கியமான உணவுப்பொருளாகக் கருதப்படுகிறது; ஜ்வரம் முதலிய சில வியாதிகளில் குழந்தைகளைப்போலவே பெரியவர்களும் பாலையே பத்தியமான முக்கிய உணவாக எங்கும் உபயோகிக்கிறார்கள். சீமையிலந்தை, கமலாக்கிச்சிலி, கொடி முந்திரி, மாதுளை முதலிய கனிகளைக் காட்டிலும் பாலில் அதிக நீர் அடங்கியிருக்கிறது. சரீரத்தைப் போஷிப்பதிலும், உடற்சூட்டை இயற்கை நிலைமையில் வைப்பதிலும்

பால் எவ்வளவு உபயோகப்படுகிறதோ, அதில் எவ்வளவு இரஸாயனாம்சங்கள் அடங்கியிருக்கின்றனவோ அவ்வளவும் இக்கனிகளில் அடங்கியிருப்பதோடு, அவ்வளவு உபயோகமும் கனிகளால் உண்டாகின்றதென்பதில் ஸந்தேஹமில்லை. ஒரு கோழி முட்டையில் எவ்வளவு ஓஜோ தாது (Albumen) உண்டோ, அவ்வளவு ஓஜஸ் ஒரு பவுண்டு நிறையுள்ள கொடிமுந்திரிப்பழத்தில் அடங்கியிருக்கிறது. வேறு சில கனிகளில் இந்த அளவினும் அதிகமாகவே ஓஜோதாது இருப்பதாகவும் இரஸாயன பரிசோதகர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகையால், நாம் கூறுவதென்னவென்றால், எப்பொழுதுமே கனிவர்க்கங்களையே முக்கிய உணவாக உபயோகிக்க முடியாவிட்டாலும், இடை வேளைப் பலஹாரங்களிலாவது பழங்களையே மிகுதியாகப் புசிப்பதும், பால் முதலிய திரவாஹாரங்களைப் பத்தியமாக புசிக்கவேண்டிய பிணியாளிகள் அவ்வித திரவாஹாரங்களுக்குப் பதிலாகக் கனிகளையே பத்தியவுணவாக எடுத்துக் கொள்வதும் உத்தமமாயிருக்குமென்பதேயாம்.

பழங்களை இன்னும் பரிசோதித்துப் பார்த்ததில், பிராணி ஸம்பந்தமான அமலங்களும் (organic acids) கனிஜ லவணங்கள், சர்க்கரை, தைலச்சத்துக்கள் இவைகளும் மிகுதியாக அவற்றில் அடங்கியிருப்பதாகத் தெரியவருகிறது. வஸ்து தத்துவங்களைக் கவனிக்குங்கால் நமது தேஹதாதுக்கள் தினந்தோறும் இயற்கையில் அபேக்ஷிக்கும் வஸ்துவாம்சங்களைக் கனிகள் அளிக்கக் கூடியனவாயிருக்கின்றனவென்று அறியப்படுகிறது. பழங்களிலுள்ள அம்லச்சத்துகளும், உப்புவகைகளும் வெகு சிலாக்கியமானவை; தேஹ போஷணையைத் திருப்திகரமாகச் செய்பவை; எக்கெடுதியையும் செய்யாதவை; "இரத்தசுத்தி செய்வதில் மிகச் சிறந்தவை;" பொதுவாகக் கூறுமிடத்து, மனிதனுக்குக் கனிகளே கலப்பில்லாத அரிய உணவுகளென மொழியவேண்டும்.

"ஸந்நிபாதஜ்வர ஸம்பந்தமான கிருமிகள் அடங்கிய ஒரு கோப்பை ஜலத்தில் எலுமிச்சம்பழரஸத்தை இரண்டு தேக்கரண்டியளவு சேர்க்க, அது அந்த ஜலத்திலுள்ள கிருமிகளின் சக்தியை அழிக்கப் போதுமானது" என்று டாக்டர் பெர்கூஸன் என்பவர் 1902 இல் ரிபோர்டு செய்திருக்கிறார். இந்த தத்துவம் வேறு பல நுண்ணுயிர் பரிசோதகர்களால் பிறகு அநேகஸமயம் பரிசோதிக்கப்பட்டு வாஸ்தவம் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் எலுமிச்சம்பழரஸத்தில் அடங்கிய அம்லச்சத்தானது (ஸிட்ரிக் அம்லம்-citric acid) விஷக்கிருமிகளை அழிக்குமென்றும், அக்கிருமிகளுடைய தொகையில் இந்த அம்லம் 100-க்கு $1\frac{1}{2}$ பங்கு வீதம் சேர்ந்தால் அரைமணி நேரத்தில் அச்செயலைச் செய்யப் போதுமானது என்றும் ஜபான் தேசத்துப் பிரபல கிருமிசாஸ்திர வல்லோரான கிடா ஸாடோ என்பவரும், ஜர்மன் தேசத்தவரான வான் எர்மெங்கன் என்பவரும் பரிசோதனைகளின் மூலமாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அதே அளவில் இந்த அம்லம் ஸந்நிபாத தோஷக்கிருமியை அழிப்பது உண்மையென்றாலும், அதற்கு நெடுநேரம் செல்லுகிறது. சுத்தமான எலுமிச்சம்பழச்சாறு எல்லா விதமான விஷக்கிருமிகளையும் அழிக்கவல்லதென்று பல சாஸ்திரஞ்ஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள விஷயமே. கொடிமுந்திரிகைப் பழச்சாறு கிருமிஹரமான வேலையில் மிகப் பெயர் போன்ற வஸ்துவென்று ஸமீப பரிசோதனைகளிலிருந்து தெரியவருகிறது. ஸந்நிபாத ஜ்வரக்கிருமிகளையும், மற்றும் குடலில் சேருகிற கிருமிகளையும் அழிப்பதற்கு இப்பழத்தின் இரஸம் சிறந்த ஔஷதமாகவும், அதே ஸமயத்தில் உத்க்ருஷ்டமான உணவாகவும் உபயோகமாகிறது. தேஹத்தைப் போஷிக்கும் சிறந்த வஸ்துக் கனிகளில் கொடிமுந்திரியும் ஒன்று. ஜ்வரங்களில் பிணியாளிக்கு இந்தக் கனியின் சாற்றை அல்லது கனியையேயாவது கொடுப்பதால் நாவறட்சியும், தேஹதாபமும், வாயின் அரோசகமும், மலபந்தமும், குடல் வெக்காடும் தணிவடைவதோடு, ஒருவாறு உணவாகவும் இது உதவுகிறது.

---



## GENERAL CARE OF INFANTS.

### சிசுக்களைப் பரிபாலிக்கும் பொதுமுறை.

By Dr. A. MANICKA MUDALIAR.
*Medical Practitioner.*

நித்திரை:—புதிதாகப் பிறந்த ஒரு சிசு, ஆரோக்கிய நிலைமையிலிருந்தால், முதலில் சில வாரங்கள் வரையில், தினத்திற்கு ஆறில் ஐந்து பங்கு நேரமும் தூங்கிக் கொண்டிருக்கும். சுத்தமாகவும் ஸௌகர்யமாகவும் வைத்திருந்தால், ஒவ்வொரு உணவூட்டும் ஸமயத்திலும் சிறிது நித்திரை தெளிந்து, உணவூட்டியவுடனே தூங்கிவிடும். ஸௌகர்யமாக வைத்திருந்தோமானால் இரவில் அது அதிக தொந்தரவளிக்காது.

குழந்தையைக் குளிப்பாட்டிய பிறகு தொட்டிலில் விட்டு, அது தனக்குத் தானே அமைதியாக நித்திரையுறும்படி பழக்க வேண்டும். அதை மடியிலிட்டுத் தாலாட்டியோ, இங்குமங்குமாய் எடுத்து நடமாடிக் கொண்டோ, தொட்டிலில் விட்டு வீசியாட்டியோ தூங்குவதற்குப் பழக்குவது நல்ல பழக்கமல்ல. இப்பழக்கங்களெல்லாம் குழந்தை அதிக தொந்தரவுகளைப் பிறகு உண்டுபண்ணுவதற்கான வழிகளையுண்டுபண்ணுவதாகும். ஆரம்பத்திலிருந்தே சரியானவழியில் சிசுவைப் பழக்கவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால், குழந்தை அவசியமல்லாதனவற்றைக் கோரி, உங்களுக்கு அடிக்கடியும் தொந்தரவளிக்க வெகு சீக்கிரத்திற் கற்றுக்கொள்ளும். குழந்தை தூங்கும்போது அதன் முகத்தை மூடிவிடக்கூடாது. அது ச்வஸிப்பதற்குச் சுத்தமான வாயு விசேஷமாகத் தேவையென்பதை நாம் மறந்துவிடலாகாது. குழந்தையிருக்குமிடத்தில் எப்பொழுதுமே நல்ல காற்றோட்டமிருக்கும்படியாகக் கவனித்துவர வேண்டும். பெரியவர்கள் தூங்குமிடத்தில் அவர்களுக்குப் பக்கத்தில் சிசுவை ஒரு போதும் தூங்கவிடக்கூடாது. இவ்வேற்பாடானது குழந்தை வன்மையோடு வளர்வதைத் தடைபண்ணி, அதைப்பெரும்பாலும் நருங்கலாகச் செய்கிறது.

குழந்தைகள் நிமிர்ந்து (முதுகுப் பக்கமாக)ப் படுத்துத் தூங்கும்படி எப்பொழுதுமே பார்த்திருக்கக் கூடாது; ஏனென்றால், அப்பக்கத்தில் காலக்கிரமத்தில் அழுக்குகள் சேர்ந்து, சர்மமும் அழற்சியடைந்து சில சர்மரோகங்கள் கிளம்புவதற்கு அது ஹேதுவாகும். ஆகவே அப்போதைக்கப்போது குழந்தையை ஒரு பாரிசத்திலிருந்து மற்றொரு பாரிசமாகத் திருப்பித் திருப்பி விடுவது யுக்தம். போதிய காற்று உலாவுவதற்கேற்ற ஸௌகர்யமுள்ளதும், நிச்சப்தமானதும், இருட்டாவுமுள்ள அறையில் நித்திரையுறுவதற்குக் குழந்தையை ஆதிமுதலே பழக்கவேண்டும். குழந்தை தூங்குகிறவிடத்தில் எவ்விதக் கூச்சலுமில்லாமற் பார்த்து வரவேண்டும். ஸாதாரணமாயெப்பொழுதும், முக்கியமாகத் தூங்கும்போது வாயை மூடிக்கொண்டு ச்வாஸம் விடுவதற்கும் கற்பிக்க வேண்டும்.

உடை:—உடைகள் அல்லது போர்வைகள் குழந்தைக்கு அதிகமாக அல்லது அதிக கனமாக விருந்தால், அது குழந்தையின் வளர்ச்சியை ஒடுக்குவதோடு அதை பலஹீனமாகவும் செய்யும். முக்கியமாகக் கோடை காலத்தில் அவ்வித உடை அல்லது போர்வை கூடாது. ஆனால் குளிர் தாக்காதபடி தகுந்தவாறு குழந்தைக்கு ஏதேனும் உடையுடுத்த வேண்டும். குழந்தையை வெகு ஸாதாரணமான சொற்ப உடையோடு வீட்டுக்கு வெளிப்புறங்களில் (திறந்த வெளிகளில்) அதிக நேரம் வைத்துக்கொண்டு வழக்கம் செய்ய வேண்டும்; இப்படிச் செய்வதால் சால தேசாதிகளுக்கேற்றபடி மாறுபாட்டையும் சீதோஷ்ண நிலைமைகளைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அப்யஸிக்கப்பட்டுப் போய், ஜலதோஷம் முதலிய கோளாறுகள் குழந்தைக்கு எளிதில் ஏற்படமாட்டாது. குழந்தையின் கைகால்களையும், உடம்பையும் நன்கு போர்த்து வைப்பது அவசியம்.

ஆரோக்கியமுள்ள அவயவங்களின் மூலமாய் இரத்தம் தேஹத்திற் பரவிவருவதற் கேற்ற வாறு பொதுவாக தேஹாரோக்கியமும் அதிக சீர்மையடையும். தேஹம் குளிர்ந்திருப்பதை விட கதகதப்பான நிலைமையிலிருக்கும்போது, அவ்வுஷ்ண நிலைமையில் தேஹமெங்கும் இரத்த வோட்டம் அதிக விரைவாக நடைபெறும். ஆகவே குழந்தையின் உடலையும், கைகால்களையும் பொதுவாக எப்பொழுதுமே தகுந்த (கனமில்லாத) உடையால் போர்த்திருக்கவேண்டும். அதிலும் முக்கியமாகக் குளிர் காலத்தில் இது வெகு அவசியமானது. அப்போதைக்கப்போது ஏற்படும் ஆடம்பரமான வேஷங்களையெல்லாம் போட்டு குழந்தையை வீணுக்குக் கஷ்டப்படுத்த வேண்டாம்.

வியாயாமம்:—இளங்குழந்தை தனது கைகளையும் கால்களையும் வெகு தாராளமாய் ஆட்டியசைத்து விளையாடுவதற்குத் தகுந்த வஸதியைக் கொடுப்பது வெகு இரம்யமும் முக்கியமுமான அம்சம். குழந்தைக்கு ஸ்நானம் செய்து வைப்பதற்கு எல்லாம் தயாராயிருக்கும்போது தரையில் ஒரு சுத்தமான துப்பட்டியை மடித்துப் போட்டு (திறந்த வெளியில் தரையில் போடுவது உத்தமம்), அதன் மீது கை கால்களை உதைத்துக்கொண்டு விளையாடும்படி விடவும். ஆறுமாதத்திற்குக் குறைந்த வயதுள்ள குழந்தைகளிடம் அதிக நேரம் நாம் அருகிலேயே இருந்துகொண்டு விளையாடச் செய்வது யுக்தமல்ல. குழந்தை பெரும்பான்மையான நேரமும் தனக்குத் தானே விளையாடிக்கொள்வதுதான் நல்லது. ஆனால் அதற்கு எவ்விதமான கஷ்டமும் நேரிடா வண்ணம் நாம் எப்பொழுதும் கண்காணித்து வரவேண்டும். குழந்தையின் உள்ளங்கால்களிலும் கழுத்திலும் அக்குள்களிலும் கூச்சங்கொடுத்து குழந்தையை விழிக்கச் செய்வதும் விளையாடச் செய்வதும் சரியல்ல.

குளிப்பாட்டல்:—குழந்தைக்கு தினந்தோறும ஸ்நானம் செய்து வைத்துப் பழக்க வேண்டும் ஜலத்தை அதிக சூடாகக் குழந்தையின் மேல் ஊற்றக்கூடாது. மூன்று முதல் ஐந்து நிமிஷங்களுக்குள்ளாக ஸ்நானம் செய்து முடித்து விடவேண்டும். அதிக உஷ்ணமான ஸமயங்களில் மாத்திரம் கொஞ்சம் அதிக நேரம் ஸ்நானம் செய்து வைக்கலாம். சிறிதளவு எண்ணெயை (நல்லெண்ணெய் அல்லது தேங்கா யெண்ணெய்) உடம்பு முடியவும் தடவி குளிப்பாட்டலாம். குளிப்பாட்டி முடிந்தவுடனே தாமதமின்றி நன்றாக உடம்பையெல்லாம் துடைத்து விடவேண்டும். துடைப்பதற்குச் சுத்தமும் மிருதுவுமான இரண்டு துண்டுகளை வைத்துக் கொள்ள வேண்டும். முகத்தையும் தலையையும் துடைப்பதற்கு ஒரு துண்டையும், மற்ற உடம்பைத் துடைப்பதற்கு மற்றொரு துண்டையும் உபயோகிக்க வேண்டும். காரமில்லாத அதிக மிருதுவான நலங்குப்பொடி அல்லது நல்ல சவர்க்காரம் இவற்றில் ஏதேனு மொன்றைத் தேஹத்தைச் சுத்தம்செய்வதற்கு உபயோகிக்லாம். இதைத்தேய்க்கும்போது குழந்தையின் உடம்பை அழுத்தித் தேய்க்கக்கூடாது. குழந்தையைக் குளிப்பாட்ட உபயோகிக்கும் ஜலம் சவர் அல்லது உப்பான கிணற்று நீராயிருக்கக்கூடாது. அவ்வித ஜலம் உடம்பைச் சுத்தம் செய்யாமற் போவதோடு, சில சர்மரோகங்களை யுண்டுபண்ணவும் ஆஸ்பதமாகும். உடம்பில் எந்தவிடத்திலும் நலங்குப்பொடி அல்லது சவர்க்காரம் சிறிதும் தங்கியிராமல் சர்மம்சுத்தமாயிருக்கும்படி. தாராளமாகசுத்தமான வெந்நீர் ஊற்றிக்குளிப்பாட்டி விடவும். உடம்பைத் துடைக்கும்போதும், எந்த விடத்திலும் சிறிதும் ஈரம் தங்கிவிடாமல் கவனித்துத் துடைக்கவும். காதுகளின் மடிப்புகள், நாசியின் முன்த்வாரம், கழுத்து, அக்குள்கள், துடையிடுக்குகள், கைகால் விரல்களின் இடுக்குகள். முழங்கை முழங்கால்களின் மடிப்புகள் இவற்றிலெல்லாம்கவனித்துத்துடைத்துஏதேனும் நல்ல கந்தப்பொடியை அவ்வவயவங்களில் தூவுவது நலம்.



குழந்தையின் வாய்:--குழந்தையின் வாயை அப்போதைக் கப்போது கவனித்து வர வேண்டும். ஒரு துளி வெங்காரப்பொடியை ஒரு கோப்பை வெந்நீரில் சேர்த்துக் கரைத்து அந்த ஜலத்தைக் கொண்டு குழந்தையின் வாயை தினத்திற்கு இரண்டு முறை சுத்தம் செய்யலாம். கைவிரலில் ஒரு நல்ல துணியை மடித்துக் கொண்டு அதை அந்த வெங்காரத்தண்ணீரில் தோய்த்து அவ்விரலை வாயினுள் விட்டு ஈறுகள் வாயின் மேற் பாகம் நாக்கு இவைகளைத் துடைக்கவும்: ஆனால் நீரை வாயில் ஊற்றிச்சுத்தம் செய்யக்கூடாது. வாயில் சிறிது ஊற்றும்போதே குழந்தை அதை விழுங்கிவிடும். ஆகையால் விரலில் துணியைச் சுற்றிக்கொண்டு சுத்தம் செய்வது சரியான உபாயமாகும்.

குழந்தையின் படுக்கைத் துண்டுகள்:—குழந்தைக்குக் கீழும் மேலே போர்வைக்கும் உபயோகிக்கப்படும் துண்டுகள் மிருதுவாகவும், வெகு சுத்தமாகவும் இருக்கவேண்டும் அவை மலஜலாதிகளால் ஈரமாகவோ அசுத்தமாகவோ ஆய்விட்டால் உடனே தாமதமின்றி அவற்றை விலக்கிப்போடவேண்டும். அவற்றையெடுத்தவுடனே குளிர்ந்த ஜலமுள்ள ஒரு தொட்டியில் போட்டு, மூடி விடவும். அவைகளைச் சுத்தம் செய்யும்போது முதலில் தாராளமாகக் குளிர்ந்த ஜலம் விட்டு அலசி மல ஜலாதிகளை நன்றாகக் கழுவித்தள்ளி விடவும். பிறகு சவர்க்காரம் போட்டு அவற்றைத் தோய்த்து பத்துப் பதினைந்து நிமிஷம் வரையில் கொதிக்கும் ஜலத்தில் அழுத்தி வைத்து அப்பால் எடுத்து சுத்த ஜலத்திற் பிழிந்து வெயிலில் உலர்த்தி யெடுக்கவும்.

முத்தமிடல்:—குழந்தையை அடிக்கடியும் கண்டபேரும் முத்தமிடுவது உசிதமல்ல. அநேகம் பேருடைய உதடுகளிலும் வாயிலும் பலவிதமான தோஷங்கள் இருக்கும். அத்தோஷங்கள் நமது கண்ணுக்குச் சாதாரணமாய் தென்படமாட்டா. முக்கியமாய் வியாதிக்குக் காரணமான நுண்ணுயிர்கள் (கண்ணுக்குத் தென்படாத ஸூக்ஷ்மக்கிருமிகள்) அநேகமாய் உதடுகளிலும் வாயிலும் பரவியிருக்கும். முத்தமிடும் போது அவை குழந்தையின் மீது ஸம்பந்தித்து ஒவ்வொருவிதமான சர்மவியாதியையோ, வேறு ஏதேனும் கோளாறையோ உண்டுபண்ணும். ஆகையால் ஸாத்தியமானவரையில் குழந்தைக்குப் பலர் முத்தங்கொடுப்பதைத் தடுப்பது நலம்.

## INTESTINAL WORMS.

## குடலிலுண்டாகும் கிருமிகள்.

By G. KANNUSAMI VAIDYAR.

ஸாதாரணமாய் மனிதருக்கு வயிற்றில் கிருமிகள் உற்பத்தியாவதும், அவற்றால் பல வேறு உபத்திரவங்கள் ஜனிப்பதும் பலருக்குத்தெரிந்த விஷயம். கிருமியில் அநேக வகையுண்டு. ஆகிலும் அவற்றுள் வெகு முக்கியமானவை மூன்று. இவைகளில் இரண்டு ஜாதி கிருமிகளின் உடல் குழல் போன்றிருக்கும்; மற்றொன்று கெட்டியாகவும் இருக்கும். நாகப பூச்சி, பெரும் பூநாகப்பூச்சி என்கிற வேறு இரண்டு வகைக் கிருமிகள் உருண்டு, நீண்டு பூநாகம் போலவே உருவத்தில் தோன்றும். குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் உணவின் தோஷத்தினால் இக்கிருமிகள் அவர்களின் குடலில் விருத்தியாகின்றன இக்கிருமிகள் சிறு குடலுக்குள்ளே அதிகமாய் சேரும். இதன் நீளம் 6 முதல் 9-அங்குலமிருக்கும். ஆண்பூச்சிகளைவிடப் பெண்பூச்சிகள் அளவிற் பெரிது. இது சில ஸமயம் மேலுக் கேறி அன்னாசயத்திலும், கீழிறங்கி பெருங்குடலிலும் செல்லுவதுண்டு. அன்னாசயத்தினுள் (ஆமாசயம்) சென்றால் வாந்தி அதிகமாயுண்டாகும். பெருங்குடலிற் சென்றால் அங்கு அதிகமாய் நிலைத்திருக்க முடியாமல் மலத்தோடு வெளியாவதுண்டு. சிலருக்கு இது நூற்றுக்கணக்காக உற்பத்தியாகும்.

திமிர்ப்பூச்சி, கீரிப்பூச்சி, எரிப்பூச்சி என்று வேறு மூன்று வகைக் கிருமிகளும் உண்டு. இவை வெகுவாக குதத்திலும், பெருங்குடல் வளையிலும் அப்பிக்கொண்டிருப்பது வழக்கம். ஸாதாரணமாய் இவை கால் அங்குல நீளமிருக்கும். பெண் பூச்சிகள் இன்னும் சற்று நீளமாயிருக்கும். இவை உருவத்திற் சிறியவையாயிருந்தும் குதத்தில் சேர்ந்து ஸஹிக்க முடியாத தினவையும் சில ஸமயம் எரிச்சலையும் உண்டாக்கும். இவை அதிகமாகச் சேரும்போது முக்கலும் அதிகமாகக் காணும்.

தட்டைக்கிருமி யென்று மற்றொரு ஜாதிக் கிருமியுண்டு. இது நாடாவைப் போன்றதாயிருக்கும். (நாடாப் பூச்சி யென்றும் ஆகவே இதற்கு ஒரு பெயருண்டு.) அநேகம் துண்டுகள் ஒன்று சேர்ந்து இதன் உடல் அமைகிறது. இது ஏகமாய் ஒட்டிக்கொண்டிருக்கையில் நீளத்தில் ஐந்தாறு கஜம் அளவாகவும் இருப்பதுண்டு. இவை சிறு குடலில் ஸஞ்சரித்து வரும். தலை சிறுத்தும் உருவத்தில் தட்டையாகவும் இருக்கும். மத்தியில் இதற்குச் சிறிய மூளை போன்றதாயும் ஒன்று காணப்படும். இது குடலில் இருப்பது நமக்குத் தெரியாமலே யிருக்கும். எப்பொழுதாவது இதன் சிறிய துண்டு ஏதேனும் வெளிப்படுமானால் அப்பொழுது தான் நமது வயிற்றில் இவ்வித கிருமி யுற்பத்தியா யிருப்பதாக நாம் தெரிந்து கொள்வோம். இக்கிருமி யுடையவர்கள் ஆஹாரம் வேண்டு மென்று அடிக்கடியும் அலைந்துத் தவிப்பார்கள். இவர்களுடைய தேஹம் அதிக பலஹீனப்படும். ஆமாசயத்தில் வேதனை யெடுக்கும். தேஹம் ஒடுங்கிவரும். பொதுவாய் வயிற்றில் கிருமிகள் இருந்தால், வயிற்றில் வேதனை, வயிற்று வலி, வயிறு விம்மிப் போதல், மூக்கைச் சொறிந்து கொள்ளுதல், மலக்குடலிலும் குதத்திலும் அதிக தின வெடுத்தல், வாயில் துர்நாற்றமுண்டாதல், அடிக்கடி அஜீர்ணபேதி போன்று பேதியாதல், வாந்தியுமுண்டாதல், இராக்காலங்களில் நித்திரைசெய்யும் போது பற்களை நறநற வென்று கடித்துக்கொள்ளுதல், பசி அதிகமா யுண்டாதல் ஆக இத்யாதி இலக்ஷணங்கள் காணும். இப் பிணியாளிக்கு மூலரோகமும் பவுத்திரம் என்னும் பகந்தரக்கட்டியும் ஜ்வரமும் உண்டாவதுண்டு. மேலும் பார்ச்வவாயு, குன்மக்கட்டி இவையும் ஏற்படலாம். இக்கிருமிகள் இவ்வளவு தொந்தரவுகளைக் கொடுக்குமியல்புள்ளவையாகையால் பிரதி மனிதனும் இக்குறிகளைக் கண்டு, இதற்குத் தாமதம் செய்யாமல் தகுந்த பரிஹாரம் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும். வயிற்றில் சேரும் கிருமிகளை யொழிப்பதற்கு அடியில் குறிப்பிடப்படும் ஔஷத முறை உபயோகமானது:—

| | |
|---|---|
| மாதுளம் வேரின் பட்டை. | கற்பூரம். |
| பூனைக் காலியின் சுனை. | மிதிபாகலிலை. |
| நில வேம்பு. | சரச்சொன்னையிலை. |
| மாம் பருப்பு. | பெருங்காயம். |
| மாசிப்பத்திரி. | புரசம்விதை. |
| பப்பாளிப் பால். | |

இவைகளைச் சூர்ணம் செய்து அல்லது லேஹ்யம் முதலிய முறையாகப் பக்குவம் பண்ணி இரண்டு நாள் உட்கொள்ளச் செய்து வரவும். பிறகு விரேசனமருந்து சாப்பிட்டு மலம் வெளியாகவேண்டும். விரேசனமாவதற்கு பிரயோகிக்கப்படும் எண்ணெய் முதலியதைக் காச்சாக்கை வேர், மூக்கரத்தைவேர் இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிக்கொள்வது நலம்.



வைத்திய கலாநிதி
துன்மதி௵ புரட்-ஐப்-கார்த்திகைமீ

## Suggestions for the Improvement of the Ayurvedic System.

## ஆயுர்வேத முறையை விருத்தி செய்யும் வகை

### முன்னுரை.

ஆயுர்வேத முறையை அபிவிருத்தி செய்வதற்கு அனுகூலமாக முதலில் சில அஸ்திவாரங்களை நாம் அமைத்துக்கொள்ளவேண்டும். அவ்வஸ்திவாரம் ஒழுங்காகவும் பலமாகவும் அமைக்கப்பட்டுப்போனால், ஆயுர்வேதம் தனக்குத்தானே பலமான நிலைமையைப் பெற்றுவிடும். அப்பால் கப்புங்கிளையுமாக அது ஓங்கி வளர்ந்து, தன்னால் உலகத்திற்கு உண்டாகும் பயனைத் தானே பிரகாசப்படுத்திவிடும். அவ்வஸ்திவாரங்கள் எவையென்பதை விளக்குவதற்கு முன்பு, ஆயுர்வேத முறையைப்பற்றி சில விஷயங்களைச் சொல்லவேண்டி யிருக்கிறது.

ஆயுர்வேதத்தை முற்றிலும் சீர்திருத்த வேண்டுமா வென்பது இப்பொழுது ஒரு கேள்வி. அதற்கு நமது விடை யென்னவென்றால் ஆயுர்வேதம் விசேஷமாகச் சீர்திருத்தப்பட வேண்டிய அவ்வளவு அலங்கோலமான நிலைமையில் இல்லையென்பதே. வைத்திய சாஸ்திரத்திற்கு வேண்டிய எல்லா அங்கங்களும் இதில் அமைந்திருக்கின்றன. மேனாட்டு வைத்திய முறையில் காணப்படாத அபூர்வமான சில அங்கங்களும் ஆயுர்வேதத்தில் உண்டென்போம்.

### ஆயுர்வேதத்திலடங்கிய முக்கியமான அங்கங்கள்

ஆரோக்கிய பாலநம். ஆயுர்வேதக்கிரந்தங்கள் வியாதிகளைத் தடுப்பதற்கான முறைகளைப்பற்றி விவரித்திருக்கின்றன. சரக ஸம்ஹிதையின் ஸூத்திரஸ்தானத்தில யஜ்ஜ: புருஷீயாத்யாயத்திலடங்கிய விஷயங்களை நாம சிறிது குறிப்பிட விரும்புகிறோம். காசிபதி வாமகர், மரீசி, சரலோமா, வார்யோவிதர், ஹிரண்யாக்ஷர், குசிகர், சௌநகர், பத்ரகாப்யர், பரத்வாஜர், காங்காயநர், ஆத்ரேய பிக்ஷு முதலிய சாஸ்திரஜ்ஞர்கள் புநர்வஸுவை அத்யக்ஷராகச் செய்துகொண்டு, வியாதியுண்டாவதற்குப் பொதுவான காரணத்தையும், அதைத் தடுக்கு முபாயத்தையும், ஆலோசித்து நிர்த்தாரணம் செய்ய ஒரு ஸபை நடத்தியிருப்பதாக அந்த அத்தியாயத்தில் விவரம் காணப்படுகிறது. முதலில் வாமகர் என்பவர் அர்த்தபுஷ்டியுள்ளவாறு அச்சபையின் முன்வந்து சிறிது பிரஸங்கம் செய்ய, அப்பால் பலர் ஆரோக்கிய பரிபாலன விஷயமாய் அவரவரது அபிப்பிராயங்களை யெடுத்துரைக்க, பகவானான ஆத்ரேயர் இங்ஙனம் கூறலானார்:— "மனிதனுடைய ஆரோக்யாபிவ்ருத்தி விஷயத்தில் ஹிதமான ஆஹாரங்களென்ன, ஹிதமான ஆசாரங்களென்ன இவைகளின் உபயோகமே முக்கிய காரணமாயிருக்கின்றது; அநுகூலமல்லாத ஆஹாரங்களையுபயோகிப்பதும் ஆசாரங்களைச் செய்வதும் வியாதிகளுக்குக் காரணமாகின்றன." ஆரோக்கிய முறையைப்பற்றி இங்ஙனம் மஹாப்பிராஜ்ஞர்களெல்லாம் கூடி விமர்சம் செய்து விஷய நிர்த்தாரணம் செய்திருக்கிறார்கள். சரகத்தில் மாத்ராசிதீயாத்யாயம், நவேகாந்தாரணீயாத்யாயம், இந்த்ரியோபக்ரமணீயாத்யாயம், ஆத்ரேய பத்ரகாப்யீயாத்யாயம் இவை முதலியவைகளும், ஸுச்ருதத்தில் ஸ்வஸ்த்த வ்ருத்தாத்யாயம் முதலியவையும், வாக்படத்தில் திநசர்யாத்யாயம், ருதுசர்யாத்யாயம், மாத்ராசிதீயாத்யாயம், ரோகாநுத்பாதநீயாத்யாயம் முதலியவைகளும் ஆரோக்கியத்தைக் காப்பதற்கான வழிகளை நன்கு விளக்குகின்றன.

2. ஆயுர்வேதத்தில் சாரீரம் (சரீரத்தவம்) என்கிற விஷயமும் முக்கியமாகவே கருதப்படுகிறது. மற்ற அங்கங்களைப் போலவே சாரீரமும வைத்திய சாஸ்திரத்திற்கு ஸம்பந்தப்பட்ட இன்றியமையாத விஷயமென்றே நமது ஆசார்யர் கூறுகின்றார்கள். சாரீரஜ்ஞானம மாத்திரமா? சரீரோத்பத்தி சாஸ்திரத்திலும், ஆ

ரோக்கியநிலைமையிலுள்ள சரீரமென்ன அநாரோக்கிய நிலைமையிலுள்ள சரீரமென்ன இவற்றிற்குள்ள விசேஷங்களிலும், வியாதிகள் ஸுலபஸாத்தியமா கஷ்டஸாத்தியமா வென்கிற இவை முதலிய தத்துவங்களின் பாகுபாடுகளிலும், அவற்றின் மற்ற ஸூக்ஷ்மாம்சங்களிலும் நம்முன்னோருக்கு நல்ல பரிசயம் இருந்ததென்றும், ஆகவே அவர்கள் இயற்றிய இவ்விஷயமான நூல்கள் போதிய ஸாதனங்களே யென்றும் நாம் உறுதியாக நம்பலாம். நாம் முற்குறிப்பிட்ட விஷயத்திற்கு சரக ஸம்ஹிதையில் தசப்ராணாயதநீயாத்ய யத்தியுள்ள அடியில் வரும் வாக்கியம் பிரமாணமாகும்:—“ததாவிதா ஹி கேவலே சாரீரஜ்ஞானே, சரீராபிநிர்வ்ருத்திஜ்ஞானே, ப்ரக்ருதிவிக்ருதிஜ்ஞானே ச நிஸ்ஸம்சயா: ஸுகஸாத்ய க்ருச்ர ஸாத்ய யாப்ய ப்ரத்யாக்யேயாநாம் ச ரோகாணாம் ஸமுத்தாந பூர்வரூப லிங்க வேதநோபசய விசேஷஜ்ஞானே ச வ்யபகத ஸந்தேஹா:. (அப்படிக் கற்றறிந்தவர்தான ஸாதாரணமான சரீரதத்துவாம்சத்திலும், சரீரம் உற்பத்தியாகும் அம்சங்களைப்பற்றிய அறிவிலும், சரீரம் இயற்கை நிலைமையிலிருக்கையில் அல்லது கோளாறடைந்த நிலைமையிலிருக்கையிலும், தேஹக் கூறுபாடு எவ்விதமிருக்கின்றதென்கிற விஷயத்திலும் ஸந்தேஹமற்ற அறிவுள்ளவரா வார்கள். மேலும் வியாதிகள் எளிதில் நிவ்ருத்திக்கக் கூடியவையா, கஷ்டப்பட்டு நிவாரணம் செய்யத் தகுந்தவையா, அஸாத்யமானவையா என்கிற பகுத்தறிவிலும், வியாதிகள் உற்பத்தியாவதென்ன, அவற்றின் முற்குறிகளென்ன, அவற்றின் குறிகளென்ன, வியாதியினாலேற்படும் வேதனைகளை நிவாரணம் செய்யும் உபாயமென்ன இவ்விதமான விசேஷ அறிவிலும் அவர்கள் ஸந்தேஹமற்ற சிறந்த ஞானமுள்ளவர்களா வார்கள் என்பது அதன் பொருள்.) சாரீர விஷயத்தை சரகர், வாக்படர் முதலியவர் ஸாதாரணமாகவும், ஸுச்ருதர் விசேஷமாகவும் அவரவரது நூலில் எழுதியிருக்கிறார்கள். ஔபதேநவம், ஔரப்ரம் முதலிய தந்திரங்களில் இவ்விஷயமே விசேஷமாகச் சர்ச்சை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

3. நிதாநம்:—அடுத்தாற்போல வியாதிகளைப்பற்றிய அம்சத்தைக் கவனிப்போம். அக்நிவேசர், ஸுச்ருதர் இவர்களுடைய ஸம்ஹிதைகளிலும், ஹாரீத ஸம்ஹிதையிலும், அஞ்ஜந நிதாநத்திலும் ரோக விஷயங்கள் ஸங்கிரஹமாக விளக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வியாதிக்குமுள்ள பல வேறு காரணங்கள், பூர்வரூபங்கள், இலக்ஷணங்கள், ஸம்ப்ராப்தி யென்கிற வியாத்யுற்பத்தி தோரணி, உபத்திரவங்கள் (complications) முதலிய விஷயங்களை ஒவ்வொரு வியாதிக்கும் விஸ்தாரமக் கூறும் ருக்விநிச்சயம் என்கிற மாதவநிதாநம் வெகுப் பிரஸித்தமானது. வியாதி-லிங்க-ஔஷதங்கள் அடங்கிய ஸ்கந்தத்ரயத்தில் வியாதி, லிங்கம் என்கிற இரண்டு விஷயங்களும் இந்த நிதாநம் என்பதில் அடங்கியிருக்கின்றன. ஸாதாரணமாய் உலகத்தில் மனிதருக்கு உண்டாகும் வியாதிகளையெல்லாம் பிரதந்தியகமாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்குமுள்ள காரண பூர்வரூப-ரூப-உபசய ஸம்ப்ராப்திகளை மாதவகரன் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

4. இனி சிகித்ஸையைப் பற்றி கவனிப்போம். சிகித்ஸா விஷயத்தைப் பரிசீலனை செய்யப்புகுந்தால், உலகத்தில் எந்த வைத்திய முறையும் ஆயுர்வேதத்தினிடமிருந்து விஷயங்களை தானம வாங்கிக்கொள்ளத்தான் வேண்டியிருக்கும். மேனாட்டார் கூட ஆயுர்வேதத்திலிருந்து பல விஷயங்களை கிரஹித்துத் தமது வைத்ய நூலில் சிறுகச் சிறுகச் சேர்த்துக் கொள்கிறார்களென்றால், அதுவே நமது சிகித்ஸை வெகு விஸ்தாரமானதும் விசேஷமானதும் என்பதற்குப் போதிய அத்தாட்சியாகும். இந்த சிகித்ஸையிலுள்ள பலவேறு பிரிவுகளைச் சுருக்கமாக அடியில் கூறுகிறோம்.

அஷ்டாங்க சிகித்ஸை:—காயசிகித்ஸை, பாலசிகித்ஸை, கிரஹசிகித்ஸை, ஊர்த்வாங்க சிகித்ஸை, சல்ய சிகித்ஸை, விஷசிகித்ஸை, இரஸாயந சிகித்ஸை, வாஜீகரண சிகித்ஸை என்று சிகித்ஸாக்கிரமத்தை எட்டுவிதமாக விசேஷ பாகுபாடு செய்தார்கள். ஒவ்வொரு சிகித்ஸையைச் செய்வதிலும் முற்காலத்தில் ஒவ்வொருவர் நிபுணராக நின்று, அவரவர் தாம் கற்றறிந்த ஒவ்வொரு சிகித்ஸையைப் பற்றி அப்பால் விஸ்தாரமாகவும், தனித்தனியாகவும் நூல்கள் இயற்றினர். யார் யார் எந்தெந்த நூல்கள் எழுதியிருக்கிறார்கள் என்பதைப்பற்றி விரித்துக் கூற இங்கு இடமில்லை. [காயசிகித்ஸை—முழு தேஹத்தையும் கோளாறடையச் செய்யும் ஜ்வரம், இரத்தபித்தம், க்ஷயம், குஷ்டம் முதலிய வியாதிகளைப் பற்றிய சிகித்ஸை. 2. பாலசிகித்ஸை குழந்தைகளுக்குண்டாகும் ரோகங்களை நிவாரணம் செய்வதற்கான கிரமம். 3. கிரஹ சிகித்ஸை-(மனோவியாதிகளைப் பற்றிய சிகித்ஸை.) 4. ஊர்த்வாங்க சிகித்ஸை-(கழுத்துக்கு மேற்பட்ட அவயவங்களைப் பற்றிய வியாதிகளுக்குச் செய்யப்படும் விசேஷ சிகித்ஸை.) 5. சல்ய சிகித்ஸை-சஸ்திரப் பிரயோகம் செய்து நிறைவேற்றப்படும் சிகித்ஸை. 6. விஷசிகித்ஸை-ஸர்ப்பம் முதலியது தீண்டுவதால் நேரிடும் கோளாறுகளைப் பரிஹரிப்பதற்கான முறை. 7. இரஸாயந சிகித்ஸை-கிழத்தனம் சீக்கிரம் நேரிடாதபடி தேஹத்தை பலமான நிலைமையில் வைப்பதற்கான சிகித்ஸை. 8. வாஜீகரண சிகித்ஸை-சுக்ர தாதுவை விருத்தி செய்து ஸ்திரீபுருஷர்களுடைய பலத்தைச் செழிப்பிக்கத்தக்க சிகித்ஸை.]

(2) சிகித்ஸையில் முக்கியமான இரண்டு பிரிவுகள்:— முற்குறிப்பிட்ட அஷ்டாங்க சிகித்ஸையை காயசிகித்ஸை யென்றும் சல்ய சிகித்ஸை யென்றும் இரண்டு ஸ்தூலமான பிரிவாகப் பிரித்து, சிலர் காய சிகித்ஸைப் பிரதானமான சரக-ஹாரீத-சார்ங்கதராதி ஸம்ஹிதைகளையும், வேறு சிலர் சஸ்திர சிகித்ஸாப் பிரதானமான ஸுச்ருதாதி ஸம்ஹிதைகளையும் விஸ்தாரமாக இயற்றி யிருக்கின்றனர்.

(3) காய சிகித்ஸையிலேயே பிறகு அநேகம் வகையான பேதங்கள் ஏற்படுத்தப்பட்டு, அநுபவத்திலும் பிரயோகிக்கப்பட்டு வந்தன. அவையாவன: (1) ஸ்நேஹசிகித்ஸை. இந்த ஸ்நேஹசிகித்ஸைகூட பாஹ்ய ஸ்நேஹநம், அந்த: ஸ்நேஹநம் என்றவாறு பேதப்படுகிறது. (2) ஸ்வேதசிகித்ஸை. இதில் மஹாஸ்வேதம், மத்யமஸ்வேதம், துர்ப்பல ஸ்வேதம்; தாபஸ்வேதம், ஊஷ்மஸ்வேதம், உபநாஹஸ்வேதம், திரவஸ்வேதம், சால்வணஸ்வேதம், மஹா சால்வண ஸ்வேதம், ஜேந்தாக ஸ்வேதம் முதலிய அநேகவகையான ஸ்வேதக்கிரமங்கள் அடங்கியிருக்கின்றன. (3) வமநசிகித்ஸை. (4) விரேசநசிகித்ஸை. (5) வஸ்தி சிகித்ஸை. இதில் நிரூஹ வஸ்தி, அநுவாஸநவஸ்தி, உத்தர வஸ்தி என்று முக்கியமான மூன்று பிரிவுகள் உள. இதிலேயே மாத்திரா வஸ்தி முதலிய வேறு சில அவாந்தர பேதங்களும் உண்டு. (6) நஸ்ய சிகித்ஸை. இது விரேசந நஸ்யம், ப்ரும்ஹண நஸ்யம், சமந நஸ்யம், என்று மூவகைப்படும். (7) தூமபாந சிகித்ஸை,-ஸ்நேஹந தூமம், மத்யம தூமம், தீக்ஷ்ண தூமம். (8) கண்டூஷ சிகித்ஸை: ஸ்நிக்த கண்டூஷம், சமந கண்டூஷம், சோதந கண்டூஷம், ரோபண கண்டூஷம். (9) கபளக்ரஹ சிகித்ஸை. (10) முக லேபந-பிரதிஸாரண சிகித்ஸைகள். (11) ஆச்யோதந அஞ்ஜநாதி சிகித்ஸைகள். (12) தர்ப்பண-புடபாகாதி நேத்திரகர்மங்கள். (13) சிரோவஸ்தி முதலிய சிரஸ்ஸில் பிரயோகிக்கப்படும் வெவ்வேறு சிகித்ஸைகள். (14) தாராகல்பம்; இப்பெயரால் வழங்கப்படும் சிகித்ஸை கேரளதேசத்தில் இன்றைக்கும் விசேஷமாக அநுபவத்தில் இருந்து வருகின்றன. இம்முறையினால் பக்ஷவாதம் முதலிய பலமான வியாதிகள் ஸ்வஸ்தப் படுத்தப்படுகின்றன.

இவற்றுள் பெரும்பாலும் எல்லாச் சிகித்ஸைகளும் அஷ்டாங்கஹ்ருதயத்திலும், அஷ்-

டாங்க ஸங்கிரஹம் முதலிய வேறு கிரந்தங்களிலும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. தாராகல்ப சிகித்ஸைக்கு, "தாராகல்பம்" என்கிற பெயருடன் ஸம்ஸ்க்ருதத்திற் சிறிய நூல் ஒன்று உண்டு.

(3) காயசிகித்ஸையே சமநம் என்றும், சோதநம் என்றும் ஸ்தூலமான இரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டு, அஷ்டாங்க ஹ்ருதயாதி கிரந்தங்களில் விவரித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

(4) காயசிகித்ஸை குடீப்ராவேசிகம் என்றும், வாதாதபிகம் என்றும் வேறு இரண்டு வகையாகவும் பிரிக்கப்படுவதுண்டு. வீட்டுக்குள்ளேயே பிணியாளியை வைத்து, அவ்விடத்திற் செய்யப்படும் சிகித்ஸை 'குடீப்ராவேசிகம்' எனப்படும். வீட்டுக்கு வெளியில் நல்ல பிரகாசமும் காற்றோட்டமுமுள்ள விடத்தில் பிணியாளியை விட்டு உபசாரம் செய்யப்படுவது 'வாதாதபிகம்' எனப்படும்.

சல்ய சிகித்ஸையோ காயசிகித்ஸையினும் விரிவான விஷயங்கள் அடங்கியது. இது ஸம்பந்தமான எல்லா விஷயங்களையும் அவற்றின் பிரிவுகளோடும் உட்பிரிவுகளோடும் சுருக்கிக் கூறவும் இங்கு இடமில்லை யென்றாலும், சுருக்கத்திலும் சுருக்கமான சில குறிப்புகளையாவது இங்கு எழுதவேண்டியிருக்கிறது:-

(a) பொதுவான சஸ்திர சிகித்ஸை.—சஸ்திரங்களைப் பிரயோகித்துச் செய்யப்படும் எல்லாவிதமான விரண சிகித்ஸைகளும் இதனால் குறிப்பிடப்படுகிறது.

(b) அக்னிகர்மம்—நேராக அக்னியினாலோ அக்னியிற் காய்ச்சிய கருவிகளாலோ வியாதி கொண்ட அவயவங்களைச் சுட்டுச் செய்யப்படும் சிகித்ஸை.

(c) க்ஷாரகர்மம்-காரங்கள் என்று வழங்கப்படும் இந்த க்ஷாரங்களைப் பிரயோகித்து அவசியமான விடங்களில் அழுகலையுண்டு பண்ணுவது அல்லது கொப்புளிக்கச் செய்வது.

(d) ஸிராவ்யதை.—ஸிரைகள் என்கிற இரத்தக்குழாய்களைக் கீறி இரத்தத்தை வெளிப்படுத்தல்.

(e) ஜலூகாப் பிரயோகம்—அட்டைகளைப் பிரயோகித்து இரத்தத்தை உறியச்செய்வது.

(f) அலாபு கடிகாப் பிரயோகம்—குடுவை அல்லது கிண்ணிகளின் உட்புறத்தைக் காய்ச்சி உடனே நோயுண்ட அவயவத்தின் மீது கவிழ்த்து கௌவச் செய்து இரத்தத்தைக் கரையச் செய்யும் சிகித்ஸை.

(g) மூடகர்ப்பம் முதலிய சிகித்ஸை—கர்ப்பாசயத்திலிருந்து வெளி வரமுடியாமல் இயற்கைக்கு மாறாக அகப்பட்டுக் கொண்டிருக்கும் சிசுவை வெளிப்படுத்தும் முறை.

(h) சாலாக்ய சிகித்ஸை—நேத்திரம், செவி, நாசி, தொண்டை முதலிய கழுத்துக்கு மேற்பட்ட அவயவங்களில் சஸ்திரங்களைப் பிரயோகித்து செய்யப்படும் சிகித்ஸை.

ஆக இவை யாவும் சல்ய சிகித்ஸைக்கு ஸம்பந்தப் பட்ட முறைகளாகும். இவற்றில் ஒவ்வொன்றிலும் பலவிதமான உட்பிரிவுகளுண்டு. அவற்றை யெல்லாம் விவரித்துக் கூற இங்கு இடமில்லை. சல்ய சிகித்ஸா ஸம்பந்தமான இவ்விஷயங்களுக் கெல்லாம் ஸுச்ருதஸம்ஹிதை பிரதானமான பிரமாண நூலாகும். மேலும் இச்சிகித்ஸைகளுக்குத் தேவையான யந்திரங்களென்ன சஸ்திரங்களென்ன இவைகளைப் பற்றிய விஷயங்கள ஸுச்ருதராலும் வாக்படராலும் விஸ்தாரமாக விவரித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

5. ஔஷத முறை. ஆயுர்வேதத்தில் ஔஷத முறையில் ஏற்பட்டுள்ள பேதங்கள் வெகு விரிவானவை. ஔஷத முறையானது ஓஷதிகளால் செய்யப்படுவது, தாதுவர்க்கங்களால் செய்யப்படுவது என்று பொதுவில இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவ்விருவிதமான ஔஷதங்களிலும் ஒவ்வொன்றிலுமுள்ள பேதங்களை இங்கு விவரித்துக் கூறுவது கஷ்டம். ஆயுர்வேதத்தில் இவற்றைப்பற்றி



தனித்தனியே நூல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது சிலக் கிரந்தங்கள் ஓஷதிகளைக் கொண்டே ஔஷதங்கள் தயார் செய்யப்படும் முறைகளைப் பற்றியும், வேறு சிலக் கிரந்தங்கள் தாதுவர்க்கங்களைக் கொண்டே தயார் செய்யப்படும் முறைகளைப்பற்றியும் இயற்றப்பட்டிருக்கின்றன. வேறு சிலக்கிரந்தங்கள் இவ்விருவிதமான ஔஷதங்களின் முறைகளைப்பற்றியும் விவரிப்பவைகளாகவும் இருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவை சரகஸம்ஹிதை, அஷ்டாங்கஹ்ருதயம், ஹாரீதஸம்ஹிதை, ப்ருந்தமாதவம், சக்ரதத்தம் முதலியவை ஓஷதிஸம்பந்தமான முறைகளையும், இரஸரத்நஸமுச்சயம், இரஸரத்நாகரம் இரஸராஜ ஸுந்தரம் முதலியவை தாதுவர்க்கஸம்பந்தமான முறைகளையும், பாவப்ரகாசம், வைத்ய சிந்தாமணி சார்ங்கதர ஸம்ஹிதை, பைஷஜ்யரத்நாகரம் முதலியவை இரண்டுவிதமான ஔஷத முறைகளையும் விவரிக்கும் கிரந்தங்கள். கஷாயாதி ஓஷதி ஸம்பந்தமான ஔஷதங்கள் அளவில் அதிகமாகவும், பஸ்ம ஸத்வபாதநாதி தாதுவர்க்க ஸம்பந்தமான ஔஷதங்கள் மிகச் சொற்ப அளவாகவும் உபயோகிக்கக் கூடியவை. மற்றொரு விசேஷம்:-பிணியாளிக்கு ஔஷதம் விழுங்க முடியாமற் போகும் நிலைமையில் நமது பூர்வ வைத்தியர்கள் சர்மத்தைக் குத்தி இரத்தத்தில் ஔஷதத்தை நேரிற் செலுத்தி வந்தார்கள். இதற்கு ஸூக்ஷ்மமான அளவில் நல்ல பலன் தரக்கூடிய ஔஷதம் உபயோகிக்கப்படுவது வழக்கம். ஊசியினால் குத்திச் செலுத்தக் கூடிய அவ்வித ஔஷதம் ஸூசிகாபரணம் என்று வழங்கப்பட்டது. இவ்விதமான ஔஷதமுறைகள் இரஸரத்ந ஸமுச்சயாதிகளில் மொழியப்பட்டிருக்கின்றன.

6. திரவ்ய குணம். ஔஷதங்களுக்காக உபயோகிக்கப்படும் பலவிதமான மூலிகைகளுடையவும், இரஸவர்க்க லோஹவர்க்கங்களுடையவும் ஸ்வரூபங்களென்ன, குண விசேஷங்களென்ன, உபயோகங்களென்ன இவற்றைப்பற்றி விவரிக்கும் பாகம் திரவ்யகுணம் எனப்படும். இதற்கான கிரந்தங்கள் வைத்திய நிகண்டுக்கள். ராஜநிகண்டு, தந்வந்தரி நிகண்டு, நிகண்டு ரத்நாகரம் திரவ்ய குணஸங்கிரஹம் முதலியவை இவ்வம்சத்தைச் சேர்ந்த பிராசீன நூல்கள்.

இதுவரையில் ஆயுர்வேதத்திலடங்கியுள்ள முக்கியமான அநேக விபாகங்கள் ஸங்கிரஹித்துக் கூறப்பட்டன. ஆயுர்வேதத்தை விருத்தி செய்ய வகை கூற வேண்டுமானால், அதன் வாஸ்தவமான பிரக்ருத நிலைமை முதலில் உணரப்படவேண்டும். மேலே கூறப்பட்டுள்ள ஸங்கிரஹமான அம்சங்களைக் கவனிக்குங்கால் ஆயுர்வேதம் எவ்விதத்திலும் சிலாக்கியமான வைத்திய முறையென்றும், சாஸ்த்ரீய தோரணையில் ஒழுங்காக அமைந்திருக்கிறதென்றும் எவரும் தெரிந்துகொள்ளலாம். ஆனால் இதை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமானால், எந்தெந்த அம்சத்தில் இதைச் சீர்திருத்தவேண்டுமென்கிற விஷயத்தைப்பற்றி நாம் இனி சிறிது கூறுவோம்.

ஆயுர்வேதத்தை அபிவிருத்தி செய்தல்.

ஆயுர்வேதத்தைச் சீர்திருத்த அல்லது அபிவ்ருத்தி செய்ய வேண்டுமென்று அடிக்கடியும் பொதுவாகப் பலர் முறையிட்டு வருகிறார்கள். ஆயுர்வேதத்தில் அப்படிச் செய்ய வேண்டிய அம்சங்கள் எவை யென்பதை எவரும் குறிப்பிட்டுக் கூறுவதில்லை. ஆகவே நாம் அதை இங்கே ஒருவாறு விளங்கக் குறிப்பிடுகிறோம். ஐந்து அம்சங்களில் ஆயுர்வேதம் சீர்திருத்தப் படவேண்டியதா யிருக்கிறது.

1. சாஸ்திரத்தை அபிவ்ருத்தி செய்ய வேண்டுமென்பது முதல் விஷயம். அதாவது ஆயுர்வேதம் ஸம்ஸ்க்ருத பாஷையில் இயற்றப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் ஸம்ஸ்க்ருதம் படிப்பது அரிதாய்விட்டது. ஆகவே அவையெல்லாம் தேச பாஷைகளில் மொழிபெயர்க்கப்படவேண்டும். வட இந்தியாவில், பெரும்பான்

மையான ஆயுர்வேதக் கிரந்தங்கள் கூர்ஜரம், மஹாராஷ்ட்ரம், ஹிந்தி, பெங்காலி முதலிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு விசேஷமாகப் பிரசாரத்திற்கு வந்து விட்டன. தென்னிந்தியாவிலோ அவ்வித முயற்சி எவராலும் எடுத்துக் கொள்ளப்படாமலிருந்தது. ஆகிலும் சில காலமாக நாம் இவ்வூழியத்தைச் செய்ய முயன்று இரண்டொரு கிரந்தங்களையும் தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரம் செய்தோம்; இன்னும் அதை விடாமுயற்சியுடன் செய்துவருகிறோம்.

2. ஆயுர்வேதக் கிரந்தங்களைச் சேகரித்தல்:- நூற்றுக்கணக்கான ஆயுர்வேதக் கிரந்தங்கள் அச்சிடப்பட்டு வெளியாயிருக்கின்றன. ஆகிலும் அநேக நூல்கள் லுப்தமாய்விட்டன; பல லுப்தமாய்க் கொண்டும் வருகின்றன. பல அருமையான நூல்கள் ஒவ்வொரு நபரிடம் அகப்பட்டு, அவற்றின் உபயோகத்தையறியாத அவர் பிறரிடம் கொடுக்க மனமிராமலும், தாமே அச்சிட்டுப் பிரசுரிக்க வியலாமலும் வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கிரந்தங்களை எந்தப் பிரயாசையைப் பட்டாவது ஸம்பாதித்து, அவை அனைவருக்கும் கிடைக்கக்கூடியவாறு செய்யவேண்டும். ஔபதேநவம், புஷ்கலாவதம், போஜதந்திரம், ஹிரண்யாக்ஷதந்திரம், பாலுகி தந்திரம், வைதரண தந்திரம் முதலிய உயர்ந்த பிராசீன நூல்கள் லுப்தமாய்விட்டதாகவே தெரியவருகிறது. இனியாவது சிறிது உயிருடனுள்ள ஆயுர்வேத நூல்களுக்கு இத்தகைய நிலைமை நேரிடா வண்ணம் தகுந்த முயற்சியெடுத்துக்கொள்வது இன்றியமையாததாகும்.

3. மேனாட்டார் எங்கெங்கு எந்தெந்த விஷயம் சிறந்ததென்று காண்கிறார்களோ அவைகளையெல்லாம் கூசாமல் தங்களுடைய முறையில் சேர்த்துக்கொள்கிறார்கள். நமது சாஸ்திரங்களிலாகட்டும் வேறு எதிலாகட்டும் திதாக இருப்பதாகத் தெரிந்தால், அவற்றையெல்லாம் கிரஹித்து அவ்விதமேயோ சிறிது உருமாற்றியோ மேனாட்டார் தங்களுடைய சாஸ்திரங்களில் புதிது புதிதாக நுழைத்து அவர்களுடைய பரிபாஷைகளையும் அவற்றின் மூலமாய் அவர்களுடைய சாஸ்திரத்தையும் ஒவ்வொரு நாளும் விருத்தி செய்துகொண்டே வருகிறார்கள். நமது வைத்திய சாஸ்திரத்தில் இல்லாத சிறந்த விஷயங்கள் மேனாட்டாருடைய முறையில் அடங்கியிருந்தால், அவற்றை நாமும் ஏன் கிரஹித்துக்கொள்ளக்கூடாது? மேனாட்டார் நமதிடமிருந்து தாராளமாக விஷயங்களை அப்போதைக்கப்போது கிரஹித்துக்கொண்டுபோவதை நாம் பொருட்படுத்தாமலிருந்து வந்ததும், புதிய விஷயங்களை நமது சாஸ்திரமுறைகளில் சேர்த்துக் கொள்வது அவசியமல்லவென்று தெரியாத்தனமாய் நினைத்துவந்ததும் ஆக இக்காரணங்களாலேயே ஆயுர்வேதமுறை மேனாட்டுமுறையைப்போல விருத்தியடைய முடியாமற்போனதற்கு ஒரு முக்கிய காரணமாகும். நாம் என்ன சொன்னபோதிலும், சரீரதத்துவ ஸம்பந்தமான விஷயங்களில் முக்கியமாய் பல அம்சங்கள் மேனாட்டு முறையிலிருந்து கிரஹித்துக்கொள்ள வேண்டியவைகளாகவே இருக்கின்றன. இவ்விதமே ரோகநிதானம் அல்லது ரோகபரீக்ஷை விஷயமான அம்சத்திலும் சிற்சில புதிய அம்சங்களை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

4 ஆயுர்வேத போதநா முறையையும் சீர்திருத்தவேண்டும். இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் கலாசாலையை ஸ்தாபிப்பதேயாம். காலஞ்சென்ற வைத்தியரத்னம் பண்டித கோபாலாசார்லு அவர்கள் நடத்திவந்த ஆயுர்வேத கலாசாலை நேற்றைய வரையில் சிலாக்கியமாகக் காரியம் செய்துவந்திருக்கிறது. இப்பொழுது இக்கலாசாலை திரவ்யக் குறைவால் ஏதோ ஒருவாறு நடந்துவருகிறது. (.) கலாசாலை ஒரு விசாலமான இடத்தில் அமைக்கப்படவேண்டும் 100 வித்யார்த்திகள் ஐந்தாறு வகுப்புகளில் படிக்கும்படியான அவகாசம் வேண்டும். ( ) வைத்திய சாஸ்திர ஸம்பந்தமான ஒவ்வொரு விஷயத்தையும் கற்பிப்பதில் திறமைவாய்ந்த உபாத்தியாயர்களைத் தகுந்த சம்பளத்தில் ஒவ்வொரு வகுப்புக்கும் பிரத்தியேகமாயேற்படுத்தவேண்டும். (3) தேசபாஷைகளில் ஆயுர்வேத நூல்கள் போதிய அளவு கிடைக்க வழியேற்படாதவரையில் ஸம்ஸ்க்ருத பாஷையில் தகுந்த வியுத்பத்தியுள்ளவர்களையே வைத்திய வித்யார்த்திகளாகச் சேர்த்துக்கொள்வது உசிதம். (4) நிகில பாரத ஆயுர்வேத வித்யாபீடமானது மாணாக்கர்களுக்கு அப்போதைக்கப்போது உபயோகமான பாடக்ரமங்களை யோசித்து நிர்த்தாரணம் செய்து, பரீக்ஷைகளை வெகு ஊக்கத்துடன் நடத்த ஸகல ஏற்பாடுகளையும் செய்ய முன்வரவேண்டும். (5) கலாசாலையைச் சேர்ந்தாற்போல ஆயுர்வேத சிகித்ஸாலயம் மாணாக்கர்களுடைய அநுபவப் பயிற்சிக்கு அவசியமாயிருக்கிறது. "ப்ரத்யக்ஷதஶ்ச யத் த்ருஷ்டம் சாஸ்த்ரத்ருஷ்டம் ச யத் பவேத். ஸமாஸதஸ்ததுபயம் பூயோ ஜ்ஞாநவிவர்த்தநம்" (பிரத்யக்ஷாநுபவத்தைக்கொண்டும், சாஸ்திரப் பயிற்சியைக்கொண்டும் விஷயங்களைக் கற்றுவந்தால், அவ்விரண்டின் சேர்க்கையினாலும் அறிவு அதிக மேன்மையுறும்) என்று ஸுச்ருதர் கூறுவதற்கேற்ப வைத்திய வித்யாலயத்துடன் ஆதுராலயம் அமைக்கப்பட வேண்டியது வைத்தியப்படிப்புக்கு இன்றியமையாததாகும். (6) மூலிகளுடைய இயற்கை ஸ்வரூபங்கள் வித்யார்த்திகளுக்குத் தெரிவதற்காக ஓர் ஔஷதோத்யானம் தேவை. அத்தோட்டத்திலேயே கலாசாலை அமைக்கப்படுவது உத்தமமான ஏற்பாடு. மேனாட்டு முறைப்படி வைத்தியம் கற்பவருக்கு மூலிகைகளின் ஸ்வரூபமும், ஔஷதங்கள் தயார் செய்யும் வகையும் அநுபவரீதியாகத் தெரியவராது. மேனாடுகளிலிருந்து எல்லா ஔஷதங்களும் தயாராக இத்தேசத்தில் ஸப்ளை செய்யப்பட்டுப் போவதால், மேனாட்டுவைத்தியம் கற்பவர் அவற்றைத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமுமில்லாமற் போய்விட்டது. ஆயுர்வேத வைத்தியர்களுடைய நிலைமையோ அப்படியில்லை. ஆகவே மூலிகை முதலியவற்றின் ஸ்வரூபஞானமும் ஔஷத நிர்மாண முறையும் ஆயுர்வேத வைத்தியர்களால் பிரத்தியக்ஷத்தில் கற்றுத் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கின்றன. (7) ஸுச்ருதர் முதலியவர்களுடைய கோட்பாடுகளை அநுஸரித்து சல்யவித்தையைக் கலாசாலையில் கற்பிக்கவேண்டியது மிகவும் அவசியம். இதற்குத் தற்கால முறைப்படி சஸ்திரசிகித்ஸையில் தேறிய மேனாட்டு வைத்தியர்களைக்கொண்டு சில காலம் அநுபவரீதியாக முதலில் இவ்விஷயம் கற்பிக்கப்பட்டு வருவது நலம். வாக்படர் சஸ்திரசிகித்ஸா ஸம்பந்தமான விஷயங்களை அஷ்டாங்க ஹ்ருதயத்திலும் சிறிது விளங்கவே கூறியிருக்கிறார். சேதநம், கர்த்தநம், மதநம், ஏஷணாதி சஸ்திர கர்மங்களுக்கு முறையே உபயோகமான மண்டலாக்ர, கர்த்தரீ, கஜ, கண்டபதாதி சஸ்திரங்களையும், கிரஹணம், தாரணம், பந்தநம், சூஷணம் முதலிய வேலைகளுக்கு முறையே தேவையான ஸந்தம்ச-ஸ்வஸ்திக-சமீ-வஸ்தி முதலிய யந்திரங்களையும் தகுந்த வேலையாட்களைக்கொண்டு தயார் செய்யவேண்டியிருக்கிறது. அக்கருவிகளைக் கலாசாலையிலும் ஆயுர்வேதாதுராலயத்திலும் உபயோகிக்கவேண்டும். வாக்படம், ஸுச்ருதம் முதலியவற்றில் வர்ணிக்கப்படுகிற கோசம், முத்தோலீ, சீநம், தாமம், அநுவேல்லிதம், ஸ்தகிகா, கோபணம், கட்வா முதலிய பந்தந முறைகளையும், சேதந-பேதந-தாரணாதி சஸ்திரப் பிரயோக முறைகளையும், வஸ்தி-நளிகா-ச்ருங்க-அலாபு கடிகா முதலிய கருவிகளின் ஸ்வரூப வர்ணனைகளையும் கருத்துடன் படித்துப் பார்க்கும் பக்ஷபாதமற்ற பண்டிதர் எவரும் ஆயுர்வேத ஸம்பந்தமான சஸ்திர சிகித்ஸாக் கிரமம் முன்னேற்றமடைய முடியாத ஒழுங்கீனமான ஸ்திதியில் இருப்பதாகக் கூறத் துணியார்.

5. வைத்தியத் தொழிலைச் சீர்திருத்தல்:— ஒருவன் வைத்தியத்தொழிலில் பிரவேசிக்கு முன், அவன் கலாசாலையிற் கற்றுத் தேர்ந்தவனாயிருந்தபோதிலும், சிறந்த அநுபவம் பெற

வதற்காக ஒரு வைத்திய சிரேஷ்டரின் கீழ் வேலையைக் கற்று வருவது அவசியம் இந்த யோக்யா ஸூத்ரீயாத்தியாயத்தில் ஸுச்ருதர் "அதிகத ஸர்வ சாஸ்த்ரார்த்தமபி யோக்யாம் காரயேத்" (ஸகல சாஸ்திர தத்துவங்களையும் கற்றுத் தேறியிருந்தாலும் அநுபவ கிரமத்தை மாணாக்கருக்குக் கற்பிக்கவேண்டும்) என்கிறார். மேலும் சாஸ்திர தத்துவங்களைக் கற்றுத் தேறியவனையும், விஷயங்களை பிரத்தியக்ஷத்திற் பார்த்தவனையும், தான் நேராக வேலைகளைச் செய்வதில் அநுபவம் பெற்றவனாகவும், சாஸ்திர தத்துவத்தை ஸந்தேஹமில்லாமல் எடுத்துக் கூறக்கூடியவனையும் இராஜாங்கத்தாரால் வைத்தியத்தொழிலைச் செய்யக்கூடியவனென்று அநுமதிக்கப்பெற்றவனாகவும் மயிர்கள் நகங்கள் வெற்றறையிட்ட க்ஷௌரம் செய்துகொண்டவனாகவும், பரிசுத்தனாகவும், சுத்தமான வஸ்திரம் தரித்தவனாகவும், நல்ல மனஸுடன் மதுரமாகப் பேசுபவனாகவும், பிராணிகளுக்கு நல்ல உதவி செய்பவனாகவும் உள்ள மனிதன் வைத்தியத்தொழிலில் பிரவேசிக்கவேண்டும்" என்று ஸுச்ருதரால் விசிகாநுப்ரவேசாத்தியாயத்தில் கூறப்படுகிறது "படிக்கவேண்டியதை முற்றிலும் படித்து, வேலையையும் ஒருவரிடமிருந்துகொண்டு கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்; இரண்டையும் அறிந்தவன் தான் இராஜாங்கத்தினால் அங்கீகரிக்கத் தகுந்த வைத்தியனாவான். எவனொருவன் அநுபவமுறையில் ஒருவாறு திறமைவாய்ந்திருந்தும், சாஸ்திரத்தைக் கற்காமலே தொழில் செய்யத் துணிகிறானோ அவன் ஸத்புருஷர்களால் கௌரவிக்கக் கூடாதவனாகவும், இராஜதண்டனைக்கு உட்படுகிறவனாகவும் ஆவான். இராஜாவின் கவனக்குறைவுமான குற்றத்தினால் இக்கபட வைத்தியன் (துஷ்டவைத்தியன்) ஏற்பட்டு, ராஜாவினுடைய ஜனத்தைக் கொல்லுகிறான்." ([illegible]மத் யேபாதீக்ய கர்மாப்யஸ்ய முபாஸிதவ்யம்; உபயஞ்ஞோ ஹி பிஷக் ராஜார்ஹோ பவதி. யஸ்து கர்மஸு நிஷ்ணாதோ தார்ஷ்ட்யாத் சாஸ்த்ரபஹிஷ்க்ருதஃ| ஸ ஸத்ஸு பூஜாம் நாப்நோதி சிக்ஷாஞ் சார்ஹதி ராஜதஃ| ஸ ஹிநஸ்தி ஜநம் லோபாத் குவைத்யோ ந்ருபதோஷதஃ|) என்று அத்யயநஸம்ப்ரதாநீயாத்யாயத்தில் ஸுச்ருதர் கூறியுள்ளதை, இவ்வைத்தியத் தொழிலைச் சீர்திருத்துவதில் சிரத்தையுள்ளவர் கருத்துடன் கவனிப்பாராக. ஸுவைத்தியர்கள், குவைத்தியர்கள் (யோக்யதை பெற்ற நல்ல வைத்தியர், யோக்யதை பெறாத கெட்ட வைத்தியர்) என்கிற விஷயத்தையே சரகர் வேறுவிதமாக விளக்கியிருக்கிறார். அதாவது 'அக்னிவேச! வைத்தியர்கள் இருவகைப்படுவார்கள்: (1) ஒரு வகுப்பார் பிணியாளரின் உயிரிடம் அபிமானங்கொண்டுள்ளவர்; அவர்கள் வியாதிகளைக் கொல்லும் கருத்துடன் உழைப்பவராவர். (2)மற்றொரு வகுப்பார் ரோகங்கள் எங்கேயாவது உண்டாகின்றனவாவென்று எதிர்பார்த்து வியாதிகளிடம் ஆவல் கொண்டவர்; அவர்கள் பிணியாளரின் பிராணனை வதைப்பவராவர். (த்விவிதா: கலு பிஷஜோ பவந்தி அக்நிவேச! ப்ராணாநாம் ஏகே அபிஸரா ஹந்தாரோ ரோகாணாம்;ரோகாணாம் ஏகே அபிஸரா ஹந்தார: ப்ராணாநாம்). என்று மேலே எடுத்துக் கூறிய ஆதாரங்களிலிருந்து, முற்காலங்களில் இத்தேசத்தில் வைத்திய சாஸ்திரத்தைக் கற்றுத் தேறி, இராஜாங்க உத்தரவைப் பெற்று, வைத்தியத் தொழிலில் பிரவேசிப்பது அநுஷ்டானத்தில் இருந்து வந்தது என்று நன்கு அறியலாம். இக்காலத்திலும் முறைப்படி கற்றுத் தேறாமல் தோன்றியவாறு வைத்தியம் செய்வதை எந்த விவேகியும் ஒப்புக்கொள்ள முடியாது. ஆகவே இனி எவனும் தன் இஷ்டப்படி வைத்தியன் என்று பெயர் வைத்துக்கொண்டு வெளி வரக்கூடாதென்றும், எவனும் ஒரு கல்விச்சாலையில் படித்து ஏதேனுமொரு கீழ்த்தரப் பரீக்ஷையிலாவது தேறிய பிறகு, அவசியமான அநுபவத்தையும் பெற்று வைத்தியம் செய்யவேண்டுமென்றும் ஒரு கண்டிப்பான விதியேற்பட்டுவிடவேண்டும். இராஜாங்கத்தாரே அவ்வித



விதையை ஏற்படுத்தி விடுவது உத்தமமாகும்.

6. ஒற்றுமை:—ஆயுர்வேத வைத்தியம் முன்னேற்றமடைய வேண்டுமானால், ஆயுர்வேத வைத்தியர்களுக்குள் ஒற்றுமையும் வெகு அவசியமானது. ஆயுர்வேத வைத்தியர்கள் மேனாட்டு வைத்தியர்களோடு போராடி, தாம் முன்னுக்குவரமுடியாத கஷ்ட நிலைமையில் இருந்துவரும் இச்சந்தர்ப்பத்தில், இவ்வைத்தியர்கள் பொறுமையுடன் ஒருவருக்கொருவரை தூஷித்துக்கொண்டிருப்பது இன்னும் இவ்வைத்தியத் தொழிலுக்குப் பெரும் நஷ்டத்தையுண்டுபண்ணுவதற்கே காரணமாகும். வியாதி நிர்த்தாரணம் செய்வதிலும், சிகித்ஸையை நிறைவேற்றுவதிலும் எல்லா ஆயுர்வேத வைத்தியர்களும் முற்றிலும் நிபுணராயிருப்பார் என்று நினைக்கமுடியாது. ஒவ்வொருவருக்கும் பல ஸமயங்களில் விஷயங்களில் ஸந்தேஹம் ஏற்படுவது ஸஹஜம். அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் ஒரு வைத்தியர் மற்றவரோடு கலந்து ஆலோசித்து ஸந்தேஹங்களை நிவர்த்தி செய்துகொண்டால் தொழிலமுறை ஒழுங்குபடும்.

7. ஔஷதங்களை விருத்தி செய்தல்: மேனாட்டு வைத்தியமும், மேனாட்டு வைத்திய வியாபாரமும் இத்தேசத்திய வைத்திய முறையை வெல்லுவதற்குக் காரணம், அத்தேசத்தியவர் ஔஷதங்களை ஏராளமாகத் தயார் செய்து உலகத்திற பல பாகங்களுக்கும் விநியோகம் செய்வதற்கான தொழிற்சாலைகளை அபரிமிதமான மூலதனத்தைக்கொண்டு ஸ்தாபனம் செய்ததேயாம். ஔஷதங்களைத் தயார் செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் வெவ்வேறு ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டாலன்றி, ஆயுர்வேதத்தில தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் தமது புத்திகூர்மை முழுமையையும் உபயோகித்து தொழிலை ஒழுங்காக நடத்த விசேஷ ஸௌகரியம் வாய்க்காது. மேலும் ஔஷத வியாபாரமும், வைத்தியத் தொழிலும் ஆக இவ்விரண்டும் தனித்தனியே இலாபகரமான முறையில் நடந்தேறவேண்டுமானால், இவ்விரு கார்யங்களும் பிரத்தியேகமாகப் பிரிந்து நடப்பது உசிதமாயிருக்கும். நமது வைத்தியர்களோ வியாதிக்ரஸ்தர்களைப் பரீக்ஷித்து வியாதிபரிசோதனை செய்யவேண்டும்; அவ்வியாதிக்குப் பரிஹார முறையை யோசித்துச் சொல்லவும் வேண்டும்; அவர்களுக்கு அருகிலிருந்து இவ்வைத்தியர்களே சிகித்ஸைகளையும் நிறைவேற்றவேண்டும்; அச்சிகித்ஸைகளுக்குத் தேவையான ஔஷதங்களை இவர்களே ஸப்ளை செய்யவும் வேண்டும்; அவ்வௌஷதங்களை இவர்களே தயார் செய்யவும் வேண்டும். இவ்வழக்கத்தினால் வைத்தியர்களும் ரோகிகளும் பலவித அஸௌகர்யங்களுக்கு உட்படவேண்டிவருகிறது. மேலும் ஒவ்வொரு வைத்தியரும், அவரவருக்குத் தேவையான ஔஷதங்களைத் தாமே தயார் செய்வதால் ஔஷதமுறையும் சீர்பாடடைய வழியில்லை. தகுந்த நிபுணர்களை நியமித்து ஔஷதங்களைத்தயார் செய்து ஸப்ளை செய்ய பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டால் ஔஷதங்களுடைய முறையிலும், ஔஷதங்களுக்கு உபயோகிக்க வேண்டிய அளவுகளிலும் ஒரு சீரமை ஏற்படும்.

8. ஆயுர்வேத நிதி:-மேற் கூறிய காரியங்கள் நிறைவேறுவதற்கு முக்கியமாக வேண்டியது திரவ்யமே. ஒரு லிமிடெட் கம்பெனி ஏற்பட்டு, அக்கம்பெனியார் ஆயுர்வேத நிதியொன்றை ஏற்படுத்தி நிர்வஹிப்பது, இதற்கு அவசியமான திரவ்யநிலைமையைச் சீர்படுத்துவதற்கு ஸௌகர்யமாயிருக்கும். லக்ஷக்கணக்கான த்ரவ்யம் சேர்ந்தாலொழிய நாம் முற்கூறிய சீர்திருத்தங்கள் ஏற்பட வழியில்லை. இக்கம்பெனியார் ஆயுர்வேத நிதியை ஸ்தாபித்து விருத்தி செய்து [illegible] ஆயுர்வேத கலாசாலை (ஆதுராலயம்)— ஔஷத தயாரணம், ஔஷதசாலை, ஔஷத வியாபாரம் இவற்றையும் இந்த நிதியின் திரவ்யத்திலிருந்து நிர்வஹிக்கலாம்.

இவ்விஷயத்தை இனி இன்னும் விஸ்தரித்து இங்கு எழுத முடியாது. ஆயுர்வேத

124989

முறையில் அடங்கிய அபூர்வதத்துவங்களை, அருமையான கொள்கைகளை, இத்தேசத்திய நிலைக்கு இன்றியமையாத உபயோகங்களை இத்தேசத்திற் பிறந்து வளர்ந்த நாம் புறக்கணிக்கலாகாது. "சுமார் 15-சதாப்தங்களுக்கு முன்பு இத்தேசத்தில் அநுஷ்டானத்தில் இருந்துவந்த வைத்திய முறையையும், அக்காலமுதல் அநுபவத்திலிருந்து வருவதாகத் தெரிகிற ஔஷத முறையையும் பற்றி ஸம்ஸ்க்ருத வைத்திய நூல்களில் வரைந்துள்ள விஷயங்களை நான் படிக்க நேர்ந்தது. அக்கிரந்தங்கள் தேசத்தின் பிராசீன விஞ்ஞான விசேஷத்திற்கு ஸாக்ஷியமாயிருப்பதா யுணர்ந்தேன்" என்று டாக்டர் கன்னியலால்டே, ஸி. ஐ. இ. என்பவர் தான் எழுதிய "இந்தியன் பாரம காலஜி" என்கிற நூலில் கூறியிருக்கிறார். நமது தேசத்தில் பொதுவாக எல்லா ஜனங்களுக்கும், விசேஷமாக வைத்தியர்களுக்கும் நமது சாஸ்திரத்தை விருத்திக்குக் கொண்டு வருவதில் சிரத்தையும் ஊக்கமும் தேவை. ஆங்கில வைத்தியர்களில் பெரும்பான்மையோரும் விஷயமுணர்ந்தும் பொறாமையினாலோ, விஷய முணராமல் அலக்ஷியத்தினாலோ நமது தேசீய வைத்தியத்தைப் புறக்கணிக்கின்றார்கள். ஆங்கில வைத்தியங்கற்ற வேறு சிலர், ஆயுர்வேத நூல்களில் அடங்கியுள்ள சிறந்த ஔஷத முறைகளையும் மற்றச் சரக்குகளையும் "பிரிடிஷ் பாரமகோபியா" என்கிற ஆங்கில வாகடநூலில் சேர்த்துக் கொண்டு விடலாம் என்று கருதுகிறார்கள். சுமார் 40-வருஷகாலமாகவே இவ்வித யோசனை ஒவ்வோர் ஆங்கில வைத்தியருக்கு இருந்து வருவதாய்த் தெரியவருகிறது. நாம் முன் கூறப்பட்ட கன்னியலால் என்கிற ஆங்கில வைத்தியங்கற்ற கனவான் தேசீய வைத்திய ஸம்பந்தமான சில மூலிகைகளைப் பரிசீலனை செய்து அவற்றின் குணங்களைப் பற்றி கவர்ன்மெண்டுக்கு ரிபோர்ட் செய்து வந்தார். அதன்மேல் அவருக்குச் செலவுக்கு ஒருவாறு அதிகரித்தது. லண்டனில் 1901-ம் வருஷம் நடந்த இண்டெர்நேஷனல் பாரமஸூடிகல் காங்கிரஸ் என்கிற வைத்திய ஸபைக்கு அவர் ஒரு வியாஸம் எழுதியனுப்பினார். அதில் ஆடாதோடை, வேப்பு, உதியம், பட்டை பப்பாளி, மங்குஸ்தான், சீந்தில் முதலிய சரக்குகள் இந்தியாவில் வெகு நாட்களாகவே உபயோகத்தில் இருந்து வருவதாகவும், அவை ஆயுர்வேத நூல்களில் கூறியுள்ளபடி வெகு உபயோகமானவை யென்று பிரிடிஷ் பாரமகோபியாவில் அவற்றைச் சேர்த்துவிடுவது நலமென்றும் அவர் சிபார்சு செய்திருக்கிறார். நமது தேசத்திய அருமையான சாஸ்திரம், நமது தேசீயதொழில், நமது திரவ்ய நிலைமை ஆகிய இவை அழிவதால் பாதகமில்லை யென்று நினைத்தால் நமது தேசத்துச் செல்வம் கிரமக்கிரமமாகப் பெயர்க்கப்பட்டு அனுப்பப்படுவது போலவே, நமது சாஸ்திரத்திலிருந்து விஷயங்களைப் பெயர்த்தெடுத்து பிரிடிஷ் பாரமகோபியாவில் சேர்த்துக் கொள்ள நீங்கள் இடங்கொடுங்கள். நமது சாஸ்திரத்தையும், நமது செல்வத்தையும் அவற்றின் மூலமாய் நமது பண்டைக்காலத்திய நாகரிகமேன்மையையும் பூமியில் நிலைநாட்டவேண்டுவது உங்களுடைய கடமை யென்று தோன்றினால் நாம் கூறிய உபாயங்களைப் பின்பற்றி நடக்கக் கோருகிறோம்.

---

## THE COMMITTEE ON THE INDIGENOUS SYSTEMS OF MEDICINE.

## சுதேச வைத்திய பரிசீலனைக் கமிட்டி.

ஆயுர்வேத-யூனானி வைத்திய முறைகளை ஆதாரக்கிரமத்தில் கவர்ன்மெண்டார் முயற்சி செய்யவேண்டுமென்று 1921-பிப்ரவரி 21உ இல் சென்னைச் சட்டஸபையில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. அதற்கிணங்க கவர்ன்மெண்டார் சென்ற அக்டோபர் 1உ இதுபற்றி விசாரணை செய்ய ஒரு கமிட்டி நியமிக்க வேண்டிய விஷயமாய் ஓர் உத்தரவு பிறப்பித்தார்கள். பத்து கனவான்கள் அதன் பிறகு, அக்கமிட்டியின் அங்கத்தினராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுள் 9-பெயர் உத்தியோகப்பற்றற்றவராவர். இவர்களுள் ஆயுர்வேத வைத்தியர்கள் (ஸம்ஸ்க்ருத-தமிழ் வைத்தியங்கள் கற்றவர்கள்) இருவர், யூனானி வைத்தியர் ஒருவர், ஆங்கில வைத்தியங் கற்றவர்கள் 4-பேர்; மற்ற மூவரும் வைத்தியரல்லாதவர். இக்கமிட்டியானது சென்னை மாகாணத்திலும், இதர மாகாணங்களிலும் உள்ள பிரமுகர்களான அநேகம் சுதேசவைத்தியர்களையும், இதில் அபிமானமுள்ளவர்களையும் விசாரணை செய்யும். கமிட்டியானது தனக்கு அவசியமாகத் தோன்றிய விஷயங்களுக்கெல்லாம் பிரச்னைகள் தயார் செய்து இத்தேசமெங்குமுள்ள முக்கியமான வைத்தியர்களுக்கு அனுப்பி, பெரும்பாலோரிடமிருந்து லிகிதமூலமாகவே விடைகள் ஸம்பாதிக்க முயன்று வருகிறது. அவசியமான சில நபர்களை நேரிலும் வரவழைத்து கமிட்டியார் பரீக்ஷிக்கப் போகிறார்கள். சுதேச வைத்திய முறைகளைப்பற்றிய கேள்விகளுக்கு தேசீயவைத்தியானுஸாரமாகப் பதிலளித்தபோதிலும், அப்பதில் இக்காலத்திய மேனாட்டு சாஸ்திரீய பரிசோதனைக்கு ஒத்து வராவிட்டால் கமிட்டியார் அவ்வித விஷயங்களை அங்கீகரிக்க முடியாதவர்கள் போல, அவர்கள் வெளியிட்டுள்ள பிரச்னபத்திரத்தின் முன்னுரையில் எழுதப்பட்டிருக்கிறது. அதாவது குறிப்பிட்ட ஒரு வைத்திய சாஸ்திர விஷயத்தைப்பற்றிப் பேசும்போது அவ்விஷயம் பிரத்தியக்ஷப் பிரமாணத்தைக் கொண்டோ அநுமானப் பிரமாணத்தைக் கொண்டோ செய்யப்படும் மேனாட்டு ரீதியான ஏதேனும் ஒரு பரிசோதனையினால் பரீக்ஷிக்கக் கூடியதாயிருக்க வேண்டுமென்பது கருத்து.

வெகு நாட்களாக, அநேகந்தடவைகளில் கவர்ன்மெண்டார் ஆயுர்வேத வைத்தியத்தை ஆதரிக்க வேண்டுமென்பதைப்பற்றிப் பொது மேடைகளில் பேசப்பட்டதுண்டு; சட்ட ஸபைகளிலும் இவ்விஷயத்தில் விசேஷ அபிமானமுள்ளவர்களால் பலவிதமான தீர்மானங்கள் இது விஷயமாகக் கொண்டு வரப்பட்டதுண்டு; இது வரையில் அப்பேச்சுக்களும், அத்தீர்மானங்களும் கவர்ன்மெண்டை வழிக்குக் கொண்டுவர முடியாதவைகளாய் பயனற்றுப் போயின. பிறகு சுதேச ஔஷதங்களைப், பரிசீலனை செய்து, அவற்றின் உபயோகத்தைப்பற்றி ரிபோர்டு செய்யும்படி டாக்டர் கோமனை இராஜாங்கத்தார் நியமித்தார்கள். ஆயுர்வேத ஔஷதங்களில் சிலவற்றை அவர் உபயோக முள்ளவையென்று ஆங்காங்கு குறிப்பிட்டிருந்தாலும், பொதுவாக ஆயுர்வேத வைத்திய முறையை அவர் குறைவுபடுத்தியே ரிபோர்டு செய்துவிட்டார். இதைப் பலர் பலவிதமாகவும் கண்டித்து வருகிறார்கள். ஆனால் அவர்மீதாவது ரிபோர்டின் மேலாவது குறை கூறுவதற்கு அவகாசமில்லை யென்பதே நமது கருத்து. ஏனெனில், ஆயுர்வேதத்தை ஆதரிப்பதற்கு உபாயங்கள் தெரிந்து சொல்லுவதற்காக டாக்டர் கோமன் நியமிக்கப்படவில்லை யென்றும், சுதேச ஔஷதங்களில் உபயோகமானவை யேதாவது உண்டா வென்பதைப் பற்றி ரிபோர்டு செய்வதற்காகவே அவர் நியமிக்கப்பட்டிருந்தார் என்றும் கவர்ன்மெண்டார் முன்னதாகவே சட்டஸபையில் ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது விளங்கக் கூறியிருக்கிறார்கள். ஆகவே ஆயுர்வேதத்தை ஆதரித்து அவர் ரிபோர்டு செய்யவில்லை யென்று அவர் மீது குறை கூறுவதற்கு இடமில்லை யென்றே நாம் கருதுகிறோம். ஆகிலும் "ஆயுர்வேத வைத்தியத்தால் ஏதேனும் நன்மையுண்டாகக் கூடுமானால் அது தமது ரிபோர்டின் மூலமாகத்தான் உண்டாகுமென்று நம்பலாம்" என்று நம்மிடம் டாக்டர் கோமன் சொல்லியதையாவது நினைத்துக் கொண்டு அவர் ஆயுர்வேதத்தை ஆதரித்துச் சிறிது எழுதியிருக்கலாம். என்றாலும் தம்மை அக்காரியத்தில்

நியமித்த அதிகாரிகளின் நோக்கத்திற் கிணங்க அவர் நடந்து கொள்ள வேண்டியதாய் விட்டது. பிறகு தேசீய வைத்தியத்தில் அபிமான முள்ள சில கனவான்கள் சட்ட ஸபையில் சென்ற பிப்ரவரி மாஸத்தில் இது விஷயமாகச் செய்த பிரேரணை நிறைவேறி இவ்விதம் ஒரு விசாரணைக்கமிட்டி நியமிக்கப் பட்டதைப்பற்றி நாம் ஒருவாறு ஸந்தோஷப் படலாமெனினும், இக்கமிட்டி எவ்வளவு தூரம் ஆயுர் வேதத்திற்கு நியாயம் செலுத்துமென் கிற விஷயத்தில் நாம் சிறிது ஸந்தேஹப்பட வேண்டியிருக்கிறது. டாக்டர் கோமன் ஒருவர் ஏகதேசத்தில் தயாரித்த ரிபோர்டினால் தேசீய வைத்தியத்துக்கு விசேஷ கெடுதியேற்படக் காரணமில்லை. ஆனால் ஆயுர்வேத-யூனானி-தமிழ் இங்கிலீஷ் வைத்தியர்களைப் பதின்மரைச் சேர்த்து நியமித்த கமிட்டியாரின் ரிபோர்டு சுதேச வைத்தியத்திற்கு அனுகூலமில்லாமற் போய் விட்டால் அதனால் உண்டாகும் தீங்கு மிக பலமானதாயிருக்குமென்று நாம் எச்சரிக்கை செய்கிறோம். அவ்விதம் செய்வதற்கே இக்கமிட்டி கவர்ன்மெண்டால் தந்திரமாக ஏற்படுத்தப் பட்டதோவென்றும் யோசிக்கவேண்டியிருக்கிறது. கமிட்டியின் அமைப்பும், அக்கமிட்டியினால் வெளியிடப்பட்டுள்ள கேள்விகளின் தோரணையும் அவ்வித தீங்கு சுதேச வைத்தியங்களுக்கு உண்டாகுமென்கிற வாஸனையைக் கிளப்புபவையா யிருக்கின்றன. ஒன்று கவனியுங்கள்.

சுதேச வைத்திய ஸம்பந்தமான விசாரணை இக்கமிட்டியினால் செய்யப்பட வேண்டும். குறிப்பிட்ட ஒரு சாஸ்திர விஷயமாகப் பரிசீலனை செய்யவேண்டி ஒரு கமிட்டி நியமிக்கப் படுவதானால், அதில் அச்சாஸ்திரத்தில் விசேஷப்பயிற்சியுள்ளவர்களே நியமிக்கப்படுவது [illegible] கத்தில் வழக்கம், அல்லது வேறு சிலரை சேர்த்தாலும், அக்கமிட்டியில் பெரும்பான்மையோர் விசாரிக்கப்பட வேண்டிய சாஸ்திரத்தில் தேறினவர்களாகவே இருக்க டியாத்

வேண்டும். அநுபவத்திலும் அவ்விதம் செய்வதால்தான் உண்மையில் நியாயம் கிடைக்கும். இப்பொழுது நியமிக்கப்பட்டுள்ள கமிட்டியிலோ இந்த ஏற்பாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. சுதேச வைத்திய பரிசீலனைக் கமிட்டியில் சுதேசவைத்தியர்கள் மூன்று பேரும் மற்றவர்கள் ஏழுபேரும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இந்த ஏழுபேரில் ஆங்கில வைத்தியங்கற்றவர்கள் நான்கு பேர். சுதேச வைத்திய பரிசீலனைக் கமிட்டியில் சுதேச வைத்தியர்களைக் குறைவாகவும் ஆங்கில வைத்தியர்களை அதிகமாகவும் நியமித்திருப்பது என்ன நியாயமோ நமக்கு விளங்கவில்லை. ஆயுர் வேதவைத்தியத்திற்கு ஏற்பட்டுள்ள கஷ்டமான நிலைமைக்கெல்லாம் ஆங்கிலவைத்தியர்களுக்கு மாத்திரம் கவர்ன்மெண்டு மேற்பட்ட மிதமிஞ்சிய செல்வாக்கே காரணம். அவர்களுடைய அதிகார ஆதிக்யத்தினாலேயே கவர்ன்மெண்டார் ஆயுர் வேதத்தை அலக்ஷியம் செய்துவிடும்படியாயிற்று. அப்படியிருக்க இக்கமிட்டியிலும் அவ்வாங்கில வைத்தியங் கற்றவர்களையே எண்ணிக்கையில் அதிகமாய் நியமித்திருக்கிறார்கள். இக்கமிட்டியிலிருந்து, இக்காரணத்தினாலேயே, ஆயுர் வேதத்திற்கு நியாயங் கிடைப்பது கஷ்டமென்று கூறவேண்டியிருக்கிறது. இதில் மற்றொரு விஷயம் கவனிக்கத்தக்கது; அதாவது: மேனாட்டு வைத்தியம் பல விஷயங்களில் ஒழுங்கீனமானது என்று சிலர் சொல்லுவதாகவும் அவ்விஷயம் நன்கு பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று சட்ட ஸபை முதலியதில் கேள்வி பிறந்து அதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்படுவதாகவும் வைத்துக்கொள்வோம். அவ்விதமான கமிட்டியில் மேனாட்டு வைத்தியர்களையும் ஆயுர் வேதவைத்தியர்களையும் சேர்த்து மேனாட்டு வைத்திய சாஸ்திர விசாரணைகளைச் செய்ய நியமிப்பார்களா? அதிலும் ஆயுர்வேத வைத்தியர்களை யாவது, ஆங்கில வைத்தியர்களைக்

குறைவாகவும் நியமிக்க கவர்ன்மெண்டாராவது மேனாட்டு வைத்தியர்களாவது இஷ்டப்படுவார்களா? மேனாட்டு வைத்தியத்தின் ஒழுங்கீனத்தைப்பற்றி எவரேனும் பேச முன் வந்தால், மேனாட்டு வைத்தியர்கள் அதற்கே பொங்கி கிளர்ச்சி செய்யமாட்டார்களா? சுதேச வைத்தியமென்றால் அதைப்பற்றிய பரிசீலனைகளில் எவ்விதமான ஒழுங்கீனம் நடந்தேறிய போதிலும் கேள்விமுறையில்லையென்று கூறும்படியாகத்தான் காரியம் நடந்து வருகிறது. சுதேச வைத்திய பரிசீலனைக்கு ஆங்கிலவைத்தியர்களையும் வைத்தியரல்லாதவர்களையும் மிகுதியாகக் கொண்டு இவ்விதம் கமிட்டி நியமித்தது என்ன ஒழுங்கென்று கேட்டால், ஏதோ ஒரு விதமாக ஸமாதானம் சொல்லி விடுகிறார்கள். கமிட்டியில் சிலர் ஆங்கில வைத்தியர்களாயிருந்த போதிலும் அவர்கள் ஆயுர்வேதத்தில் அபிமான முள்ளவர்களென்றும், ஆகவே அவர்கள் நியாயமாகவே விஷயங்களை விசாரிப்பார்களென்றும் பதில் சொல்லுகிறார்கள். அவர்கள் ஆங்கிலவைத்தியர்களாயிருப்பது என்னவோ உண்மை; ஆனால் அவர்களுக்கு ஆயுர்வேதத்தினிடம் அபிமானமிருப்பதை நிரூபிப்பதெங்ஙனம்? ஏதோ ஒரு விதத்தில் நிரூபிப்பதாகவும் வைத்துக்கொள்வோம். அப்படியாவது சிரோ விஷ்டப் பிராணாயாமம் செய்து ஸமாதானம் கூறுவானேன்? உண்மையில் நியாயம் செய்ய விருப்பமிருந்தால், ஆயுர்வேதத்தில் அபிமானமிருப்பதாகக் கஷ்டப்பட்டு ஊஹிக்கவேண்டியவர்களான ஆங்கில வைத்தியங் கற்றவரை நியமித்ததை விட, வாஸ்தவத்தில் ஆயுர்வேதம் கற்றவர்களையே நியமிக்கவேண்டியது அதிக அவசியமென்று அதிகாரிகள் யோசித்திருக்க வேண்டாமா? மேலும் மிஸ்டர் பாமர் என்பவரையும் இக்கமிட்டியில் ஒரு மெம்பராகச் சேர்த்திருக்கிறார்கள். அவர் வைத்தியரல்ல. சுதேச வைத்தியத்தில் அவருக்கு அபிமானமில்லையென்பதும்



அனைவருக்கும் தெரிந்த விஷயம். ஏனெனில் அவர் சட்ட ஸபையில் தேசீய வைத்திய விஷயமாகப் பிரேரணை வந்தபோது, பல ஸந்தர்ப்பங்களில் அவ்வைத்திய முறையை எதிர்த்துப் பேசியிருக்கிறார். மிஸ்டர் ராமச்சந்திர ஐயரும், மிஸ்டர் கிருஷ்ணராவும் தேசீய வைத்தியங்களை கவர்ன்மெண்டார் ஆதரிக்கவேண்டுமென்று பல ஸமயங்களிலும் போராடியிருப்பதால் இவ்விருவரும் வைத்தியரல்லாதவராயினும் கமிட்டியில் சேர்க்கப்பட்டிருப்பதை ஒப்புக்கொள்ளலாம். மிஸ்டர் பாமரை நியமித்தது மாத்திரம் சிறிதும் விரும்பத்தக்கதாகத் தோன்றவில்லை. இவருக்குப் பதிலாக வேறொரு தேசீய வைத்தியங் கற்றவரை நியமித்திருக்கக் கூடாதா? அப்படிச் செய்திருந்தால், தேசீய வைத்தியர்களின் எண்ணிக்கை கமிட்டியில் ஆங்கில வைத்தியர்களின் எண்ணிக்கைக்குச் சமானமாகவாவது இருந்திருக்குமல்லவா?

நாம் இக்கமிட்டியை நம்புவதில் ஸந்தேஹப்படுவதற்குத் தகுந்தாற் போலவே, அக்கமிட்டி முதன் முதலாகத் தயாரித்திருக்கும் பிரச்னபத்திரத்தில், பிராசீன கிரந்தங்களில் அடங்கிய விஷயங்கள் பிரத்யக்ஷ சோதனை முறைகளால் பரீக்ஷிக்க முடியாதவைகளாயிருந்தால் அவற்றைப் பிரமாணமாக அங்கீகரிக்கமுடியாதென்று கூறப்பட்டிருக்கிறது. அநுபவமுறைப்படி சாஸ்திரப் பிரமாணங்களை அநுஸரித்து சிகித்ஸாக்ரமம் முதலியதை சுதேசவைத்தியர்கள் கூறிய போதிலும், அவற்றை இக்கால ரீதியான பரிசோதனைகளால் நிரூபணம் செய்து காட்டுவது கஷ்டமாயிருக்குமென்று ஒருவாறு ஊஹித்தே இவ்விதமான நிபந்தனையொன்று சேர்க்கப்பட்டதோவென்று நாம் ஸந்தேஹிக்கிறோம்.

ஆயுர்வேத வைத்தியம் பண்டைக்கால முதல் இத்தேசத்தில் அநுபவரீதியாக மிக்க பலன் தந்து வருவது பிரத்யக்ஷமான விஷயம். வைத்திய சாஸ்திரத்திற்குத் தேவையான ஸகல அங்கங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. எக்காலத்திலும் எத்தேசத்திலும் உப

யோகமாகக் கூடிய வகையில் ஆயுர்வேத வைத்தியம் அமைந்திருக்கிறது. மேனாட்டு வைத்தியத்தை கவர்ன்மெண்டார் ஆதரிக்க முன்வந்தபோது இவ்விதமான விசாரணைகளை யெல்லாம் செய்து பார்த்தார்களா? கவர்ன்மெண்டுக்கு இஷ்டமிருந்தால், இவ்விதமான விசாரணைகளின்றியே ஆயுர்வேதத்தை அங்கீகரித்து ஆதரிக்க உடனே முன்வரும். அவ்விதம் செய்ய இஷ்டமில்லாமற் போகவே சுதேச வைத்தியம் முற்றிலும் ஒழுங்கான முறையில் அமைந்திருக்கிறதா வென்று பரிசோதனை செய்து பார்க்க வேண்டியிருக்கிறதென்றும் அதற்காகக் கமிட்டி நியமிக்கிறோமென்றும், அக்கமிட்டியாருடைய ரிபோர்டைப் பார்த்த பின் இதை ஆதரிப்பதா இல்லையா வென்பதைப்பற்றி தீர்ப்பு சொல்லப்படுமென்றும் கவர்ன்மெண்டார் சொல்லி வருகிறார்கள். மேற்பார்வைக்கு உத்தியோகஸ்தரல்லாதவர்களைக் கொண்டே கமிட்டியை நியமித்திருப்பதாகக் கூறிய போதிலும், அக்கமிட்டியின் தன்மையைப் பற்றியும், அதனால் சுதேச வைத்திய முறைக்கு எவ்வளவு நன்மை யேற்படுமென்று எதிர்பார்க்கலாமென்பதைப் பற்றியும் முன்னமே நாம் விளக்கியிருக்கிறோம்.

சுதேச வைத்திய முறைகளைப் பரிசீலனை செய்வதாகவும், அவற்றில் விசேஷ குறைகள் இருப்பதால் அவற்றைச் சீர்திருத்த முயற்சிப்பதுவே வேலை யென்றும் இக்கமிட்டியார் கடைசியாக ரிபோர்டு செய்ய நேரிடுமானால் சுதேசவைத்தியத்திற்கு நேரிடும் தீங்கு சொற்பமாயிராது. ஒருக்கால், இக்கமிட்டி ஏதேனும் சுதேச வைத்தியத்தை ஆதரிக்கும் விஷயத்தில் அநுகூலமாக ரிபோர்டு செய்வதாகவே நினைத்தபோதிலும், இந்தக் கமிட்டியின் ரிபோர்டு கவர்ன்மெண்டினிடம் போன பிறகு, அது இராஜாங்கத்திலுள்ள அதிகாரி வர்க்கத்தாரிடம் பலவிதமான ஆக்ஷேப ஸமாதானங்களுக்கிடையில் நிலைகுலையவேண்டி வரும். கவர்ன்மெண்டில் வைத்திய இலாகாவுக்குத் தலைமை அதிகாரிக்குத் (ஸர்ஜன ஜெனராலுக்கு) தெரியாமல், அல்லது அவருடைய அபிப்பிராயத்தை அலக்ஷியம் செய்துவிட்டு கவர்ன்மெண்டார் சுதேச வைத்திய முறைகளை ஆதரிக்க அவ்வளவு முற்றிலும் தயாராயிருப்பார்களென்று நாம் நம்பிவிடலாமோ? இதற்கிடையில் வைத்தியர்களுக்குள் துரதிருஷ்டவசமாய் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மையையும் அதிகாரிகள் ஒரு முக்கியக் கருவியாக உபயோகித்துக்கொள்ளலாம். இந்த ஸங்கடமான நிலைமைகளெல்லாம் ஒருவாறு தாண்டப்பட்டு சுதேச வைத்தியம் கவர்ன்மெண்டால் ஆதரிக்கப்படுவதாக விருந்தால், கடைசியில் கவர்ன்மெண்டில் பணமுடக்கு இருப்பதாகச் சொல்லி, ஸௌகர்யக் குறைவு காட்டப்படும். ஆகவே கவர்ன்மெண்டாரை இப்பொழுதுள்ள நிலைமையில், சுதேச வைத்தியத்தின் ஆதரவுக்காகக் கேட்டுக்கொண்டு, அவர்கள் அபிமானமில்லாமல் கமிட்டி நியமித்துத் தாறுமாறாக ஏதேனும் ஒரு தீர்மானம் செய்து விடுவதைவிட, கவர்ன்மெண்டார் நமது வைத்திய விஷயத்தில் ஒன்றும் தலையிடாமலிருந்து விட்டால் அதுவே இலாபமாயிருக்குமென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

### ஆமதோஷமென்பதென்ன?

உட்கொண்ட உணவு உடலில் தகுந்தவாறு ஜீர்ணமாகாமற் போனால், அது குடலில் நொதித்துப்போய் விஷச்சத்துக்களை யுண்டு பண்ணுகின்றன. இவ்விஷச்சத்து குடலிலிருந்து இரத்தத்திற் செறிந்து தேகத்திற் பரவும் போது தலைவலி, உணவு முதலியவற்றில் விருப்பமற்றுப் போதல், பித்தமயக்கம், கோபம், க்ருத்ரஸீவாதம், ஆமவாதமென்கிற இல்வாயு முதலியதை யுண்டுபண்ணும் என்று பிராக்டிகல் மெடிஸின் கூறுகிறது. இவ்விஷமே ஆமதோஷம் எனப்படுகிறது.



## CORRESPONDENCE.

## கடிதங்கள்.

### குடற்கோளாறு.

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு:

அன்பார்ந்த ஐயா,

நான் தங்களுடைய வைத்திய கலாநிதிக்கு ஆரம்பம் முதல் ஒரு சந்தாதாரனாயிருந்து வருகிறேன். இதில் வெளியாகிற ஒவ்வொரு விஷயத்தையும் இதுவரையில் நான் விடாமல் படித்து வருகிறேன். பல ஸமயத்திலும் வைத்திய கலாநிதியின் உபயோகத்தை நான் அநுபவத்தில் தெரிந்து கொண்டிருக்கிறேன். அதிஸாரம் போன்ற வயிற்றுக் கோளாறால் என்னிடம் சிகித்ஸைக்கு வந்த ஒரு பிணியாளிக்கு வைத்திய கலாநிதியின் மூலமாய் தெரிந்துகொண்ட அநேகவித முறைகளைக்கொண்டு நான் சிகித்ஸை செய்தேன். தங்களால் வெளியிடப்பட்டுள்ள சார்ங்கதர ஸம்ஹிதையில் கூறப்பட்டிருக்கிற கங்காதர சூர்ணம், தாடிமாஷ்டக சூர்ணம், குடஜாவலேஹம் முதலிய பல ஔஷதங்களையும் தயார் செய்து அவருக்குக் கொடுத்தேன். தாடிமாஷ்டக சூர்ணம் மாத்திரம் சிற்சில ஸமயத்தில் தக்கால சாந்தியாக குணமுண்டு பண்ணுகிறது. இரண்டு தினத்திற்கெல்லாம் மறுபடி வியாதி அதிக தொந்தரவைக் கொடுக்கிறது. கடைசியாகத் தங்களுக்கு இவ்விஷயத்தை விவரமாக எழுதி, இதற்குப் பரிஹாரம் தேடவேண்டுமென்று நிச்சயித்தேன். என் கடிதத்தையும் அதற்குப் பதிலையும் தயவு செய்து கலாநிதியில் வெளியிடக் கோருகிறேன். பிணியாளிக்குள்ள கோளாறு பின்வருமாறு:—எனது ரோகிக்கு வயது 38. நான் இரண்டு மாஸகாலம் அவருக்குச் சிகித்ஸை செய்தேன். அதற்கு முன்பு சுமார் 7-மாஸங்களாக அவருக்கு வயிற்றுப்போக்கு அடிக்கடியும் காணுவதுண்டு. ஆனால் கூடவே மலச்சிக்கலும் அவரைத் தொந்தரவு செய்து வருவதே விநோதமாயிருக்கிறது. பகலில் மாத்திரம் வயிற்றுக்கொட்டல் தினத்திற்கு ஏழெட்டு தடவைக்கு மேல் இருந்து வருகிறது. ஆனால் தாராளமாய் பேதியாவதில்லை. முக்கியமாக இரவு நேரங்களில் பேதியாகக் கூடிய பலமான தொந்தரவுகள் ஏற்பட்டு தூக்கத்திலிருந்து எழுந்திருக்கிறார். வெகு துரிதமாயோடி மல பாதைக்கு உட்கார்ந்ததும், பெரிய முக்கலும் கடுப்புமாய் ஸங்கடப்படுகிறாரே யன்றி சிறிதும் மலம் வெளிப்படுவதில்லை, கொஞ்சம் பொட்டுப் பொட்டாக இரத்தம் மாத்திரம் கடைசியாக விழுகிறது. இவ்விதமான தொந்தரவு இரவில் இரண்டு மூன்று முறையும பகலில் அடிக்கடியும் காண்கிறது. முதலில் கிரஹணியென்றும். பிறகு சீதபேதி யென்றும் தீர்மானித்து அதனதற்குத் தகுந்த சிகித்ஸைகளைச் செய்து வந்தேன். மலம் தாராளமாக தினத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவைக்கு மேல் வெளியாவதில்லை. இதற்கு என்ன சிகித்ஸை செய்தால் குணமுண்டாகும்?

இ. ஜி. சூர்யப்பிரகாசம்.

விடை:—தாங்கள் விவரித்துள்ள விஷயங்களை நன்கு யோசித்ததில் அது ஒன்று இரத்தார்சஸ் (இரத்த மூலம்) ஆக இருக்கவேணும், அல்லது குல்மரோகமா யிருக்கவேணும் என்று தோன்றுகிறது. வெளிப்புறத்தில் மூலமுளை காணவிட்டாலும், உள் மூலம் இருக்கின்றதாவென்று நன்கு பரிசோதித்துப் பார்த்து விடுங்கள். மூலரோகமென்று தெரிந்தால், முதலில் சிறிது ஆமணக் கெண்ணெய் கொடுத்து விரேசனம் செய்வித்து, அப்பால் ஸூரண புடபாகம் என்கிற ஔஷதத்தை காலையிலும் மாலையிலும் தினத்திற்கு இரண்டு தடவையாகக் கொடுக்கலாம். இரவில் படுக்கைக்குப் போகையிலும், பகலிலும் த்ரிபலாகுக்குலுவையும் சாப்பிடவேண்டும். அர்சஸ் இல்லையென்று நிச்சயமாகத் தெரிந்துவிட்டால், வயிற்றில் குல்மரோகம் உண்டாவதாக நிச்சயிக்கலாம். இதற்கு காங்காயன குடிகையை தசமூலக்வாதத்தின் அனுபானத்தோடு, தினத்திற்கு மூன்று அல்லது நான்கு முறை வீதம் சில காலம் கொடுத்து வருவது உசிதமாகும். ஒரு வாரத்திற்கு ஒரு தடவை த்ரிபலாக்வாதத்தினால் நிருஹவஸ்தியைப் பிரயோகித்து வருவதும் நலம். பிணியாளியின் வயிற்றின் மீது உஷ்ண ஜலத்தினால் தினத்திற்கு இரண்டு தடவை ஒற்றடம் கொடுத்து வரலாம். குல்மத்தில் திரவமான உணவுகளையே மிகுதியாகக் கொடுக்கவேண்டும். ப-ர்.

---

### ஆயுர்வேத பரீக்ஷைகள்.

வைத்திய கலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு.

ஐயா,

நானும் வேறு சிலரும் ஆயுர்வேதம் கற்று, அதற்கேற்பட்டுள்ள பரீக்ஷைக்கு வர விருப்பமுள்ளவரா யிருக்கிறோம். அது ஸம்பந்தமாகக் கீழ்க்கண்ட விஷயங்களை நான் அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. தயவு செய்து இவ்விஷயத்தை வைத்திய கலாநிதியின் மூலமாய் வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். 1. சென்னையில் ஆயுர்வேத கலாசாலை நடந்து வருகிறதா? 2. அதில் ஸம்ஸ்க்ருதம் தவிர வேறு பாஷைகளில் கூட சாஸ்திரம் கற்பிக்கப்படுகிறதா? 3. எத்தனை வருஷம் படிக்க வேண்டும்? 4. மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறதா? 5. காலேஜில் சேராமலே தனியாகப்படித்து பரீக்ஷைக்கு வரலாமா? 6. அப்படியானால் பாடபுஸ்தகங்கள் எவை? 7. பரீக்ஷை எப்பொழுது நடைபெறுகிறது? 8. கலாசாலையில் சேர வேண்டுமானால் அதற்கு எது ஸமயம்?

ஏ. ஸாம்பசிவன்.

விடை:—உங்களுடைய விருப்பம் பாராட்டத்தக்கது. 1. ஆம், நடந்து வருகிறது. 2. தமிழிலும் தெலுங்கிலும் பிரத்தியேகமாக வாய்ப்புகள் உண்டு. 3 நாலு வருஷங்கள் படித்து அப்பால் பரீக்ஷை கொடுக்கவேண்டும். 4 நல்ல யோக்யதையுள்ள வரும். ஏழையாயிருப்பவருமான சில மாணுக்கருக்கு மாத்திரம் ஆங்காங்குள்ள தனவான்களுடைய ஸஹாயத்தைக் கொண்டு பத்து ரூபாய்க்குக் குறையாமல் உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருவதாய் அறிகிறோம். 5 இங்கு பாரத ஆயுர் வேதவித்யாபீட பரீக்ஷைகளுக்கு ஸொந்தத்தில் படித்து பிரவேசிக்கலாம். 6 பிஷக், ஆயுர்வேத விசாரத, ஆயுர்வேதாசார்ய என்கிற பரீக்ஷைகள் உண்டு; ஒவ்வொன்றுக்கும் பல வேறுபாட புஸ்தகங்கள் உண்டு; அவற்றின் விவாத்தைப்பற்றி வித்யாபீட காரியதரிசிக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். 7. பரீக்ஷை எப்ரல் மாஸத்தில் நடைபெறும். 8 கலாசாலையில் சேரவேண்டிய காலம் முதலியவைதத் தெரிந்துகொள்ள கலாசாலைத் தலைவருக்கு எழுதிக் கொள்ளவும் ப-ர்.

---

## ச்யவநப் பிராசம் முதலியது.

கனம் வைத்தியகலாநிதி பத்திராதிபர் அவர்களுக்கு

ஐயா,

1. வெளியிலுள்ள அநேக ஆயுர்வேத வைத்திய சாலைகளில் "ச்யவநப் பிராசம்" என்னும் ஒரு மருந்து விற்கிறார்களே. அந்த லேஹ்யம் என்னது? அதில் சேர்க்கப்படுபவை யாவை?

2. வெட்டை ரோகம் முதலியதால் தாது குன்றி விடுகின்றதே. அதினுலேற்படும் நரம்புத்தளர்ச்சி முதலிய கோளாறுகளை நிவர்த்திசெய்வதற்கு சார்ங்கதர ஸம்ஹிதையில் என்ன மருந்துகள் கூறப்பட்டிருக்கின்றன? தயவுசெய்து விவரம் அறிவிக்கக் கோருகிறேன்.

ஸ்ரீ. கண்ணுசாமிப்பிள்ளை வைத்தியர்.

விடை:—1. ஆயுர்வேதத்தில் பிரதிபாதிக்கப்பட்டுள்ள பிரஸித்தமான மருந்துகளுள் ச்யவநப் பிராசம் என்பது ஒன்று. சார்ங்கதர ஸம்ஹிதையின் மத்யம கண்டம் 8-வது அத்தியாயத்தில் 'ச்யவநப் பிராச-லேஹ்யம்' என்கிற தலைப்பின் கீழ் இந்த முறை விளங்கக் கூறப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். "ஆர்யன் பார்மஸி நெ. 7 அகியப்ப முதலி தெரு, வேப்பேரி" என்கிற விடத்தில் உயர்ந்த ச்யவநப் பிராசம் கிடைக்கும்.

2. வெட்டை ரோகம் என்பது ஆயுர்வேதத்தில் மேஹரோகம் என்கிற வரிசையில் சேர்ந்தது. உபதம்சம் என்று ஆயுர்வேதத்தில் வழங்கப்படுவதையும் வெட்டை யென்கிறார்கள். இதற்கு மஞ்ஜிஷ்டாதி க்வாதம், காஸீஸாதி க்ருதம், சந்திரப்ரபாகுடிகா, கோக்ஷுராதிகுக்குலு தசமூலாரிஷ்டம் முதலியவை சார்ங்கதர ஸம்ஹிதையில் தகுந்த ஔஷதங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. அந்த மேஹ வியாதியில் காணும் தாதுநஷ்டத்திற்கு வாஜீகரண ஔஷதங்களை அப்பால் உபயோகிக்கலாம் இதற்கு வஸந்தகுஸுமாகர ரஸம், ஸ்வர்ண பஸ்மம், ஆகாரகராபாதி சூர்ணம், காமதேவ க்ருதம், கூஷ்மாண்ட லேஹ்யம் முதலியவை ஏற்ற ஔஷதங்கள். இவையும் சார்ங்கதர ஸம்ஹிதையில்விவரிக்கப்பட்டிருக்கின்றன. ப-ர்.

# DRUGS AND THERAPEUTICS.

## ஔஷதங்களும் சிகித்ஸையும்.

### தசமூல தைலம்.

இது ஆயுர்வேதக் கிரந்தங்களில்பிரஸித்தமாயுள்ள சிறந்த முறைகளில் ஒன்று. தசமூலதைலம் வாத கோபத்தால் நேரிடும் காதிரைச்சல், காதுமந்தமாதல் முதலிய செவியைப்பற்றிய கோளாறுகளில் வெகு உபயோகமானதென்றும், சிரஸ்ஸைப்பற்றிய (வாததோஷ ஸம்பந்தமான) வியாதிகளில் சிறந்த பலன் தருகிறதென்றும் சாஸ்திரத்தில் (பைஷஜ்ய ரத்னாவலீ, ஸாரகௌமுதீ முதலிய வற்றில்) கூறப்படுகிறது. இவ்வௌஷதம் எஸ். கே. பி. டி. ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் வாதரோகத்தினால் (அர்தித வாதம், க்ருத்ரஸீவாதம் முதலியதால்) வருந்திய சிலருக்கு உபயோகிக்கப்பட்டது. ஒரு தேக்கரண்டியளவாக தினத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை உள்ளுக்கு உபயோகிக்கச் செய்ததோடு, நோய் கொண்ட பாகங்களில் மேலுக்கும் மர்தநம் செய்யும்படி யேற்பாடு செய்யப்பட்டது. இதனால் அர்திதம் முதலிய வாதநோய்கள் குணமாவதாக அநுபவத்திலும் பரிசோதனையின் மூலமாகத் தெரியவந்தன. மேலும் காது நோய்களிலும் (கர்ணநாதம், காதுமந்தமாதல் முதலியவற்றிலும்) இத்தைலத்தைப் பிரயோகித்து வந்தால், அக்கோளாறுகள் க்ரமமாக நிவாரணமாவதாகவும் அநுபவத்தில் தெரிந்துகொள்ளப் பட்டிருக்கிறது. தசமூலதைல முறை பின்வருமாறு;—

| | | | |
|---|---|---|---|
| சிறு மல்லிகை வேர் | பலம் | 6 | |
| பெரு மல்லிகை | ,, | ,, | ,, |
| கண்டங்கத்திரி | ,, | ,, | ,, |
| சிறுவழுதுணை | ,, | ,, | ,, |
| நெரிஞ்சி | ,, | ,, | ,, |
| பில்வம் | ,, | ,, | ,, |



| | | | |
|---|---|---|---|
| தழுதாழை | ,, | ,, | ,, |
| வாகை | ,, | ,, | ,, |
| குமிழன் | ,, | ,, | ,, |
| பாதிரி | ,, | ,, | ,, |
| புங்கம் | ,, | ,, | ,, |
| நொச்சி | ,, | ,, | ,, |
| பெருவாகை | ,, | ,, | ,, |
| ஊமத்தை | ,, | ,, | ,, |

இவற்றைக் கஷாயமாகக் காய்ச்சவும். (இவற்றிற்கு 64-சேர் ஜலம் சேர்ந்து 16-சேராகச் சுண்டக் காய்ச்சி வடிக்கட்டிக் கொள்ளவும்.) இக்கஷாயத்தில் 4 சேர் எண்ணெய் சேர்த்து, முற்கூறிய வேர்களையே வகைக்கு 2-பலம் வீதம் இடித்து கல்கமாகச் சேர்த்துக் காய்ச்சவும். ஜலத்தின் அம்சம் முடியவும் சுண்டிய பிறகு, நுரைகிளம்பியதும் இறக்கி, தைலத்தை வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

---

### நவாசாரம் தேள் முதலியது கொட்டுவதைப் போக்க.

விஷமுள்ள பூச்சிகள், அதாவது தேனீ, குளவி. தேள் முதலியவை கொட்டுவதால் உண்டாகும் வேதனையை நிவ்ருத்தி செய்ய நவாசாரம் அல்லது நவசாரவாயு வெகு உபயோகமானது. நவாசாரத்திராவத்தைக் கொட்டிய விடத்தில் ஊற்றி, சிலநேரம் அந்த பாகத்தை அந்த நீரில் அமிழ்த்தி வைத்திருந்தால், உடனே வெகு குளிர்ச்சியான ஓர் உணர்ச்சி யுண்டாகும். கடியுண்டவன், கடிவாயில பனிக்கட்டி வைத்திருப்பதுபோல உணருகிறான். அதனால் வேதனை தணிவடைந்து பிணியாளி ஸௌக்யமடைந்ததாகத் தானே உணருவான். காட்டீ உடம்பெல்லாம் கொட்டி, அதனால கடுமையாக வருந்திய பிணியாளர்களில் பலருக்கு இவ்வெளிய ஔஷதத்தை (குணத்தில் மேன்மையானதை)ப் பிரயோகித்து வெகு திருப்திகரமான குணம் உண்டாயிருப்பதை நான தெரிந்து கொண்டிருக்கிறேன்:—டாக்டர் P. B. முககாஜி. (தர்ப்பங்கா).

---

### யூகலிப்டஸ் இலையும் மதுமேஹமும்.

டாக்டர் பியர் (Peyre) என்பவர் அடியில் வருமாறு "லீ நௌ வாக ஜானல் டெஸ் மெடிகல்ஸ்' என்கிற பிரெஞ்சு வைத்தியப் பத்திரிகையில் எழுதுகிறார்:—மதுமேஹத்திற்கு வழக்கமாகச் செய்யப்படும் ஸாதாரண பரிஹார முறைகளைச் (Methous of anti-diabetic treatment) செய்து பலனில்லாமற் போகவே, பிறகு பரீக்ஷார்த்தமாக யூகலிப்டஸ் இலையைக் கஷாயமிட்டு ஒரு ரோகிக்குக் கொடுத்தேன். அநேக தவிருமலலாமல அதிக முதாசசு பெருமையுமான, அளவற்ற பெரியவைகளாயுமுள்ள எட்டு அல்லது பத்து யூகலிப்டஸ் இலைகளைச் சிறிது ஜலத்துடன் சேர்த்து, இருபது நிமிஷநேரம் கொதிக்கவைத்து, வடிக்கட்டி, அக்கஷாயத்தை அரை கோப்பை அளவாக மாலைநேரங்களில் பிரதிதினமும், சிலநாள் காலையிலும் உட்கொள்ளக் கொடுத்து வரப்பட்டது. (நன்றாகக் கொதித்தபிறகு, நல்ல ஸாந்த்ரமான பாகம வருகையில் இறக்கி, சிறிது ஆறியபிறகு வடிக்கட்டி சர்க்கரை முதலியது சேர்க்காமலே உட்கொள்ள வேண்டும்.) ஸாதாரணமாய் மதுமேஹத்திற்கு எவ்வித பத்தியம் வழக்கமோ அதே பத்தியக்ரமந்தான். அநுஸரிக்கப்பட்டது. இக்கஷாயம் ஒரு வாரம் உபயோகிக்கப்பட்ட பிறகு மூத்திரம் இறங்குவது நூற்றுக்குப் பத்திலிருந்து நூற்றுக்கு மூன்று பாகமாகவும், அதில அடங்கிய சர்க்கரை 100 கிராமிலிருந்து 30 கிராம் அளவாகவும் குறைந்து விட்டது. இரண்டு வாரம் இச்சிகிச்சை செய்யப்பட்ட பிறகு சர்க்கரை முப்பதிலிருந்து பத்து கிராம அளவுக்குக் குறைந்து விட்டது. அதன் பிறகும் இச்சிகித்ஸை தொடர்ந்து செய்யப்பட்டு வர, ஐந்தாறு கிராமுக்கு உட்பட்ட அளவுக்குக் குறைந்துப் போயிற்று. பழ வாக்கங்கள் உபயோகிப்பதை பிணியாளி விட்டுவிட்ட பிறகு, சர்க்கரை மூத்திரத்திற் சிறிதும் இல்லாமற் போய் விட்டது. ஐம்பத்தெட்டு வயதுள்ள ஒரு மதுமேஹரோகியும் யூகலிப்டஸ் இலைக் கஷாயத்தைத் தொடர்ந்து உபயோகித்ததில், அவருடைய வியாதி நிவாரணமானதோடு, அவரது தேஹ வன்மையும் முன்னிலும் அதிகரித்தது."

---

### விக்கலில் லவங்காதி சூர்ணம்

வாத-கபஜ்வரம், மஸூரிகா முதலியவை ஒவ்வொரு ஸமயம் பெருவாரியாகப் பரவுவது போலவே விக்கலும் சில காலத்தில் அதிகமாகப் பரவக்கூடுமென்று இப்பொழுது அநுபவத்திற் பார்த்து வருகிறோம். வாத-கபஜ்வரம் விசேஷமாகப் பரவியிருந்த போது விக்கலும் முமமரமாயிருந்ததுண்டு. சென்ற வருஷத்திலும அக்டோபர் நவம்பர்களில் பலர் கடுமையான விக்கல் ஏற்பட்டு கஷ்டப்பட்டது நமக்குத் தெரியும். இப்பொழுது ஸமீபத்தில்கூட இதனால் பீடிக்கப்பட்டவர் சிலருக்கு நாம எஸ். கே. பி. டி. ஆயுர்வேத ஆஸ்பத்திரியில சிகித்ஸை செய்ய நேரிட்டது. இதற்கு முன்பும அவ்விதம் சிகித்ஸைத்துப் பார்த்திருக்கிறோம். இவர்களுக்கு லவங்காதி சூர்ணம் வேளைக்கு 8-நெல்லெடை வீதம் தினத்திற்கு 4-அல்லது 6-வேளை உட்கொள்ளக் கொடுக்கப்பட்டது. பலருக்கு ஒரு தினத்துக்குள்ளேயே இது குணந் தந்தது. சிலருக்கு இத்துடன் சிருங்கபஸ்மம் (மான்கொம்பு பஸ்மம்) இரண்டு அல்லது மூன்று குன்றுமணி எடை சேர்த்துக் கொடுத்த பிறகு விக்கல் நின்று விட்டது. இம்மருந்துகளை யுபயோகிப்பதற்கு முன்பு ஆமணக்கெண்ணெய் கொடுத்து நன்கு விரேசநம செய்வித்த பிறகு, லவங்காதி சூர்ணம விக்கலை நன்கு நிவாரணம் செய்வதாகவும் தெரியவந்தது. (லவங்காதி சூர்ணம சார்ங்கதர ஸம்ஹிதையில விவரிக்கப்பட்டுள்ளது.)

## காயம் கர்ப்பஸ்ராவத்தைத் தடுக்கும்.

ஒரு ஸ்த்ரீக்கு ஒரு முறை கர்ப்ப ஸ்ராவமோ, கர்ப்ப பாதமோ ஸம்பவித்து விட்டால், பிறகு அவ்வித ஸம்பவம் கருத்தரிக்கும் போதெல்லாம் உண்டாவது பெரும்பாலும் வழக்கமாய் விடுகிறது. இதைத் தடுப்பதற்கு, வைத்திய நிபுணர்கள் சரீராரோக்கியத்தைக் காப்பாற்றுவதும், கர்ப்பாசயத்தை பலப்படுத்துவதும் அவசியமென்று அபிப்பிராயப்பட்டு, கர்ப்பாசயத்தைச் சரியான நிலைமையில் வைப்பதற்கு வெவ்வேறு ஔஷதப் பிரயோகங்களையும், வெவ்வேறு உபாயங்களையும் செய்து வருகிறார்கள். ஆனால் ஸாதாரணமாய் பெருங்காயத்தை உணவுகளில் அத்தகைய ஸ்த்ரீகள் விசேஷமாகக் கலந்து உபயோகித்து வருவார்களானால், கர்ப்பாசயம் பலப்பட்டு, கர்ப்பஸ்ராவமோ கர்ப்ப பாதமோ நேரிடாமலிருக்கும் என்று அறிகிறோம். நமது வைத்திய நண்பர்களும் பிறரும் இதை அநுபவத்தில் பரிசோதித்துப் பார்ப்பாராக. [குறிப்பு: கர்ப்பம் தரித்த நான்காவது மாஸத்துக்குள் கர்ப்பம் வெளிவந்துவிட்டால் அது கர்ப்பஸ்ராவம் எனப்படும். ஐந்தாவது ஆறாவது மாஸங்களில் வெளியாய் விடுவது கர்ப்பபாதம் எனப்படும். ப-ர்.]

## கடுகெண்ணெயைத் தேய்த்துக் கொள்ளுதல்.

இந்தியாவில்—விசேஷமாய் வட இந்தியாவில்—அநேக விடங்களில் ஸ்நானம் செய்வதற்கு முன்பு கடுகெண்ணெயை உடம்பெங்கும் தேய்த்துக் கொள்வது வழக்கத்திலிருந்து வருகிறது. இவ்வழக்கத்தை நாம் அதிகமாகத் தூண்டுவது நலம். சர்மத்தை மிருதுவாகவும் ஸ்வச்சமாகவும் வைப்பதற்கு அவசியமாய் சர்மத்தினுள்ளிருந்து கசியும் சில திரவங்களை இந்த எண்ணெய் தாராளமாக உண்டு பண்ணக் கூடியது. சர்மத்திற்குப் பளபளப்பையும் ஆகவே பொதுவில் தேஹகாந்தியையும் விருத்தி செய்ய இது ஏற்ற வஸ்து. சர்மத்தின்மீது சொறி சிரங்குகளுக்குக் காரணமான தோஷங்கள் (ஸூக்ஷ்மகிருமி முதலியவை) தங்கினால், அவற்றை அழிப்பதற்கு இந்த எண்ணெய் வெகு உபயோகமானது; ஆகவே சரும வியாதிகள் வராதபடி தடுக்கக் கூடியது. சோர்வடைந்த தசை நார்களையும், நோவெடுத்த அவயவச் சதைகளையும் களைப்பாறச் செய்யவேண்டுமானால் சிறிது கடுகெண்ணெயைத் தடவி அவ்வயவங்களை உருவித் தேய்த்தால் ஸுகமுண்டாகும்.

# NOTES AND ITEMS OF INTEREST.

## பலவகைக் குறிப்புகள்.

### எல்லா இந்திய ஆயுர்வேத மஹா மண்டலம்.

மேற்படி மஹாமண்டலத்தின் பதின் மூன்றாவது ஆயுர்வேத வைத்திய ஸம்மேளனம் அடுத்த பெப்ருவரி 13, 14, 15, 16, 17, இத்தேதிகளில் இராஜமஹேந்திரவரத்தில் நடைபெறுமென்றும், அத்துடன் வைத்திய பொருட்காட்சியும் நடத்தப்படுமென்றும் நமக்கு மஹா மண்டலத்தின் மந்திரி அறிவிக்கிறார்.

### தேசீய வைத்திய விமர்சகஸமிதி.

சுதேச வைத்திய முறைகளைப் பரிசீலனை செய்து, அவற்றை ஆதரிக்கக்கூடிய முகாந்தரங்களைப் பற்றி ரிப்போர்டு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஸமிதி (கமிட்டி) கல்கத்தா முதலிய வடதேசங்களிற் சென்று விசாரணைகளைச் செய்துவிட்டு நாளது டிஸம்பரில் திரும்பி வருமென்றும், அப்பால் மார்ச்சு மாஸத்தில் சென்னையில் பிரதானமான வைத்தியர்களை வரவழைத்து நேரில் விஷய விசாரணைகள் நடத்தப்படுமென்றும் அறிகிறோம்.

### பம்பாயில் சுதேச வைத்திய பரிசீலனை.

ஆயுர்வேத-யூனானி வைத்திய முறைகளைப் பரிசீலனை செய்து அவற்றை ஆதரிக்கும் விஷயமாய் ரிபோர்டு செய்யும்படி ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டுக்கு யோசனை சொல்லப்பட, கமிட்டி அவசியமில்லையென்றும், ஒரு வைத்திய சாஸ்திரவல்லோரை அவ்வேலையைச் செய்ய நியமித்தால் போதுமென்றும் தீர்மானிக்கப்பட்டு, பெலஷின் பெற்ற ஓர் ஐ. எம். எஸ். உத்தியோகஸ்தர் இப்பரிசீலனைக்காக நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த ஏற்பாடு, சென்னை கவர்ன்மெண்டார் முன்பு டாக்டர் கோமனை நியமித்து, சுதேச ஔஷத பரிசீலனை செய்ததற்கு ஏற்றதாயிருக்கிறதென்பது நேயர்களுக்குச் சொல்லாமலே விளங்கும்.

### தேஹதாதுக்களின் உற்பத்தியும் அழிவும்.

நமது தேஹம் வேறு அவயவயான தேஹங்களை உற்பத்தி செய்வதும், அழிவதும் இயல்பு. இயற்கையான இந்த இயக்கம் நமது தேஹத்திலும் எப்பொழுதும் நடந்து வருகிறது. அதாவது தேஹத்தில் ஒவ்வொரு தாதுவின் நுண்ணறைகளும் (cells) அடிக்கடி அழிவதும் உற்பத்தியாவதுமாயிருந்து வருகின்றன. 'அமெரிக்கன் பாரமஸூடிகல் அஸோஸியேஷன் ஜர்னல்' என்கிற வைத்திய பத்திரிகையில் வெளியாயுள்ள ஒரு குறிப்பு இதற்கு நிதர்சனமாகும். "அமெரிக்க தத்துவசாஸ்திரஸங்கத்தின (American Philosophical Society) ஒரு கூட்டத்தில் ஜீவதசையோடுள்ள தாதுக்களின் நுண்ணறைகளின் உற்பத்தி-வர்க்கக் கிரமம் பிரத்யக்ஷத்தில் காட்டப்பட்டது. ஒரு கோழிக்குஞ்சின் இருதயச் சதையானது ஒன்பது வருஷங்களாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. அதைப்பற்றிய பிரஸ்தா



வம் அக்கூட்டத்தில் டாக்டர் ஏ. ஜே. காரெல் (Dr. Alexis J. Carrel) என்பவரால் கொண்டுவரப்பட்டது. 1912-ம் வருஷத்தில் எடுத்து வைக்கப்பட்ட ஒரு கோழிக்குஞ்சுக்கருவின் இருதயச்சதையினுடைய ஒரு துண்டில் ஜீவதசையுடன் நுண்ணறைகள் இருந்துவருவது திரையில் டாக்டர் காரெல் என்பவராலும் அவரது ஸகாக்களாலும் காட்டப்பட்டது. அச்சதையின் நுண்ணறைகள் வளர்ந்து வருகையில் சுற்றிலுமுள்ள பழைய நுண்ணறைகள் சிதைந்து கொண்டே திரண்டு வருகின்றதென்றும், 48-மணி ஸாவகாசத்திற்கு ஒரு முறை சிதைவுண்ட திரட்சியை, புதிதாகக் கிளம்பும் நுண்ணறைத் திரட்சியிலிருந்து தாம் பிரித்து எறிந்து விடுவதாகவும் அவர்கள் விளக்கிக் காட்டினார்கள். இக்கூட்டம் நடைபெறுகையில் அந்த இருதயச் சதை 2500-வது ஜனனத்தலைமுறை பெற்றிருந்ததாகக் கூறப்பட்டது. இவ்வற்புதமான ஜீவதத்துவம் பிரத்தியக்ஷத்தில் காட்டப்பட்டபோது அங்கிருந்த அனைவரும் ஆச்சரியமாக அதை நோக்கியதோடு, இச்சாஸ்திரதத்துவ நுட்பத்தை மிகவும் மெச்சினார்கள்."

### சூதகசன்னிக்கு ஒரு சிறந்த பரிசோதனை.

சூதகசன்னி யென்று ஸாதாரணமாய் வழங்கப்படும் ஸ்த்ரீகளுக்கு உண்டாகும் ஒருவித ஸந்நிபாதக்கோளாறில் முக்கிய பரிசோதனா முறை யொன்றை டாக்டர் டி. டி. ஆல்டேர்மான் (Dr. T. D. Alderman, M. D, of Brooklyon) என்பவர் கண்டுபிடித்து பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார்:—சூதக சன்னி யென்று தீர்மானிப்பதற்கு நான் கூறும் பரிசோதனையை ஏற்கனவே எவரேனும் அறிந்திருப்பாரோவென்பது எனக்கு ஸம்சயமாகவே இருக்கிறது. இந்த வியாதியுள்ள ஸ்த்ரீகளுடைய தொண்டையிலுள்ள உள்நாக்கு பரிசவுணர்ச்சியை இழந்து விடுகிறது என்கிற விஷயம் எவருக்குத் தெரிந்திருக்கப்போகிறது? இதை வெகு எளிதில் பரிசோதிக்கலாம். உமது விரலை அப்பிணியாளியின் வாயை நன்றாகத் திறந்து தொண்டையில் கொண்டுபோய் நாக்கின் அடிப்புறத்தை அழுத்தித் தொடவும். உள்நாக்கை நீர் அழுத்தலாம்; இங்கும் அங்குமாய் அசைக்கலாம்; உமது நகத்தினால் நன்றாகக் கீறலாம்; அப்படித் தொந்தரவு செய்தும் அப்பிணியாளி அதை உணருவதில்லை. தொண்டையை ஸாதாரண காலத்தில் தொட்டால் உண்டாகக்கூடிய ஓக்காளம் முதலியது இந்த வியாதியுள்ளவருக்கு உண்டாவதில்லை. சூதகசன்னி உண்மையில் உண்டென்பதை நிரூபிப்பதற்கு இது நிச்சயமான குறியாகும்."

### ஜப்பானில் வீடுகளுக்கு வெள்ளையடித்தல்.

டோக்கியோ முதலிய ஜப்பானிலுள்ள பெரிய பட்டணங்களில் வீடுகளைச் சுத்தம் செய்யும் வேலை வீட்டுச் சொந்தக்காரரைச் சேர்ந்ததாயில்லை. போலீஸ் அதிகாரிகளால் இவ்வேலை ஒழுங்காக நிறைவேற முயற்சி யெடுத்துக் கொள்ளப்படுகிறது. எந்த வீடானாலும், சரி, (அது வெகு ஸாதாரண சிறிய வீடானாலும், அநேகம் பேர் வஸிக்கும் அரண்மனையானாலும்) வருஷந்தோறும் இரண்டு முறை ஒவ்வொன்றும் சுத்தம் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு வீதியிலுமுள்ள வீடுகளைச் சுத்தம் செய்யும் நாளுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைவருக்கும் தெரியுமாறு விளம்பரம் செய்யப்படும். வீடுகளைச் சுத்தம் செய்வதற்குக் குறிப்பிட்ட நாள் வந்ததும், கோவிற் பூசாரி முதல் அன்றைய வேலையை நிறுத்திக் கொண்டு, தம் தம் வீட்டிலுள்ள சாமான்களைத் தட்டி, வீட்டு முற்றங்களில் ஒழித்துப் போடுவார்கள். முற்றமில்லாதவர், தெருவில் கொண்டு வந்து, வீடு சுத்தம் செய்யப்படுகிற வரையில், சாமான்களை அங்கேயே வைத்து விட வேண்டும். இந்த சாமான்களை யெல்லாம் மீண்டும் உள்ளே அந்தந்த விடங்களில் கொண்டுபோய் வைப்பதற்கு முன்பு, வீட்டுச் சுவர்களும், தரையும், மற்ற எல்லாப் பாகங்களும் நன்றாகச் சுத்தம் செய்யப்பட்டுப் போக வேண்டும். சுத்தி வேலை நன்றாக நடந்ததும், போலீஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் வந்து வீடு ஒழுங்காகச் சுத்தம் செய்யப்பட்டதா வென்று மேற்பார்வை பார்ப்பார். கடைசியாக, வீட்டுக்காரன், போலீஸ் அதிகாரியினிடமிருந்து, வீடு முற்றிலும் சுத்தமாய்விட்டது என்பதாக ஒரு ஸர்டிபிகேட்டைப் பெறுகிறான். உடனே, வீட்டின் வாயிற்பக்கத்தில் "cleaned" (சுத்தம் செய்யப்பட்டது) என்று ஒரு நோடீஸ் ஒட்டப்படும். இதன் பிறகு சாமான்களை வீட்டுக்குள்கொண்டுபோய் வைத்துக்கொள்ளலாம். ஒரு வீதியிலுள்ள ஒவ்வொரு வீடும் சுத்தம் செய்யப்பட்டு, ஒவ்வொரு வீட்டிலும் "சுத்தம் செய்யப்பட்டது" என்கிற நோடீஸ் போட்டு முடிந்துவிட்டால், இறுதியில் "street is cleaned" (வீதி முழுதும் சுத்தம் செய்யப்பட்டது) என்று அவ்வீதியின் கோடியில் ஒரு நோடீஸ் போடப்படும்.—New York Medical Journal.

### தலைச்சுற்றல் அல்லது மயக்கத்துக்குப் பரிஹாரம்.

ஒருவனுக்குத் தலைச்சுற்றல் அல்லது மயக்கம் உண்டானால் அவனுக்கு மூளையில் இரத்தம் நன்றாகப் பரவவில்லை யென்றறிக. மேலும் சுவாஸாசயத்தினுள் பிராணவாயு குறைவாகவும் இருக்கு மென்றுணர வேண்டும். உடனே அம்மனிதனை ஒரு பலகையின் மீது மல்லாகப் படுக்கவைக்கவும். அவனது தலை பின் புறமாகக் கீழே தொங்கும்படி சாய்ந்திருக்கும். மேலே போர்த்துள்ள சட்டை முதலியவைகளை யெல்லாம் அவிழ்த்து விட்டு விடவும். அருகில் அநுகூலம் சேரவில் சுத்தமான காற்று அம்மனிதனுக்குக் கிடைக்கும்படிச் செய்யவும். முகத்தின்மீது குளிர்ந்த ஜலத்தை விடவும். மல்லாப்படுக்கச் செய்து தலையைப் பின்புறமாகச் சாய்த்துவிடுவதால், மூளைக்கு இரத்தம் அதிகமாய் ஓடுவதோடு மார்பு அகன்று சுவாஸாசயங்களிலும் சுத்தவாயு தாராளமாகப் பிரவேசிக்கும்.—Good Health.

# அஷ்டாங்க ஹ்ருதயம்.

## முதற் பாகம்.

### ஸூத்திர-சாரீர-நிதாந ஸ்த்தாநங்கள் அடங்கியது.

ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

ஸூத்திர ஸ்த்தாநத்தில்:—ஆயுஷ்காமீயம், தினசர்யை, ருதுசர்யை, ரோகங்கள் உண்டாகாத வழி, திரவத்திரவ்ய விஞ்ஞாநம், அந்நஸ்வரூப விஞ்ஞாநம், அந்நரக்ஷை, தோஷாதி விஞ்ஞாநம், சோதநாதி குணமுள்ள திரவ்ய ஸ்வரூப விவரணம், ஸ்நேஹம், ஸ்வேதம், வமந-விரேசநம், வஸ்தி, நஸ்யம், தூமபாநம், கண்டூஷாதிகள், அஞ்ஜநாதிகள், தர்ப்பண-புடபாகங்கள், யந்திரவிதி, சஸ்திரவிதி, ஸிராவ்யதை, சஸ்திர கர்மம், க்ஷாராக்னி விதிகள் முதலிய அநேகம் விஷயங்கள் 30-அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

சாரீர ஸ்த்தாநத்தில்:—சர்ப்போற்பத்தி, கர்ப்ப வியாபத், அவயவாதிகளின் தத்துவங்கள், மர்ம விவரணம், விக்ருத சாரீர விஞ்ஞாநம், தூதபரீக்ஷை முதலிய சரீர தத்துவாதி ஸம்பந்தமான விஷயங்கள் ஆக இவை முதலியவை 6-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

நிதாந ஸ்த்தாநத்தில்:—ஜ்வரம், இரக்த பித்தம், காஸம், ச்வாஸம், ஹிக்கா (விக்கல்), க்ஷயம், மத மென்னும் வெறி, அர்சஸ் என்னும் மூலம், அதிஸாரம், கிரஹணீ, மூத்திர க்ருச்சர மென்னும் நீர்ச்சுருக்கு முதலியவை, பிரமேஹம், வித்ரதி, அண்ட வ்ருத்தி, குல்மம், மஹோதரம் முதலிய உதரத்தைப்பற்றிய வியாதிகள், பாண்டு, சோகை, குஷ்டம், ச்வித்ர மென்னும் வெண்குஷ்டம், வாதரோகங்கள் முதலிய ரோகங்களின் காரண-லக்ஷணாதிகள் 16-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

ஆக இந்த முதற்பாகத்தில் 52-அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. முகவுரையும், ஒவ்வொரு பக்கத்திலும் வியாக்யாநமும், விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிராசீன யந்திர சஸ்திரங்களென்ன, சரீர தத்துவங்களென்ன இவைகளை விளக்கும் சித்திரப் படங்கள் அநேகம் அச்சிடப்பட்டிருக்கின்றன. வைத்திய கலாநிதியின் அளவில் 450-பக்கங்களுக்கு மேல் கொண்டது. விலை ரூபா- 5-0-0.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.

---

# அஷ்டாங்க ஹ்ருதயம்

## இரண்டாம் பாகம்.

### சிகித்ஸா-கல்ப ஸ்த்தாநங்கள் அடங்கியது.

ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

சிகித்ஸா ஸ்த்தாநத்தில் :—ஜ்வரசிகித்ஸை, இரக்த-பித்த சிகித்ஸை, காஸ சிகித்ஸை, ச்வாஸ சிகித்ஸை, இராஜயக்ஷ்ம (க்ஷய) சிகித்ஸை, சர்தி (வாந்தி) இருதயரோக சிகித்ஸைகள், மூல (அர்சஸ்) சிகித்ஸை, அதிஸார சிகித்ஸை, கிரஹணீ சிகித்ஸை, மூத்திராகாத சிகித்ஸை, பிரமேஹ சிகித்ஸை, வித்ரதி சிகித்ஸை, அண்டவ்ருத்தி சிகித்ஸை, குல்ம சிகித்ஸை, மஹோதரம் முதலிய உதர ரோகங்களின் சிகித்ஸைகள், பாண்டுரோக சிகித்ஸை, ச்வயது (சோகை) சிகித்ஸை, குஷ்டரோகம் முதலிய சர்ம வியாதிகளின் சிகித்ஸைகள், வாத ரோகங்களின் சிகித்ஸை, இவை முதலிய அநேகம் வியாதிகளின் சிகித்ஸா விஷயங்கள் 22-அத்தியாயங்களில் விஸ்தாரமாக விவரிக்கப்படுகின்றன.

கல்ப ஸ்த்தாநத்தில்:—வமந கல்பம், விரேசந கல்பம், வமந-விரேசநங்களா லுண்டாகும் தீங்குகளைப் பரிஹரிக்கும் கல்பம், வஸ்தி கல்பம், வஸ்திப் பிரயோகத்தாலான வியாபத் பரிஹார கல்பம், பேஷஜ கல்பம் இவை முதலிய ஸம்சோதனௌஷத சிகித்ஸா முறைகள் 6-அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

ஆக இந்த இரண்டாம் பாகத்தில் 28 அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பக்கத்திலும் வியாக்யானமும், விஸ்தாரமான விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வைத்திய கலாநிதியின் அளவில் 250 பக்கங்களுக்கு மேல் கொண்டது. விலை ரூ. 3-12-0.

வைத்திய கலாநிதி ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.



# மணித்தைலம்

பரிமள மிகுந்த வாசனைத்தைலம், சாஸ்திர முறைப்படி காய்ச்சின தைலமாகையால் உபயோகிக்கிறவர்களுக்கெல்லாம் அற்புதமான குணத்தைக் கொடுக்கிறது. சொற்ப காலமாய் வெளிவந்துலாவும் தைலத்தைப்போல் கருதிவிடக்கூடாது. மணித்தைலம் 35வருஷமாய் விற்பனையாகி வருகிறது. தலைமயிரை உதிராமற்றடுப்பதன்றி மிருதுவாயும் கறுப்பாயும் வளரச்செய்யும். மூளையை குளிரச் செய்கிறது. ஒரு புட்டியின் விலை ரூ. 1.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜி ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்.

26, பிராட்வே, மதராஸ்.

---

# பாட்லிவாலாவின்

பாட்லிவாலாவின் சுத்தமான கொய்னமாத்திரை 1-க்ரைன் 100 மாத்திரைகள் அடங்கியது.
பாட்லிவாலாவின் கொய்னமாத்திரை. 1-க்ரைன் 100 மாத்திரைகள் அடங்கியது.
பாட்லிவாலாவின் குளிர் ஜ்வர திராவகம் (சிலோஷ்ம ஜ்வரம் முதலிய)
பாட்லிவாலாவின் குளிர் ஜ்வர மாத்திரை பாட்லிவாலாவின் இரஸாயன மாத்திரை
பாட்லிவாலாவின் பல் பொடி பாட்லிவாலாவின் படைமருந்து

இவையெல்லாம் மருந்துக் கடைகளிலும் கிடைக்கும், அல்லது அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதுங்கள்.

டாக்டர், H. L. பாட்லிவாலா சன்ஸ் & கோ., லிமிடெட்.
நெ. 305, வார்லி, 18 பம்பாய்.
Dr. H. L. BATLIWALA, SONS & Co., Ltd.,
*No. 305, Warli 18. Bombay Tel. address. "Doctor Batliwala Doctor."*

---

சீர்திருத்தப்பெற்ற இரண்டாம் பதிப்பு.

# சார்ங்கதர ஸம்ஹிதை.

ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் முதன் முதல் வெளியான ஆதிகாலத்திய ஆயுர்வேத வைத்திய நூல். 'வைத்திய கலாநிதி பத்திரியாசிரியரான ஆயுர்வேத பூஷணம். பண்டிட் எம். துரைஸ்வாமி ஐயங்கார் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

இவ் வைத்தியக் கிரந்தம் மூன்று கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

1. பூர்வ கண்டத்தில்.—ஆயுர்வேத பரிபாஷை, ஔஷதாதிகளின் விவரம், தீபன-பாசன-ரேசநாதி குண விசேஷங்கள், தேஹதத்துவ ஸம்பந்தமான அம்சங்கள், ரோகஸங்க்யை, மற்றும் அருமையான அநேகம் விஷயங்கள் 7-அத்தியாயங்களைக் கொண்டு விவரிக்கப்பட்டிருக்கின்றன.

2. மத்தியம கண்டத்தில்:—ஸ்வரஸம், க்வாதம், பாண்டம், கல்கம் முதலிய கஷாயவகைகளும், சூர்ணம், குளிகைகள், பாண்டங்கள், தைலங்கள், கிருதங்கள் இரஸௌஷதங்கள், பஸ்ம முறைகள், தாதுமாரண சுத்தி முறைகள் ஆஸவங்கள், அரிஷ்டங்கள் முதலிய ஔஷத நிர்மாண முறைகளும் 12 அத்தியாயங்களில் விவரிக்கப்படுகின்றன.

3. உத்தர கண்டத்தில்:—சிருதபானம், ஸ்வேதசிகித்ஸை, வமன சிகித்ஸை, விரேசன சிகித்ஸை, வஸ்தி சிகித்ஸை (எனிமா), நஸ்யவிதி கண்டூஷாதிவிதி இரத்தத்தை வெளிப்படுத்தும் முறை, நேத்திர சிகித்ஸை முதலான மிகவும் உபயோககரமான சிகித்ஸா க்ரமங்கள் எளிதாகச் செய்யக்கூடிய வகையில் 13-அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆக இக்கிரந்தத்தில் மொத்தம் 32 அத்தியாயங்கள் அடங்கியிருக்கின்றன.

விவரமாக வியாக்கியானம் ஒவ்வொரு பக்கத்திலும் உண்டு முகவுரை மிகவும் விசேஷமானது. விஷய அகராதி விரிவானது. டபுள்கிரௌன் என்னும் அளவில் உயர்ந்த காகிதத்தில் சுமார் 450 பக்கங்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை ரூ. 3.

"வைத்திய கலாநிதி" ஆபீஸ், வேப்பேரி, மதராஸ்.

## எல்லா இந்திய ஆயுர்வேத
## வித்தியாபீட பரீக்ஷைகள் 1922.

இப்பரீக்ஷைகள் 1922-ம் வருஷம் மார்ச்சுமீ 30, 31, ஏப்ரல் 1, 2, 3, 4-ந் தேதிகளில் இதனடியில் குறிப்பிட்ட விடங்களில் நடக்கப்படும். மாணாக்கர்கள் 1922-ம் வருஷம் பிப்ரவரிமீ 28-ந் தேதிக்குள்ளாக இந்த ஆபீஸில் சேரும்படி தங்கள் தாகாஸ்துகளை பரீக்ஷைக் கட்டணத்துடன் அனுப்பிக்கொள்ள வேண்டியது. இந்த தேதிக்குப் பிறகு தரகாஸ்துகள் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

| | | | |
|---|---|---|---|
| பரீக்ஷைக் கட்டணம். | ஆயுர்வேதாசாரிய பரீக்ஷைக்கு | ரூ. | 10 0 0 |
| | ஆயுர்வேதவிசாரத பரீக்ஷைக்கு | ரூ. | 5 0 0 |
| | பிஷக் பரீக்ஷைக்கு | ரூ. | 3 0 0 |

கவனிப்பு:—பதினோராவது வைத்திய ஸம்மேளனத்தின் பிரஸ்தாவப்படி பிஷக் பரீக்ஷைக்கு "சல்யதந்திர, அகத்தந்திரங்களும்" பன்னிரண்டாவது வைத்திய ஸம்மேளனத்தின் பிரஸ்தாவப்படி ஆசாரிய பரீக்ஷைக்கு "சரக ஸம்ஹிதை, ஸுச்ருத ஸம்ஹிதை, அஷ்டாங்க சங்ஹரகம்" இவையும் அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ள விஷயங்களென்றறியவேண்டும்.

பரீக்ஷைகள் நடக்குமிடங்கள்:— அஜமீர், அலிகார், அமராவதி, அம்ருதஸரஸ், பலியா, பாங்கிபூர், பெஜவாடா, பம்பாய், புலந்தஷகர், கல்கத்தா, கொழும்பு, டில்லி, ஹரித்துவாரம், ஜம்மு, ஜப்பல்பூர், கான்பூர் லாகூர், லக்னௌ, லூதியானா, மதராஸ், மிர்ரிக், முராதாபாத், முஜப்பர்பூர், பூனா; ரிஷிகேசம்.

தர்க்காஸ்து நமூனாக்களும், இதரவிஷயங்களும் வேண்டியவர்கள் வித்தியாபீட ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா இந்திய ஆயுர்வேத வித்தியாபீடம்,
41. ஆச்சாரப்பன் தெரு,
சென்னை.

மந்திரி,
ஆயுர்வேத வித்தியாபீடம்.

## குளிர்ச்சியான தைலம்.

கண்கள் குளிரும். மூளை குளிரும். தேஹம் குளிரும்.

முற்றிலும் சாஸ்திர முறைப்படி தயாரானது.

## ப்ருங்காமலக தைலம் என்பது இதன் சாஸ்த்ரீயப் பெயர்

தலைமயிரை வண்டு போல் கறுப்பாகச் செய்வதால் "ப்ருங்கம்" என்கிற சொல் இத்தைலத்தின் பெயரில் முதலில் சேர்க்கப் பட்டிருக்கிறது. தலை நரைத்தலை இத்தைலம் கிரமமாக மாற்றும். தலையில் உண்டாகும் சுண்டு, சொறி முதலியதைப் போக்கும், தலைச்சுற்றல், மயக்கம், ஒற்றைத்தலைவலி, கண் எரித்தல், கை கால்கள் எரித்தல் இவற்றையும் நிவாரணம் செய்யும். மூளை வேலை செய்பவர் இத்தைலத்தை அடிக்கடியும் தேய்த்துக் கொண்டுவந்தால் மூளைகுளிர்ந்து பலமுமுண்டாகும் மூளையின் சோர்வு நேரிடாமலிருக்கும். அனைவரும் ஸாதாரண எண்ணெயைத் தேய்த்துக் கொள்ளுவதற்குப் பதிலாக ப்ருங்காமலக தைலத்தையே உபயோகித்து வருவதால், உண்மையில் எண்ணெய் தேய்த்துக் கொள்வதால் அடையக் கூடிய முழுப்பலனையும் பெறுவார்கள்.

இத்தைலம் டிப்ளோமா பெற்ற ஆயுர்வேத சிகித்ஸகரான ஸ்ரீமான் ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார் ஏ. வே. ஏ. ஸி அவர்களின் மேற்பார்வையில் தயார் செய்யப்பட்டது.

விலை புட்டி 1-க்கு ரூ 1 4 0

ஆர்ய ஔஷதசாலை,
7, ஆதியப்ப முதலித் தெரு, வேப்பேரி,
மதராஸ்.




இரக்தாதி ஸாரம்:—பித்தாதிஸாரம் இருக்கையிலே, பித்தத்தை விருத்தி செய்யும் பதார்த்தங்களை அடிக்கடியும் அதிகமாகவும் புஜித்தால், அப்பொழுது கடுமையான இரக்தாதிஸாரம் உண்டாகிறது.[1] 20.

பிரவாஹிகை.—அஹிதமான உணவுகளைப் புஜிப்பவனுக்குப் பிரகோபமடைந்த வாயுவானது குடலில் மிகுதியாகச் சேர்ந்துள்ள சிலேஷ்மம் போன்ற ஒருவித தோஷத்தை[2] ஒவ்வொரு முறையும் சொற்பம் சொற்பமாக அடிக்கடியும் கீழ்நோக்கித் தள்ளும்; அத்தோஷம் சிறிது மலம் கலந்ததாகவுமிருக்கும்; அப்பொழுது ரோகி பிரயாஸப்பட்டு முக்குவான். சாஸ்திரஞ்ஞர் அந்த வியாதியை பிரவாஹிகை யென்பார்கள்.[3] (1) வாதம் மிக்க அதிகரித்த பிரவாஹிகையில் வயிற்று நோயதிகரித்துக் காணும்.[4] (2) பித்த ஸம்பந்தமான பிரவாஹிகையில் அழற்சி அதிகமாயுண்டாகும். (3) கபாதிகமான பிரவாஹிகையில், கபம் கலந்த தோஷம் வெளியாகும். (4) இரத்த தோஷத்தினாலுண்டாகும்[5] பிரவாஹிகையில் வெளிவரும் தோஷத்தில் இரத்தமும் கலந்திருக்கும். இவையெல்லாம் பொதுவாக ஸ்நிக்த்தத் தன்மையோ ரூக்ஷத் தன்மையோ மிக்க அதிகரிப்பதால் உண்டாகின்றன.[6] அவற்றிற்கெல்லாம் தனித்தனி இலக்ஷணங்களென்ன, ஆம நிலைமை பக்குவ நிலைமை இவையென்ன, சிகித்ஸா முறையென்ன இவைகள் அதிஸாரத்திற்குக் கூறப்பட்ட இலக்ஷணாதிகளைப் போன்றவையேயாம். 21, 22.

அதிஸார நிவ்ருத்தி லக்ஷணம்:—எவனுக்கு மூத்திரோத் ஸர்க்கம் செய்யும்போது மலப் பிரவ்ருத்தியேற்படாமல் நீர் மாத்திரம் இற

1. பித்தாதிஸாரத்தில் பித்தத்தை விருத்தி செய்வதற்கான ஆஸ்பதம் ஏற்பட்டால் இரக்தாதிஸாரம் உண்டாகுமென்பதனால், பித்தாதிஸாரத்திற்கு இரத்தாதிஸாரம் உபத்திரவமாயேற்படுகிறது எனக் கருத்து. ஆகவே கீழே அதிஸாரம் ஆறு என்று கூறப்பட்டது. இரக்தாதிஸாரம்ஸ்வதந்திரவியாதியாயிருந்தால், இதையும் கூட்டி, அதிஸாரம் எழு விதம் என்று சொல்லப்பட்டிருக்கும். பித்தாதிஸாரம் உண்டாவதற்கு வேண்டிய ஆஸ்பதங்கள் தோன்றும்போது பித்தத்தை விருத்தி செய்யும் உணவு முதலியதை உபயோகித்தாலும் இரக்தாதிஸாரம் உண்டாகும். அப்பொழுதும் இது பித்தாதிஸாரத்தைச் சேர்ந்ததேயன்றி தனியான ஏழாவது அதிஸாரமாகமாட்டாது.

2. சிலேஷ்மம்போன்ற தோஷம் என்பதால், உண்மையில் அத்தோஷம் சிலேஷ்மமல்ல எனக் கருத்து. பிரவாஹிகையில் வெளியாகும் தோஷம் கபமாகவே இருக்குமானால், பிறகு கபப்பிரவாஹிகையில் அத்தோஷத்துடன் கபம் கலந்திருக்குமென்று கூறுவதற்குப் பொருளில்லாமற் போய்விடும்.

3. பிரவாஹிகை—இது ஸாதாரணமாய் சீதபேதி யென்று வழங்கப்படுகிறது. அதிக கடுப்புடன் குடலின் உட்புறமும் குதமும் கீழ் நோக்கி அடிக்கடியும் நெளிந்து தோஷத்தைச் சிறுகச் சிறுக வெளித்தள்ளுவதால் பிரவாஹிகை (அல்லது ப்ரவாஹிகா) என்கிற பெயர் வந்தது. இதை போஜன் முதலியவர் ... ரப்ஸீ யென்றும், பராசரர் அந்தர் க்ரந்தீ யென்றும், ஹாரீதர் நிச் சாரகம் என்றும் வழங்குவதாகத் தெரிகிறது.

4. பிரவாஹிகை யெல்லாம் பொதுவாக வாதப் பிரகோபத்தினாலேயே உண்டாவதாக முதலிற் கூறப்பட்டது. அங்ஙனமிருக்க இங்கே மறுபடி வாதப் பிரவாஹிகை யென்று வேறொன்று கூறுவதன் கருத்தென்ன? என்றால்—வாதப்பிரவாஹிகையில் மற்ற பித்தாதி தோஷஸம்பந்தமான பிரவாஹிகையைவிட வாதம் மிக்க பலமாக விருத்தியாயிருக்குமென்று அதன் பொருள்.

5. வாத பித்த கபங்களைப்போல் இரத்தத்தையும் ஒரு தோஷமாக (நான்காவது தோஷமாக)க் கூறும் ஸம்ப்ரதாய மொன்றுண்டு. ஆகவே இரத்த தோஷ ஸம்பந்தமான பிரவாஹிகை யொன்று பிரத்தியேகமாக இங்கே கூறப்பட்டது.

6. ஸ்நேஹத்தன்மை அதிகரிப்பதால் கபப்பிரவாஹிகையும், ரூக்ஷத்தன்மை அதிகரிப்பதால் வாதப் பிரவாஹிகையும் உண்டாகும். ஸம்ஸ்க்ருத மூலத்தில் "தா: ஸ்நேஹரூக்ஷப்ரபவா மதாஸ்து" 'என்றுள்ள வாக்கியத்தில் அடங்கியுள்ள து' என்னும் சொல்லால் தீக்ஷ்ணத்தன்மையினால் பித்தப் பிரவாஹிகையும், உஷ்ணத்தன்மையினால் இரத்தப் பிரவாஹிகையும் உண்டாகுமென்று அறியவேண்டுமென விஜயரக்ஷிதனது வியாக்யானம்.

ங்குகிறதோ, அபாநவாயுவும் நன்றாக வெளிப்படுகிறதோ, ஜாடராக்னியும் விருத்தியாய் குடலும் இலகுவாகத் தோற்றுகிறதோ அவனுக்கு அதிஸாரம் நீங்கியதாய் அறிக[1]. 23.

ஜ்வராதிஸாரம்[2] :—(தனித்தனியே ஜ்வரத்திற்குக் கூறப்பட்ட காரண இலக்ஷணாதிகளும், அதிஸாரத்திற்குக் கூறிய காரண இலக்ஷணாதிகளும் ஒருமிக்கச் சேர்ந்து ஜ்வராதி ஸாரத்திற்குத் தோன்றும். ஆகவே இவ்விஷயம் பிரத்தியேகமாக இங்கு கூறப்படவில்லை.)

## 4. கிரஹணீரோக நிதானம்.*

கிரஹணீரோகத்தின் ஸாமாந்ய ஸம்ப்ராப்தி:- அதிஸாரம் நிவ்ருத்தியாயிருக்கையிலும்,[3] ஜாடராக்நி மந்தமாயிருந்து,[4] தகாத உணவைப் புஜித்தால் அவனுடைய ஜாடராக்நியானது மீண்டும் மிகக் கோளாறடைந்து கிரஹணீயென்கிற குடலின் பாகத்தையும் கெடுக்கும்.[5] 1.

கிரஹணியின் ஸங்க்யாஸம்ப்ராப்தியும் ஸாமாந்ய லக்ஷணமும்:—தனித்தனியே ஒவ்வொரு தோஷமும் மிகவும் விருத்தியாய் மூன்றுவித கிரஹணீவியாதிகளையும், மூன்று தோஷங்களும் ஒருமிக்க விருத்தியாய் ஸந்நிபாதக் கிரஹணீ வியாதியையும் உண்டுபண்ணும். இத்தோஷங்களால் கோளாறடைந்த கிரஹணீயென்னும் அவயவம் புஜித்த உணவை வெகுவாக ஜீர்ணமாகாத ஆமமென்னும் நிலைமையிலேயே வெளிவிடும்; சில ஸமயம் பக்வமான நிலைமையிலும் வெளிவிடும். அப்பொழுது வயிற்றில் நோவுண்டாகும்; அந்த மலம் துர்க்கந்தமாகவும், அடிக்கடி திரவமாகவும், அடிக்கடி கெட்டியாகவும் இருக்கும். ஆயுர்வேத மறிந்தவர் அதை கிரஹணீரோகம் என்பார்கள். 2, 3.

1. குடலில் வாயு அதிகரித்து, வயிற்றுப் பொருமலுண்டாய் அதிஸாரத்தில் மலம் கட்டிப் போவதுண்டு. அவ்விதமான தொந்தரவுகளுடன் கூட மலம் கட்டிப்போவது அதிஸார நிவ்ருத்தியாக மாட்டாது. அதிஸாரத்தில், ஸாதாரணமாக மூத்திரமாகப் பரிணமிக்க வேண்டிய திரவப்பொருள் கூட அவ்விதமாகாமல் மலத்திற் கலந்து குதமார்க்கத்தினால் வெளியாகிறது; ஆகவே அதிஸாரத்தில் மூத்திரம் வெகு சொற்பமாயிறங்கும் அல்லது சில ஸமயம் இறங்காமற் போவதுமுண்டு. மேலும் மூத்திரோத்ஸர்க்கம் மாத்திரம் செய்ய விரும்பினாலும், அச்சமயம் மலமும் திரவரூபமாகக் கூடவே வெளிவரும். அதிஸாரம் நிவாரணமானால் அப்பொழுது மேலே கூறியவாறு குறிகள் தோன்றும்.

2 அதிஸாரத்தில் ஜ்வரமும் சேர்ந்துண்டாவது ஜ்வராதிஸாரம்.

* கிரஹணீ—ஆமாசயம் என்கிற இரைப்பைக்கும் பக்வாசயத்திற்கும் இடையில் அமைந்துள்ள பாகத்திற்கு "கிரஹணீ" யென்று பெயர். உணவு ஆமாசயத்தில் ஒருவாறு பக்குவமாய் ஒருவித குழம்பான பக்குவ நிலைமையை அடையும் வரையில் அதைச் சிறு குடலுக்கு விடாமல் ஆமாசயத்தின் கீழ் முனையிலுள்ள த்வாரம் நன்கு மூடிக்கொண்டிருக்கும். இவ்விதம் மூடிக்கொள்ளும் பாகம் (ஆமாசயத்திலேயே அபக்வான்னத்தைப் பிடித்து நிறுத்துவதால்) கிரஹணீ யெனப்படுகிறது. இவ்விதம் சரசராலும், ஸுச்ருதராலும் கிரஹணீ யென்கிற அவயவத்தின் ஸ்வரூபம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்த கிரஹணீ யென்கிற பாகம் கோளாறடைந்தால் ஆமாசயத்தில் உணவு பக்குவமானதும் பக்குவமாகாததுமாய் பலவாறாக சிறுகுடலுக்குள் செல்ல, அங்ஙனமே அது குதமார்க்கத்தினால் வெளியாகும். ஆகவே ஒருவகையான இவ்வஜீர்ண வியாதியும் கிரஹணீ யென்றே வழங்கப்படுகிறது.

3. "அதிஸாரம் நிவ்ருத்தியா யிருக்கையிலும்" என்றதனால், அதிஸாரமின்றியே பிறகு கூறப்படும் காரணங்களால் சுயமாகவும் கிரஹணீரோகம் உண்டாகலாம் எனக் கருத்து.

4. மந்தாக்நியா யிருந்து என்றதால், ஜாடராக்நி பலமாயிருந்தால் தகாத உணவும் ஜீர்ணமாய் விடக்கூடும் என்றறிக.

5. "அதிஸாரம் நிவாரணமான பிறகும் ஜாடராக்நி நன்கு பலப்படும் வரையில் அஜீர்ணமுண்டாக்கும் பதார்த்தங்களைப் புஜிக்கக் கூடாது," என்று ஸுச்ருதர் கூறுகிறார்.





கிரஹணியின் பூர்வரூபம்:-நாவறட்சி, சோம்பல், தேஹவன்மை க்ஷீணித்தல், உணவு குடலில் காந்திப்போதல், அல்லது வெகு நேரம் கழித்து ஜீர்ணித்தல், உடல் பாரமாதல் ஆக இவை கிரஹணீரோகத்தின் முற்குறிகளாம். 4.

வாதக் கிரஹணீ.-(நிதாந-ஸம்ப்ராப்தி-லக்ஷணங்கள்):—கடு, கைப்பு, துவர்ப்பு, அதிக ரூக்ஷம், மிகக் கெட்டுப்போனது[1] ஆக இத்தகைய உணவுகளாலும், வெகு சொற்ப அளவான போஜனத்தினாலும்,[2] உபவாஸத்தினாலும், அதிக தூரம் வழி நடப்பதாலும், வேகங்களை அடக்குவதாலும், அமிதமான புணர்ச்சியாலும் வாயு பிரகோபமடைந்து, ஜாடராக்னியைக் கோளாறடையச் செய்து விகாரங்களையுண்டுபண்ணுகின்றன. அவன் உண்ணும் உணவு ஜீர்ணமாவது வெகு கஷ்டம்; அது வயிற்றில் காந்தி புளித்துப்போகிறது; அவனது தேஹம் உரத்துப்போகும்; தொண்டையும் வாயும் வறட்சியடையும்; பசியும் தாஹமும் அதிகரிக்கும்; கண் பார்வை மந்தப்படும்; செவிகளில் ஒருவித ஓசை கிளம்பும்; விலாப் பக்கங்கள், துடைகள், துடையிடுக்குகள், கழுத்து இவற்றில் அடிக்கொரு முறை நோவுண்டாகும்; விஷூசியும்[3] காணும்; இருதயத்தில் வேதனையுண்டாகும்; தேஹம் இளைத்து பலஹீனப்படும்; அரோசகமுண்டாகும்; குதம் கடுக்கும்; எல்லாவிதமான இரஸங்களிலும் விருப்பம் ஏற்படும்; மனம் குன்றும்; உணவு ஜீர்ணமாகும்போதும் ஜீர்ணமான பிறகும் வயிற்றில் பொருமலேற்பட்டு, போஜனம் செய்தவுடனே தணிவடையும்; அவனுக்குண்டாயுள்ள வியாதி வாதகுல்மமோ, இருதய ரோகமோ, ப்லீஹவ்ருத்தியோ என்று ஸந்தேஹிக்கக் கூடியதாயிருக்கும்; ஒவ்வொரு ஸமயம் திரவமாகவும், சில ஸமயம் சுஷ்கமாகவும், சில வேளை தெளிவாகவும், சில ஸமயம் ஆமதோஷத்துடன் கூடியதாகவும் வெகு நேரம் அதிக சிரமப்பட்டு அதிக அபாநவாயுவின் சப்தத்தோடு மலத்தை வெளிவிடுவான்; அதிலும் இருமிக்கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் மலவிஸர்க்கம் செய்யப்படுவதோடு, அந்த மலம் நுரைத்து மிருக்கும். 5—10.

பித்தக் கிரஹணீ: (நிதாந-ஸம்ப்ராப்தி-லக்ஷணங்கள்):— கடுரஸம், அஜீர்ணதோஷம், விதாஹியான பதார்த்தம்,[4] அம்லரஸம், க்ஷாரங்கள்[5] இவை முதலியவைகளால்[6] பித்தம் விருத்தியடைய, அது உஷ்ணஜலம் நெருப்பை அவிப்பதுபோல, ஜாடராக்னியைக் கலைத்து அழியச் செய்கிறது; அப்பிணியாளியின் தேஹம் மஞ்சள்நிறம் பெறும்; கறுத்தும் மஞ்சள் நிறமும் கலந்து திரவரூபமாக மலம் வெளியாகும்; பூதிகந்தமென்கிற ஒருவித துர்நாற்றம் அவனிடம் தோன்றும்; புளித்த தேக்கெறிவு காணும்; மார்பிலும் தொண்டையிலும் அழற்சியேறபடும்; அரோசகமுண்டாகும்; அமித நாவறட்சியினாலும அவன வருந்துவான். 11, 12.

1. "மிகவும் கெட்டுப்போனது" என்பதற்குப் பதிலாக "மிகவும் குளிர்ந்துபோனது" என்று வேறொரு பாடமுண்டு.

2. "வெகு சொற்ப அளவான போஜனத்தினாலும்" என்பதற்குப் பதிலாக "காலம் தவறியுண்பதாலும்" என்று வேறொரு பாடமுண்டு.

3. விஷூசி – இனி அக்நிமாந்த்யாதிப் பிரகரணத்தில் விவரிக்கப்போகிற வியாதி.

4. விதாஹி — ஆமாசயத்தில் மிகவும் புளித்துப் போய் (அல்லது காந்திப்போய்), மார்பில் (அன்னவாஹியென்கிற குழல் மூலமாய்) அழற்சியை யுண்டுபண்ணும் வஸ்து.

5. 'க்ஷாரங்கள்' என்பதால் அபாமார்கக்ஷாரம் (நாயுருவியுப்பு) முதலியவை குறிக்கப்படுகின்றன; யவக்ஷாரம் முதலியவை கலந்த வேறு திரவ்யங்களும், க்ஷாரஜலம் முதலியவைகளும் கிரஹிக்கப்படுகின்றன. காமரூபம் முதலிய சில தேசங்களில் க்ஷார நீரில் பக்குவம் செய்த வியஞ்ஜநாதிகளை யுபயோகிப்பது வழக்கம் என்று கூறப்படுகிறது. 'முதலியவை' என்பதால் லவணம், தீக்ஷ்ணம், உஷ்ணம் இக்குணங்களுள்ள பதார்த்தங்கள் குறிப்பிடப்படுகின்றன.

6. "இவை முதலிய குணம்" என்பதால் பிசுபிசுப்பு, மதுரம் முதலியவை கிரஹிக்கப்படுகின்றன.

கபக் கிரஹணீ: (நிதாந-ஸம்ப்ராப்தி-லக்ஷணங்கள்.):—குருவாகவும், அதிக ஸ்நிக்த்தமாகவும், அதிக சீதமாகவும் உள்ள இவை முதலிய குணங்களையுடைய உணவுகளாலும், மிதமிஞ்சிய போஜநத்தினாலும், போஜனம் செய்தவுடனே நித்திரை யுறுவதாலும்[1] பிரகோபமடைந்த கபமானது ஜாடராக்னியை அழித்து விடுகிறது; அம்மனிதனுக்கு உணவு ஜீர்ணமாவது வெகு கஷ்டம்; இருதயம் மிகப்பட படத்துத் துடித்தல், வாந்தி, அரோசகம், பசையினால் வாய்பூசப்பட்டது போன்றிருத்தல், வாய் இனிப்பாக ஆதல், இருமல், தும்மல், பீநஸம் இக்கோளாறுகள் காணும்; இருதயம் இறுகித் திரண்டிருப்பதுபோன்ற உணர்ச்சி யுண்டாகும்; வயிறு கனத்துப் பொருமலடையும்; ஒருவித அருவருப்புடன் தித்திப்பான தேக்கெறிவு உண்டாகும்; ஜாடராக்னி அழியும்; ஸ்த்ரீகளிடம் சேருவதற்குத் தென்புண்டாகாது; மலமானது உடைந்து ஆமதோஷத்தோடும் கபத்தோடும் கலந்து வெகு கனமாக வெளியாகும்; உடம்பு இளைக்காமலிருக்கையிலும்[2] தேஹம் பலஹீனமடையும்; சோம்பலும் உண்டாகும்; இவை கபக்கிரஹணியின் இலக்ஷணங்களாம். 13—16.

ஸந்நிபாதக்கிரஹணீ:—வாதக் கிரஹணீ முதலியதற்குத் தனித்தனியே கூறப்பட்டுள்ள காரணங்களும் இலக்ஷணங்களும் ஒருமிக்கச் சேர்ந்து காணப்படுமானால் இது ஸந்நிபாதக் கிரஹணியாகும்.[3] 17.

ஸங்கிரஹக் கிரஹணீ:— (குடலிரைத்தல், சோம்பல், வலிவின்மை, தேஹம் இளைத்தல் இக்கோளாறுகளும், திரவமாகவும் திரண்டதாகவும் குளிர்ந்ததாகவும் ஸ்நிக்த்தமாகவும் மலம் இடுப்புவலியோடு வெளியாவதும் உண்டு; சில ஸமயம் மலம் ஆமதோஷத்துடன் கூடியதாகவும், அளவில் அதிகமாகவும், பிசுபிசுப்புள்ளதாகவும், சொற்ப வேதனையோடு அதிக சப்தமுண்டுபண்ணிக்கொண்டும் வெளியாகும்; ஆனால் இவ்விதமான கோளாறு பக்ஷத்திற்கு ஒரு முறையாவது, மாஸத்திற்கு ஒரு முறையாவது, பத்து நாட்களுக்கு ஒரு முறையாவது அல்லது தினந்தோறுமாவது உண்டாகும்; இது பகலில் விருத்தியடைந்து இரவில் தணிவடைவதுமுண்டு. இது இந்த நிலைமையில்தான் இருக்குமென்று நிச்சயிக்க முடியாததாகவும், எளிதில் சிகித்ஸைக்கு வசப்படாததாகவும், வெகு நாட்கள் தொடர்ந்து தொந்தரவளிக்குந் தன்மையதாகவும் இருக்கும்; ஆமதோஷத்துடன்கூடிய வாதக் கோளாறால் காண்கிறது; இது "ஸங்கிரஹக் கிரஹணீ" யென்று வழங்கப்படும். தூங்கும்போது இரண்டு பார்ச்வங்களிலும் குத்துவலி யுண்டாகும்; மேலும் குடத்திலிருந்து நீரைக் கொட்டுவதுபோன்ற சப்தமுண்டாகும்; இது அஸாத்தியமான வியாதி; இந்தக்கிரஹணீரோகத்தை கடீயந்த்ரம் என்றும் கூறுவார்கள்.)

கிரஹணியில் ஸாம நிராமாதி லக்ஷணங்கள்.- (1) கிரஹணீரோகத்தில் மலாதிகளுக்குள்ள ஆம நிலைமையென்ன, பக்குவ நிலைமையென்ன இவற்றை அதிஸாரத்திற் கூறிய விதமாகவே அறிக. (2) மேலும் அதிஸாரம் எந்த லக்ஷணங்கள் கண்டால் அஸாத்தியமாகிறதோ அதே லக்ஷணங்கள் கிரஹணியிலும் அஸாத்தியக் குறிகளாகக் கருதப்படுகின்றன. (3) வயது சென்றவருக்குக் காணும் கிரஹணீரோகமானது, அவனது தேஹத்தைச் சீரழித்து நிவாரணம் செய்ய முடியாததாய்விடுவது நிச்சயம். 18, 19.

கிரஹணியில் ஸாத்யாஸாத்யங்களைப்பற்றி தந்வந்தரியின் கொள்கை:—(கிரஹணீரோகம் பாலர்களுக்குண்டானால் எளிதில் நிவ்ருத்திக்கக் கூடியது; யுவாக்களுக்குண்டானால் கஷ்ட ஸாத்யமாகும்; கிழவருக்கானால் அஸாத்யமென்றறிக. இது தந்வந்தரியின் கொள்கை.)

1. பகல் போஜனத்திற்குப் பிறகு உடனே நித்திரையுறுவது தகாதென்பது இதன் கருத்து. இரவில் நன்கு நித்திரை யுறுவது ஆரோக்கிய ஹேதுவாகுமாகையால், பகல் போஜனத்திற்குப் பிறகு எனகிற பொருள்தான் பொருந்தும்.

2. தேஹம் இளைக்காமை கபத்திற்கு இயல்பான செயலாம்.

3. ஸமாக்னி, மந்தாக்னி, தீக்ஷ்ணாக்னி, விஷமாக்னி யென்று ஜாடராக்னி நான்கு வகை; இவற்றுள் ஸமாக்னியைத் தவிர மற்ற மூன்றும் கிரஹணீதோஷம் என்றே கூறப்படும் என்று சரகர்.



## 5. அர்சோ நிதாநம்.*

அர்சஸ் ஆறுவிதம்:—வாத-பித்த-கபங்களால் தனித்தனியே மூன்றுவித அர்சஸ்ஸும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், இரத்த ஸம்பந்தமாக ஒன்றும், ஸஹஜமானது[1] ஒன்றும் ஆக ஆறுவித அர்சஸ்ஸுகள் குதத்தினுள் அமைந்துள்ள மூன்று வலிகள்[2] என்கிற மடிப்புகளை ஆச்ரயித்து உண்டாகின்றன. 1.

அர்சஸ் ஸம்ப்ராப்தி.—வாத-பித்த-கபங்கள் சர்மமென்ன, மாம்ஸமென்ன,[3] மேதஸ்ஸென்ன இவற்றைக் கோளாறடையச் செய்து அபாநத்வாரம் முதலியதில்[4] பலவித உருவமுள்ள மாம்ஸ முளைகளை உண்டுபண்ணுகின்றன; அம்முளைகளை "அர்சஸ்" என்பார்கள். 2.

வாதார்சஸ்ஸின் நிதாநம்:—துவர்ப்பும் காரமும் கைப்புமான இரஸங்கள், ரூக்ஷமும் சீதமும் இலகுவுமான குணங்கள் ஆக இத்தன்மையுள்ள பதார்த்தங்களும், மிகச் சொற்ப அளவான உணவும், தீக்ஷ்ணகுணமுள்ள மதுவும், அதிக புணர்ச்சியும், இலங்கநமும், வெகு குளிர்ச்சியான தேச காலங்களும்[5] கடுமையான வியாயாமமும்[6] மனத்துயரமும், வெயிலும் காற்றும் அதிகமாகத் தாக்குவதும் வாததோஷஸம்பந்தமான அர்சஸ் உண்டாவதற்கேற்ற காரணங்களாம். 3, 4.

பித்தார்சஸ்ஸின் நிதாநம்:—கடுரஸம், அம்லரஸம், இலவணரஸம், உஷ்ணவீர்யம் ஆக இத்தன்மையுள்ள பதார்த்தங்களும், அதிக வியாயாமமும், அக்னியின் சூடு வெயில் இவைதாக்குவதும், உஷ்ணமான தேசகாலங்களும[7], கோபமும், மதுபானமும், பொறாமையும், விதாஹியும் தீக்ஷ்ணமுமான ஸகலமாயுள்ள பாநவகைகளென்ன அன்னமென்ன ஔஷதமென்ன இவையும் பித்தப்பிரதானமான அர்சஸ்[5] உண்டாவதற்கான காரணங்களாகும். 5,6.

கபார்சஸ்ஸின் நிதாநம்:—இனிப்பு உப்பு புளிப்பு இச்சுவைகளையும், ஸ்நிக்த்தம் சீதம் குரு இக்குணங்களையும் உடைய பதார்த்தங்களும், சிறிதும் வியாயமமின்மையும், பகலில் நித்திரையுறுவதும், படுப்பது உட்கார்ந்திருப்பது முதலிய இச்சுகங்களிலேயே கருத்தாயிருத்தலும், கீழ்காற்றுக்கு எதிரிலிருப்பதும், சீதளமான தேச காலங்களும், கவலையற்றிருத்தலும் சிலேஷ்ம ஸம்பந்தமான அர்சஸ்ஸுக்குக் காரணங்களாகின்றன. 7,8.

* அர்சஸ் என்பது மூலரோகம். அரிவத் ப்ராணாந் ச்ருணாதி-(சத்ருவைப்போல் உயிரை ஹிம்ஸிக்கிறது) என்கிற வியுத்பத்தியைக்கொண்டு "அர்சஸ்" என்கிற பெயர் வந்தது.

1. ஸஹஜார்சஸ்—பிறக்கும்போதே ஏற்பட்டுள்ள அர்சஸ். கற்போற்பத்திஸமயத்தில் சிசுவின் குதம் என்னும் அவயவத்தை யுண்டுபண்ணுவதற்குக் காரணமான மாத்ரு-பித்ரு பீஜம் மூலதோஷப் பற்றுள்ளதாயிருந்தால், ஸஹஜார்சஸ் உண்டாகும்.

2. குதம் என்னும் அவயவம் நாலரை அங்குலம் நீண்டது. அதில் மூன்று விதமான வலிகள் என்னும் மடிப்புகள் அமைந்துள்ளன; அவை சங்குச் சுழிபோன்றிருக்கும்; அவற்றுள் ஒன்றுக்கு பிரவாஹணீ யென்றும், இரண்டாவதுக்கு விஸர்ஜநீ யென்றும், மூன்றாவதுக்கு ஸம்வரணீ யென்றும் பெயர். குதத்தின் உதடு குதௌஷ்டம் எனப்படும்; அக்குதௌஷ்டம் அரையங்குலம் அளவு. அதன்மேல் முதல் வலி ஓர் அங்குலம் நீளமானது; இரண்டாவது மூன்றாவது வலிகள் ஒவ்வொன்றும் ஒன்றரை அங்குலம் நீளம்.

3. சர்மம் மாம்ஸம் இவற்றைப்போல் இவற்றிலடங்கிய இரத்தமும் இவ்வியாதியில் கோளாறடையுமென்றறிக; ஆகையினாலேயே அர்சஸ் சிகித்ஸையில் இரக்த மோக்ஷணம் செய்யவேண்டுமென்றும் கூறப்படுகிறது.

4. "அபானத்வாரம் முதலியது" என்பதால் நாசி முதலிய இதர அவயவங்களிலும் இவ்வித முளைகள் உண்டாகுமெனபது குறிக்கப்படுகிறது. ஆனால் காயசிகித்ஸகர்கள் குதத்திலுண்டாவதையே அர்சஸ் என்றும், நாசி முதலியவற்றிலுண்டாகின்றவைகளை அதிமாம்ஸம் எனறும் வழங்குகிறார்கள்.

5 குளிர்ச்சியான தேச காலங்கள்—ஆநூபதேசமும், ஹேமந்தாதி காலங்களும்.

6 வியாயாமம்—கஸரத்து என்கிற தேஹவுழைப்பு.

7 உஷ்ணமான தேச காலங்கள்—ஜாங்கல தேசமும் க்ரீஷ்மருது முதலிய காலங்களும்.

8 அர்சோரோகம்— பொதுவாக ஸந்நிபாத(த்ரி) தோஷக்கோளாறால் உண்டாவதாக சரகர் கூறுவதால், ஸந்நிபாதத்திலும் பித்த தோஷம் மற்றவைகளை

த்வந்த்வஜ ஸந்நிபாதஜார்சஸ்ஸுகள்:—வாதாதிஅர்சஸ்ஸுகளுக்குத் தனித்தனியே கூறியுள்ள காரணங்களும் இலக்ஷணங்களும் இரண்டிரண்டாகச் சேர்ந்திருந்தால் த்வந்த்வார்சஸ்ஸுகளென்றும், மூன்று தோஷங்களுடைய காரண லக்ஷணாதிகள் சேர்ந்துண்டாளுல் ஸந்நிபாதார்சஸ் என்றும் அறிக. ஸந்நிபாதார்சஸ்ஸின் லக்ஷணங்கள் ஸஹஜார்சஸ்ஸுக்குச் சமானமாயிருக்கும்.[1] 9.

வாதார்சஸ்ஸின் இலக்ஷணங்கள்:--வாததோஷம் அதிகரித்து மூல முளைகள் உண்டாயிருந்தால் அவை சுஷ்கமாகவும், சிமசிமாவென்கிற ஒருவித தினவுடன் கூடியவையாகவும், வாடியவையாகவும், கறுஞ்சிவப்பாகவும், விரைத்துக் கசிவற்றவையாகவும், கடினமானவையாகவும், ஒன்றுபோன்று உருவத்தில் வேறுபட்டவையாகவும், வக்ரங்களாகவும், தீக்ஷணமாகவும், பிளவுண்ட முகமுள்ள வையாகவும், கோவை-பேரீச்சு- குமுழன்-பருத்தி இவற்றின் கனிகளுக்கொப்பான உருவங்களுடையவையாகவும இருக்கும்; மேலும் சில முளைகள் கடப்பம் பூபோன்றவையாகவும், சில முளைகள்வெண்கடுகுக்கொப்பானவையாகவும்காணப்படும்; சிரஸ்ஸு, விலாப்பக்கங்கள், இடுப்பு, தொடைகள், தொடையிடுக்குகள் இவை முதலியவற்றில் அதிக வேதனையை இவ்வர்சஸ் உண்டுபண்ணும்; தும்மல், தேக்கெறிவு, வயிற்றுப்பொருமல், மாரடைப்பு, அரோசகம் இவையும் காணும்; இருமல், ச்வாஸம், ஜாடராக்னி சில ஸமயம் அதிகரித்தல் சில ஸமயம் குறைவாதல், காதிரைத்தல், தலைச் சுற்றல் இவ்விகாரங்களும் தோன்றும்; வாதார்சஸ்ஸால் வருந்துபவன்கட்டிக்கட்டியாகவும், சொற்ப அளவாகவும், பிசுபிசுப்பான நீர் நுரை இவற்றுடன் கூடிய தாகவும், வயிற்றுக்கடுப்பையுண்டு பண்ணுவதுமான மலத்தை அதிக அபாநவாயுவோடு வெளியிடுவான். இப்பிணியாளியின் சர்மமும், நகங்களும், மலமூத்திரங்களும், முகமும் கறுநிறங் கொள்ளும். இதனுல் குல்மம், ப்லீஹவிருத்தி, மஹோதரம் அஷ்டீலா இந்த ரோகங்களும் உபத்திரவமாக[2] உண்டாகலாம். 10-15.

விட அதிகரித்திருக்கக் கூடிய நிலைமையைக் குறிப்பிடுவதற்காகப் பித்தப் பிரதானமான அர்சஸ்' என்று கூறப்பட்டதாய் அறிக. ஓம்தவ தமாய் வாதார்சஸ் கபார்சஸ் இவற்றிலும் ஸந்நிபாதஸம்பந்தமுண்டென்றுணருக.

1 ஸந்நிபாதஸம்பந்தமான அர்சஸ்ஸின் இலக்ஷணாதிகள் ஸஹஜார்சஸ்ஸின் இலக்ஷணாதிகளைப் போன்றவையாயிருக்கும் எனக் கருத்து. ஸஹஜார்சஸ்ஸின் நிதாநம் மாதவகரனுல் இங்கே விவரிக்கப்படாததன் காரணம் தெரியவில்லை. ஸுச்ருதத்தில் ஸஹஜார்சஸ்ஸின் இலக்ஷணாதிகள் இங்ஙனம் மொழியப்பட்டுள்ளன.—"ஸஹஜார்சஸ்ஸுகள் (பிறவி முளைகள்) காணக்கூடாத விதமாயுண்டாயிருக்கும்; அவை க்ருரமானவை; சிவந்தும் பழுத்த நிறமாகவுமிருக்கும்; அவற்றின் முளைகள் உட்புறமாகவும் தொந்தரவளிக்கக் கூடியவையாகவும் அமைந்திருக்கும்; ஸஹஜார்சஸ்ஸினுல் பீடிக்கப்படுபவன் இளைத்திருப்பான்; சொற்பவுணவே புஜிப்பான்; உடம்பெங்கும் விரைகள் (கார்ரத்தகுழாய்கள்) தடித்துப் பரவியிருக்கும்; அவனுக்குக் குழந்தைகள் வெகு சொற்பமாகத்தான் பிறக்கும்; சுக்ரம் க்ஷீணித்திருக்கும்; குரல் க்ஷீணிக்கும்; அவன் அதிக கோபக்காரனுயிருப்பான்; அவனுக்கு ஜாடராக்னி மந்தப்பட்டிருக்கும்; நாசி சிரஸ் நேத்திரம் செவி இவற்றைப்பற்றிய ரோகங்கள் அடிக்கடியும் உண்டாகும்; குடலிரைத்தல், வயிற்றுப்பொருமல், மார்பினுள் வேதர் பூசப்பட்டது போன்ற உணர்ச்சி, அரோசகம் இவற்றுல் இவன் எப்பொழுதும் வருந்துவான்; இவை ஸஹஜார்சஸ்ஸுள்ளவனிடம் காணக்கூடிய குறிகளாகும். சரகத்தில் வேறு சில இலக்ஷணங்களும் சேர்க்கப்பட்டு ஸஹஜார்ஸ்ஸின் தன்மைகள் வெகுவிஸ்தாரமாகவர்ணிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா அர்சஸ்ஸுகளுமே மூன்று தோஷங்களாலும் (ஸந்நிபாதத்தினுல்) உண்டாவதாகக் கூறப்படும்போது, தனியே "ஸந்நிபாதார்சஸ்" என்று ஒன்று மொழியப்படுவதெங்ஙனம்? என்றுல் மற்ற அர்சஸ்ஸுகளில் வாதபித்தகபங்கள்மூன்றும் பிரகோபிக்கின்றனவாயினும் அவை ஏற்றத்தாழ்வான நிலைமையில் பிரகோபித்திருக்கும். ஸந்நிபாதார்சஸ்ஸிலோவென்றுல் தோஷங்களமூன்றும் ஒரே அளவாக அல்லது ஸமபலமாகப்பிரகோபித்து கடுமையான அர்சோரோகத்தை உண்டுபண்ணும்.

1 இங்கே குறிக்கப்படுகிற குல்மம் முதலிய வ்யாதிகளைப்பற்றிய விவரங்கள் பிறகு க்ரமமாக அந்தந்த நிதாநத்தில் வர்ணிக்கப்படும்.



பித்தார்சஸ்ஸின் இலக்ஷணங்கள்:—பித்தம் அதிகரித்துண்டான மூலமுளைகள் சிவப்பு மஞ்சள் கறுப்பு இந்த நிறமுள்ள வையாகவும் முகத்தில் நீலமாகவும் காணப்படும்; அவற்றிலிருந்து தெளிவான இரத்தக்கசிவு உண்டாகும்; மேலும் அவை சவர்நாற்ற முள்ளவையாகவும், மெலிந்து மிருதுவானவையாகவும், நீண்டு தளர்ந்தவையாகவும், கிளியின் நாக்கு யக்ருத் என்னும் கல்லீரல்துண்டு-அட்டையின் வாய் இவற்றைப் போன்றவையாகவும், அழற்சி-அதிக வெப்பம்-ஜ்வரம்-வியர்வை-நாவறட்சி-மூர்ச்சை-அரோசகம்-மோஹம் இக்கோளாறுகளையுண்டுபண்ணுபவையாகவும், வெகு உஷ்ணமானவையாகவும இருக்கும். இவ்வர்சோரோகிக்கு திரவமாகவும் கறுப்பாவும் உஷ்ணமாகவும் மஞ்சள் நிறமாகவும் இரத்தம் போன்றதும் ஆமதோஷமுள்ளதுமான மலம் வெளியாகும். இந்த முளைகள் வாற்கோதுமை போல மத்தியில் பருத்திருக்கும். இப்பிணியாளியின் சர்மம் நகம் முதலியவை[1] இலைப்பசுமை அல்லது மஞ்சள்நிறங்கொள்ளும். 16-18.

கபார்சஸ்ஸின் இலக்ஷணங்கள்:—கபம் அதிகரித்துண்டான மூலமுளைகளின் வேர்கள் அதிகஆழ்ந்தும் விசாலமாகப் பரவியும் உண்டாயிருக்கும்; அம்முளைகள் அடர்த்தியாகவும், அதிகவலியுண்டு பண்ணுதவையாகவும், வெண்மையாகவும் காணப்படும்; நன்கு நீண்டும், தடித்தும், ஸ்நிக்த்தமாகவும், விறைத்துக்கொண்டும்,உருட்சியாகவும், குருவாகவும், அசைந்தாடாதவையாகவும், பிசுபிசுப்புள்ளவையாகவும்,ஸ்திமிதமாகவும், வழவழப்பாகவும்,அதிக தினவுள்ளவையாகவும்அடிக்கடிபரிசிப்பதற்கு இதமானவையாகவும், மூங்கிற்குருத்து-பலாவித்து-பசுவின் முலை இவற்றைப் போன்றவையாகவும், தொடையிடுக்குகளில் பிடிப்புண்டாக்குபவையாகவும், குதம் வஸ்தி நாபி இவற்றில் இசிவுண்டுபண்ணுபவையாகவும் இருக்கும். மேலும் இவ்வியாதியில் ச்வாஸம், காஸம், இயற்கைக்கு விரோதமான இருதயசலனம், வாயில் உமிழ்நீர் சுரக்தல், அரோசகம், பீநஸம், பிரமேஹம், மூத்திராக்ருச்சிரம், தலைவலி, குளிர்ஜ்வரம், நபும்ஸகத்தன்மை, அக்னிமாந்த்யம், வாந்தி, ஆமதோஷம் அதிகரித்த வேறு விகாரங்கள் இவை உபத்திரவங்களாகக் காணும்; மேலும் கொழுப்பு போன்றதும், கபத்துடன் கூடியதும், அளவில் அதிகரித்ததும், வயிற்றுக்கடுப்புடன்கூடியதுமான மலம் வெளியாகும்; இரத்தக்கசிவு முதலியது இதில் காண்பதில்லை; இந்த முளைகள் உடைவதுமில்லை; இப்பிணியாளியின் சர்மம் முதலியவை வெளிறியும் ஸ்நிக்த்தமாகவும் இருக்கும். 19—23.

ஸந்நிபாதார்சஸ்ஸின் இலக்ஷணங்கள்:—வாதார்சஸ் முதலிய மூன்றுக்குங் கூறிய இலக்ஷணங்கள் அனைத்தும் ஒருமிக்கக் கண்டால், அதை 'ஸந்நிபாதார்சஸ்' என்றறிக. ஸஹஜார்சஸ்ஸின் இலக்ஷணங்களும்[2] ஸந்நிபாதார்சஸ்ஸுக்கு ஒப்பானவையே. $23\frac{1}{2}$.

இரக்தார்சஸ்ஸின் ஸாமாந்ய லக்ஷணம்:--இரத்தம் அதிகரித்துண்டான மூலமுளைகள் குதத்தில் லிலங்களைப் போன்று அடைத்துக் கொண்டிருக்கும்;பித்தார்சஸ்ஸுக்குஸமானமான மற்ற இலக்ஷணங்களும் இதற்குண்டாகும். ஆலம்விழுது போலவும், குன்றுமணி போலவும், பவழக்கொடி போலவும் கிளம்பியிருக்கும்; இப்பிணியாளிக்கு மலம் மிகவும் இறுகிப்போகும்; அவ்விதம் இறுகிய மலம் வெளிவருகையில், அதனுல் அம்முளைகள் நசுக்கப்பட்டு திடீரென்று இரத்தப் பெருக்குண்டாகும்; இரத்தம் மிகுதியாக வெளிப்படவே, அந்த ரோகி அவ்வித இரத்தக்ஷயத்தினுலான கோளாறுகளால் தவளையைப் போன்ற தேஹநிறத்தைப் பெற்று, தேஹநிறம், தேஹபலம், மனத்தென்பு இவை க்ஷீணிக்க, ஓஜோதாது

1 முதலியவை யென்பதால், மூத்திரம், கண், வாய் இவைகளும் குறிக்கப்படுகின்றன.

2 ஸஹஜார்சஸ்ஸின் விவரணத்தைப்பற்றி 29-வது பக்கத்தில் டிப்பணியைப் பார்க்க.

க்ஷயிக்க, இந்த்ரியங்கள் கலக்கங்கொள்ள வருந்துவான்; அவனது மலம் கறுத்தும் கடினமாகவும் பசையற்றதாகவுமிருக்கும்; அபானவாயுவும் அவனுக்கு வெளியாகாது. 24-27.

வாதஜ ரக்தார்சஸ்:—இரத்தார்சஸ்ஸில் மூலமுளைகளிலிருந்து வெளியாகும் இரத்தம் தெளிவாகவும், இளஞ்சிவப்பாகவும், நுரையோடு கூடியதாகவும் இருந்து, இடுப்பு துடைகள்குதம் இவற்றில் நோவும் அதிக பலஹீனத் தன்மையும் உண்டானால், அவ்வர்சஸ்ஸு உற்பத்தியாவதற்கு ரூக்ஷகுணமும் காரணமாயேற்பட்டிருந்தால் அதில் வாத தோஷம் அநுபந்தமாயிருக்கும்.[1] 28-28½.

கபஜ ரக்தார்சஸ்:—இரத்தார்சஸ்ஸில் மலமானது உடைந்தும், வெளுத்தும், சிறிது மஞ்சளாகவும், ஸ்நிக்த்தமாகவும், குருவாகவும், குளிர்ந்ததாகவும் இருந்து, மூலமுளைகளிலிருந்து கசியும் இரத்தம் தோய்ந்தும், நூல்போன்றதாகவும், வெண்மையாகவும், பிசுபிசுப்பாகவும் வெளிவந்து, குதத்வாரம் பிசுபிசுப்பாகவும் ஸ்தப்த்தமாகவுமிருந்து, அர்சஸ் உண்டாவதற்கு குரு குணமும் ஸ்நிக்த்த குணமும் காரணமாயேற்பட்டிருந்தால் அதில் கபதோஷம் அநுபந்தமாயிருப்பதாகக் கற்றறிந்தவர் கருதுவர். 29, 30.

அர்சஸ்ஸின் பூர்வரூபம்:—உணவு ஜீர்ணமாகாமை, பலக்குறைவு, வயிறு விம்மிச் சப்தித்தல், உடலிளைத்தல், அதிக தேக்கெறிவு, துடைகள் க்ருசமாதல், மலம் சொற்பமாக வெளியாதல் ஆக இக்குறிகள் காண்பதும், இது கிராஹணீரோகமோ-பாண்டுவோ- உதரரோகமோ வென்கிற ஸந்தேஹம் ஜனிப்பிப்பதும் பலமாக உண்டாகப் போகிற அர்சஸ்ஸுக்கு முற்குறிகளாகும். 31 32.

அர்சஸ்ஸால் பல வேறு உபத்திரவங்கள் உண்டாவதன் காரணம்[3]:—ஐந்து விதமான வாயுவும்[4], ஐந்து விதபித்தமும்[5] ஐந்து வகையான கபமும்[6] குதத்திலுள்ள மூன்றுவலிகள் என்கிற மடிப்புகளும் ஆக இவை யாவும் அர்சோரோகம் உண்டாகையில் மிகக் கோளாறடைகின்றன. ஆகையினாலேயே அர்சோரோகங்கள் துன்பந்தரக்கூடியவையாகவும், அநேகம் வேறு வியாதிகளையுண்டுபண்ணுபவையாகவும், ஸகல தேஹத்திலும் தாபமளிக்கத்தகுந்தவையாகவும், பெரும்பாலும்[7] கஷ்டஸாத்யமாகவும் இருக்கின்றன. 33, 34.

ஸுகஸாத்யமான அர்சஸ்.—குதத்தின் வெளிப்புறத்து வலியென்னும் மடிப்பில் உண்டானதும், ஒரே தோஷம் கோளாறடைந்துண்டானதும்,[8] ஸமீப காலத்தில் உற்பத்தியானதுமான மூலரோகம் எளிதில் நிவ்ருத்திக்கக் கூடியதாகும். 35.

1 அநுபந்தம் என்பதன் விவரணத்தைப்பற்றி 16-ம் பக்கம் டிப்பணியில் விவரம் பார்க்க.

2 இரத்தார்சஸ் பொதுவாகப் பித்தார்சஸ்ஸுக்குச் சமான லக்ஷணமுள்ளதென்று முன்னமே கூறப்பட்டதால், பித்தஜரக்தார்சஸ் தனியே கூறப்படவில்லை. பித்த இரத்தங்களுடைய குணம் ஒரேமாதிரியானது.

3 ஆஸநத்வாரத்தில் மூலம் உண்டாகிறது; அங்ஙனமிருக்க எல்லா தேஹத்திலும் பலவிதமான கோளாறுகள் காண்பதாகக் கூறியதற்கு ஆதாரம் என்ன? என்கிற ஸந்தேஹம் இதனால் நிவாரணம் செய்யப்படுகிறது.

4, ஐந்துவிதமான வாயு:—பிராணவாயு, அபானவாயு, ஸமானவாயு, உதானவாயு, வியானவாயு. இவற்றிற்கு மார்பு, குதம், நாபி, கண்டம், ஸர்வசரீரம் ஆக இவை முறையே ஆச்ரய ஸ்தலங்களாம்.

5. ஐந்துவித பித்தம்:—ஆலோசகம், இரஞ்ஜகம், ஸாதகம், பாசகம், ப்ராஜகம். இவற்றிற்கு நேத்திரம், யக்ருத் என்னும் கல்லீரல், ஹ்ருதயம், பக்வாசயம், சர்மம் ஆகிய அவயவங்கள் முறையே ஆச்ரய ஸ்தலங்கள்.

6. ஐந்துவித கபம்.—அவலம்பகம், க்லேதகம், போதகம், தர்ப்பகம், ச்லேஷகம் இவற்றிற்கு மார்பு, ஆமாசயம், நாக்கு, சிரஸ், ஸந்திபாகங்கள் ஆகிய இவ்வவயவங்கள் ஆச்ரயஸ்தலங்களாகும்.

7. பெரும்பாலும் என்பதால் ஸுகஸாத்ய, அஸாத்ய, யாப்யரூபமான அர்சஸ்ஸுகளும் உண்டென்று குறிக்கப்படுகிறதாய் அறிக.

8. முதல் வலியில் உண்டானதாயிருந்தும் அது இரண்டு தோஷங்களால் உண்டாயிருந்தால் கஷ்டஸாத்யமாகும். மூன்று தோஷங்களால் ஏற்பட்டிருந்தால் யாப்யம் அல்லது அஸாத்யமாகவும் ஆகும் என்றறிக.



கஷ்டஸாத்யமான அர்சஸ்:—இரண்டு தோஷங்களால் உற்பத்தியானதும், இரண்டாவது வலியில் கிளம்பியதும், ஒரு வருஷத்திற்கு முன்னால் உண்டானதுமான மூல ரோகம் வெகு கஷ்டப்பட்டு நிவ்ருத்திக்கக் கூடியதாகும். 36.

அஸாத்யமான அர்சஸ்:—(1) ஸஹஜமான அர்சஸ்ஸும், ஸந்நிபாதார்சஸ்ஸும், உட்புறமாயுள்ள மூன்றாவது வலியை ஆச்ரயித்துண்டாகும் அர்சஸ்ஸும் சிகித்ஸைக்கு வசப்படாத அர்சஸ்ஸுகளாகும். (2) அதே அர்சஸ்ஸுகள், நான்கு பாதங்களும்[1] குறைவின்றி அமைந்திருந்தால், ஜாடராக்னியும் நல்ல நிலைமையிலிருந்தால் ஆயுள் மிச்சமிருப்பவனுக்கு யாப்யங்களாகும்;[2] அவ்விதமில்லையேல் இப்பிணியாளிகளைக் கைவிடவேண்டியதே. 37, 38.

அஸாத்ய அர்சோரோகத்திற் காணும் சில உபத்திரவங்கள்:—கையிலும், பாதத்திலும், முகத்திலும், நாபியிலும், குதத்திலும், பீஜங்களிலும் வீக்கமுண்டாதல், இருதயத்திலும் விலாப்பக்கங்களிலும் வலி; ஆக இக்குறிகள் எவனுக்குக் காண்கின்றனவோ அவனுடைய மூலவியாதியும் அஸாத்யமாகும். மேலும் இருதயத்திலும் பார்ச்வங்களிலும் வலி, மயக்கம், வாந்தி, உடம்பெல்லாம் வலி, ஜ்வரம், நாவறட்சி, ஆஸநத்வாரத்தின் வேக்காடு இவ்வுபத்திரவங்களும் அர்சோரோகியைக் கொன்றுவிடும். அன்றியும் நாவறட்சி, அரோசகம், வயிற்று வலி இவைகளால் பீடிக்கப்படுகிறவனும், அதிக இரத்தப் பெருக்குள்ளவனும், வீக்கம் அதிஸாரம் இவற்றுடன் கூடியவனுமான அர்சோரோகி க்ஷீணித்து உயிர் துறப்பான். 39-41.

இதர அவயவங்களில் அர்சஸ்ஸுண்டாதல்:—அந்தந்த அவயவத்திற்குத் தகுந்தவாறு ஆண்குறி முதலியவற்றிலும்[3] நாபியிலும் அர்சஸ்ஸுகள் உண்டாவதுண்டு. அவை மண்ணுணிப் பாம்பின் முகம் போன்றவையாகவும், பிசுபிசுப்புள்ளவையாககவும், மிருதுவாகவும் இருக்கும். 42.

சர்மகீலம்:—வியாநம் என்கிற வாயுவானது கபதோஷத்தைக் கிரஹித்து, வெளிப்புறத்து சர்மத்தில் கடினமாகவும் அசைவற்றதும் பெரிய அடைப்பான் போன்றதுமான முளையையுண்டுபண்ணும். அதை 'சர்மகீலம்' என்றறிக. (1) வாத தோஷத்தினாலான சர்மகீலம் குத்தல் வலியுண்டுபண்ணுவதாகவும், கடினமாகவும் இருக்கும். (2) பித்த தோஷத்தினாலுண்டான சர்மகீலத்தின் முகம் ஒருவாறு கறுநிறங்கொண்டதாகக் காணப்படும். (3) கப தோஷம் அதிகரித்த சர்மகீலம் கிரந்திபோன்றதாகவும், சர்மத்திற்குச் சமமான நிறமுள்ளதாகவும் இருக்கும். 43, 44.

1, வைத்தியன், ரோகி, பரிசாரகன், ஔஷதம் இவற்றிற்கு நான்கு பாதங்கள் அல்லது 'சதுஷ்பாதம்' எனப்பெயர் [1, திறமையுள்ளவனாகவும், யோக்யதையிற்சிறப்புற்ற ஆசிரியரிடம் வித்யாப்யாஸம் செய்தவனாகவும், வேலைகளை அநுபவப்படி கற்றறிந்தவனாகவும், முற்றிலும் பரிசுத்தனாகவும் வைத்தியன் இருக்க வேண்டும். 2. செல்வம், வைத்தியனுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல், ஞாபகசக்தி, தைர்யம இவை ரோகிக்கு அவசியமான நான்கு லக்ஷணங்கள். 3. ரோகியினிடம் அன்பு, பரிசுத்தமாயிருத்தல், திறமையுடன வேலைகளைச் செய்தல், புத்திசாலித்தனம் இவை பரிசாரகனுக்கு அவசியமான நான்கு குணங்கள். 4. அநேகவித முறைகளாகப் பக்குவம் செய்யக் கூடியதாயிருத்தல், அநேக குணங்கள் அடங்கியதாயிருத்தல், சிறந்த பூமியிலுண்டாய் தகுந்தவாறு ஸம்ஸ்கரிக்கப் பட்டிருத்தல், அந்தந்த வியாதிக்கு ஏற்றதாயிருத்தல் ஆக இவை ஔஷதத்திற்கு அவசியமான நான்கு குணங்கள்.]

2. யாப்யம்—வியாதி அஸாத்யமானதா யிருந்தும், பிணியாளிக்கு ஆயுள் இன்னும் மிச்சமிருக்கையில், வியாதி தொடர்ந்திருக்க, சீக்கிரத்தில் பிராணபாயமுண்டாகாமல் சில காலம் வரையில் பிணியாளி பிழைத்திருக்கக் கூடிய வியாதி நிலைமை யாப்யம் எனப்படுகிறது [ஆகவே வியாதியின் அஸாத்ய நிலைமை இரண்டு விதம்—ஒன்று யாப்யம்: ஆயுள் மிகுதியால் காலங்கழிதல். மற்றொன்று ப்ரத்யாக்யேயம்: சீக்கிரத்தில் பிராணபாயமுண்டாகுமென்று கைவிடக் கூடியது.]

3. முதலியவற்றிலும் என்று கூறியதால் நாசி, செவி முதலிய வேறு அவயவங்களிலும் முளைகள் (அர்சஸ்ஸுகள்) உண்டாகலாம் என்பது குறிப்பிடப்படுவதாய் அறிக. நாசியிலுண்டாவது நாஸார்சஸ் என்றும், செவியிலுண்டாவது கர்ணார்சஸ் என்றும் வழங்கப்படும்.

## 6. அக்நிமாந்த்ய-அஜீர்ண-விஷூசி- அலஸக விலம்பிகா நிதானம்.*

**ஜாடராக்னி நான்கு விதம்**:—குடலில் உணவுகளைப் பக்குவம் செய்வதற்கான அக்னியானது கபம் அதிகரிப்பதால் மந்தமாகவும்,[1] பித்தம் அதிகரிப்பதால் தீக்ஷ்ணமாகவும்,[2] வாதம் அதிகரிப்பதால் விஷமமமாகவும்,[3] மூன்று தோஷங்களும் இயற்கையான ஸம நிலைமையிலிருப்பதால்ஸமமாகவும்[4] இருக்கும். ஆகவே ஜாடராக்னி நான்கு விதமாகின்றது.1.

நான்கு வித ஜாடராக்னியின் க்ருத்யங்கள்:- விஷமமான ஜாடராக்னி வாதஸம்பந்தமான ரோகங்களையும், தீக்ஷ்ணமான ஜாடராக்னி பித்த ஸம்பந்தமான வியாதிகளையும், மந்தமான அக்னி கபஸம்பந்தமான வியாதிகளையும் உண்டுபண்ணும். ஏற்றக் குறைவில்லாமல் இயற்கை யளவிலுள்ள ஜாடராக்னி ஸமாக்னியெனப்படும்; தகுந்த அளவில் புஜிக்கப்பட்ட உணவு அவ்வக்னியினால் நன்கு ஜீர்ணம் செய்யப்படும். மேலும் மந்தமான ஜாடராக்னியையுடையவன் வெகு சொற்ப அளவான உணவை யுட்கொண்டபோதிலும் அது ஜீர்ணமாகமாட்டாது. விஷமாக்னியான மனிதனுக்கோவென்றால் ஆஹாரம் சில ஸமயம் நன்கு ஜீர்ணமாகும்; சில ஸமயங்களில் ஜீர்ணமாகாமலுமிருக்கும். உணவு சரியான அளவில் உபயோகிக்கப்பட்டாலும், அல்லது அதிக அளவாக புஜிக்கப்பட்டாலும் எவனுக்கு எளிதில் ஜீர்ணமாய் விடுகிறதோ அவன் தீக்ஷ்ணமான ஜாடராக்னி யுடையவன்[5] என்றறிக. இவர்களுக்குள் ஸமாக்னியாயிருப்பவனே ஆரோக்கியத்திற் சிறந்தவன் என்பார்கள். 2-4.

**அஜீர்ணமும் அதன் பேதங்களும்**:—கபம், பித்தம், வாதம் இம்மூன்றின் கோளாறால் முறையே ஆமம், விதக்த்தம், விஷ்டப்த்தம் என்று மூன்று வித அஜீர்ணங்கள்[6] உண்டாகும். இரஸதாதுவானது நன்கு இரத்தம் முதலியதாகப் பரிணமமடையாமல் நின்று,

* அக்னி மாந்த்யம், அஜீர்ணம், அலஸகம், விஷூசி, விலம்பிகா என்கிற ஐந்து விதமான வியாதிகள் இந்தப் பிரகரணத்தில் விவரிக்கப்படும். இவ்வைந்தும் குடலைப்பற்றிய கோளாறுகள்.

1. மந்தமான அக்னி-உணவை நன்கு ஜீர்ணிப்பதற்குப் போதிய சக்தியில்லாத ஜாடராக்னி.

2. தீக்ஷ்ணாக்னி — மிதமிஞ்சியுட்கொண்ட உணவையும் எளிதில் ஜீர்ணம் செய்யும் சக்தியுள்ள ஜாடராக்னி.

3. விஷமாக்னி—ஸமநிலைமை தவறிய அக்னி; ஏற்றத் தாழ்வான அக்னியெனப் பொருள்.

4. ஸமாக்னி—கோளாறடையாமல் இயற்கை நிலைமையிலுள்ள ஜாடராக்னி; இதுதான் தாதுக்களைச்சம நிலைமையில் வைத்து தேஹத்தைப் பரிபாலிக்கக் கூடியது. ஸமாக்னி யென்பதை விவரிக்காமல் கோளாறடைந்த மற்றவைகளைக் கூறினால் விஷயம் நன்கு விளங்காதெனக் கருதி, ஸமாக்னியென்பது வியாதி நிலைமைக்குச் சம்பந்தப்படாவிட்டாலும், இங்கு குறிப்பிடப்பட்டது.

5, "பஸ்மகம்" என்கிற வியாதி தீக்ஷ்ணாக்னி யென்பதால் குறிக்கப்படுகிறது. அதிக கடுமையான ஜாடராக்னியே தீக்ஷ்ணாக்னி யெனப்படுகிறது. சரகர் கூறுகிறார்,— "ஒரு மனிதனுக்கு கபம் க்ஷீணித்து, பித்தம் மிகப் பிரகோபமடைந்து, வாத தோஷமும் பித்தத்திற்கு அனுகூலமாக விருத்தியாய் விட்டால், அப்பொழுது அப்பித்தமானது ஜாடராக்னியை மிகவும் தீக்ஷ்ணமாகச் செய்கிறது. அப்பொழுது வாதத்துடன் கூடிய ஜாடராக்னி அதிக பலம் பெற்று உடலை வாட்டும். அடிக்கடி மிதமாக புஜித்தபோதிலும் உடனுக்குடனே உணவு ஜீர்ணமாய்விடும். மீண்டும் உடனே உணவு உட்கொள்ளப்படாவிட்டால் கடுமையான அந்த ஜாடராக்னி இரத்தம் முதலிய தேஹதாதுக்களை எரிக்க ஆரம்பிக்கும். அதனால் தேஹபலம் குன்றியும் போய், பலவித கோளாறுகள் ஏற்பட்டு ஒருக்கால் மரணமும் ஸம்பவிக்கும். இவனுக்கு உணவு வயிற்றில் விழுந்ததும் அமைதியேற்பட்டாலும், அது அந்த க்ஷணமே ஜீர்ணமாய் விடுவதால் அடுத்தாற்போல அவன் கடும்பசியால் தவிப்பான். நாவறட்சி, இருமல், தேஹதாபம், மூர்ச்சை இவையும் காணும்."

6. இந்த மூன்றுவித அஜீர்ணங்களுக்கும் பிறகு கிரமமாக விவரணங்கள் கூறப்படும்.



இரஸசேஷாஜீர்ணம் என்கிற நான்காவது அஜீர்ணம் ஒன்று உண்டாவதாகச் சிலர் கூறுகிறார்கள்.[1] உட்கொண்ட உணவு பக்குவமாவதற்கு ஓர் அஹோராத்ரம் செல்லுகையில், அதற்கிடையில் உள்ள அபக்வ நிலைமை ஐந்தாவது அஜீர்ணம் என்றும், ஆகவே அதற்கு திநபாகி[2] எனப் பெயரென்றும் சிலர் கூறுவர்; இவ்வஜீர்ணம் எக்கெடுதியையும் செய்யாதது.[3] அன்றியும் தினந்தோறும் போஜனம் செய்தவுடனே உணவு ஜீர்ணமாகாத இயற்கை நிலைமையை ப்ராக்ருதாஜீர்ணம் என்கிற ஆறாவது அஜீர்ணம்[4] என்றும் சிலர் கருதுகிறார்கள். 5.6.

**அஜீர்ணத்தின் காரணம்**:—ஏற்ற காலத்தில் ஸாத்மியமாகவும்[5] இலகுவாகவும் புஜித்த ஆஹாரங்கூட அதிக தண்ணீர் அருந்துவதாலும் விஷமமான உணவுகளைப்[6] புஜிப்பதாலும், வேகங்களை அடக்குவதாலும்,[7] பகல் நித்திரை முதலிய விபரீதமான நித்திரையாலும் நன்கு ஜீர்ணமாவதில்லை.[8] 7. (பொறாமை-பயம்-கோபம் இவற்றால் மனம் கலங்கி யிருக்கையிலும், பேராசை-வலி-தீனத்தன்மை- பகைமை இவற்றால் மனம் பீடிக்கப்படுகையிலும் புஜிக்கப்படும் உணவு நன்றாக ஜீர்ணமாகமாட்டாது.)

1. "இரஸசேஷம் என்றால் அந்நசேஷம் எனப் பொருள்; இரஸம் என்பதால் இரஸத்துடன் கூடிய ஆஹாரம் குறிக்கப்படுகிறது; ஆகவே ஜீர்ணமாகாமல் குடலில் தங்கிப்போன உணவு மூலமாய் உண்டாவது இரஸசேஷாஜீர்ணம்" என்று ஜெஜ்ஜடர் கூறுகிறார். இப்படியானால் ஆம விதக்த்த விஷ்டப்த்தா ஜீர்ணங்களின் குறிகளுள் முக்கியமானவை சில இதில் காணவேண்டும். அப்பொழுது அம்மூன்றினும் இது வேறுபட்டதாக மாட்டாது. அம்லோத்காரம் என்கிற புளித்த தேக்கெறிவு முதலிய கோளாறு ஜீர்ணமாகாத உணவு குடலில் தங்கியிருக்கையில் அவசியம் உண்டாகவேண்டும். இரஸசேஷாஜீர்ணத்தில் அப்படிப்பட்ட குறிகள் காண்பதில்லையென்று ஸுச்ருதர் முதலியவர் கூறுகிறார்கள்:-"தேக்கெறிவு சுத்தமாயிருந்தும் உணவில் அபேக்ஷையுண்டாகாது; இருதயம் குருவாகத் தோற்றும்; வாயில் உமிழ் நீர் அதிகமாய் ஊறும்; இது இரஸசேஷம் என்கிற நான்காவது அஜீர்ணம்." ஆகவே இரஸசேஷம் என்பது அன்னசேஷமாக மாட்டாது என்று ஆக்ஷேபிக்கப்படுகிறது. ஆகிலும், அன்னசேஷம் மிகச் சொற்பமாயிருக்கையில், தேக்கெறிவு சுத்தமாயிருத்தலும் கூடும்; எனவே இரஸசேஷம் என்றால் அன்ன சேஷம் என்றே பொருள் கொள்ளலாம் எனப்படுகிறது. "ஆஹாரம் குடலில் ஏற்றவாறு பக்குவமடையாமையால் ஆமம், விதக்த்தம், விஷ்டப்த்தம், இரஸ சேஷம் என்று நான்குவித அஜீர்ணம் உண்டாகிறது" என்று வேறு சில நூல்களிலும் கூறப்படுகிறது. "இரஸதாதுவில் ஜீர்ணமாகாத ஆஹாரத்தின் ஸூக்ஷ்மாம்சம் கலந்து விடுவதால் இரஸ சேஷம் என்கிற அஜீர்ணம் உண்டாகிறது" என்று கதாதரன் என்பவர் கூறுகிறார். எவரது அபிப்பிராயம் எங்ஙனமிருப்பினும், இரஸதாது சிறிது கோளாறடைந்து நன்கு பக்குவமாகாமல் ஸம்பவிக்கும் ஒருவித ரோகம் இரஸ சேஷா ஜீர்ணம் என்று கருதப்படுகிறது. இதில் மற்ற அஜீர்ணங்களுக்கு இருப்பதுபோல வாதாதி தோஷஸம்பந்தம் விசேஷமாகக் கிடையாது.

2. திநபாகி—அறுபது நாழிகையில் ஜீர்ணமாவது.

3. வயிற்றுப் பொருமல், பேதி, வாந்தி, வயிறளைத்தல் முதலிய விகாரங்களற்றது எனக் கருத்து. காலம் தவறி பக்குவமாகியும் விகாரங்களையுண்டுபண்ணாதது; இவ்வஜீர்ணத்தில், அவ்வறுபது நாழிகைகாலத்திற்கிடையில் மீண்டும் எவ்வுணவும் உபயோகிக்கலாகாது என்றறிக.

4. உணவு உட்கொண்டவுடனே குடலிலுள்ள ஆஹாரம் ஜீர்ணமாகாத நிலைமையிலிருக்கிறது. அவ்வுணவு நன்கு ஜீர்ணமாகிற வரையில் அது ஒரு அஜீர்ண நிலைமையாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அது ஜீர்ணமாவதற்கு முன்பு (உடனே) மீண்டும் ஆஹாரமுபயோகிக்கக் கூடாது. ஆகிலும் அது எக்கோளாறையும் உண்டுபண்ணாத இயற்கை அஜீர்ணம் (ப்ராக்ருதாஜீர்ணம்) என்று கருதப்படுகிறது.

5, ஸாத்மியம்—3-ம் பக்கத்திலும் 22-ம் பக்கத்திலும் டிப்பணியில விவரம் காண்க.

6. விஷமமான உணவு—விஷமபோஜநம் அல்லது விஷமாசநம் எனப்படுவது. "அளவு மீறியும், வெகு சொற்ப அளவாகவும் அகாலத்திலும் செய்யப்படும் போஜநம் விஷமபோஜநம் எனப்படுகிறது" என்று பாவமிச்ரர்.

7. வேகங்களை அடக்குவது—வேகஸ்ரோதம் எனப்படுவது. இ[illegible]ப்பற்றிய விவரத்தை 22-ம் பக்கம் டிப்பணியிற் பா[illegible]க.

8. அஜீர்ணஸாமாந்ய லக்ஷணம்—"மலம் அதிகமாக வெளியாதல் அல்லது முற்றிலும் கட்டிப் போதல், சோர்வு, அபாநவாயு அடைபடுதல், வயிறு விம்மிக் கொள்ளுதல், உடல பாரமாயிருத்தல், தலைச்சுற்றல் ஆகிய இவை அஜீர்ணத்தின் பொதுக்குறிகள்" என்று வாக்படர்.

ஆமாஜீர்ண லக்ஷணம்:—அவற்றுள் ஆம தோஷஸம்பந்தமான அஜீர்ணத்தில் தேஹம் பாரமாயிருப்பது போன்ற உணர்ச்சி, வாயில் நீருறுதல், கன்னங்களிலும் கண்களைச் சுற்றிலும் வீக்கம், புஜித்த உணவு அப்படியே தேக்கெறிவுடன் மேல் நோக்குதல், அத்தேக்கெறிவு அம்லத்தன்மையற்றிருத்தல் ஆக இக்குறிகள் காணும். 8.

விதக்த்தாஜீர்ண லக்ஷணம்:—தலைச்சுற்றல், நாவறட்சி, மூர்ச்சை, பித்தம் அதிகரித்துக் காணும் பற்பல விதமான விகாரங்கள், புகைந்து புளிப்பான தேக்கெறிவு உண்டாதல், வியர்வை, தேஹதாபம் இக்குறிகள் விதக்த்தம் என்னும் அஜீர்ணத்தில் உண்டாகும். 9.

விஷ்டப்த்தாஜீர்ண லக்ஷணம்:—வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல வேறு விதமான வாத ஸம்பந்தமான வேதனைகள், மலமும் அபானவாயுவும் வெளிப்படாமை, உடல் விறைத்தல், மயக்கம், தேஹமெங்கும் வேதனை இக்குறிகள் விஷ்டப்த்தம் என்னும அஜீர்ணத்திற் காணும். 10.

இரஸ சேஷாஜீர்ண லக்ஷணம்:—இரஸ சேஷம என்கிற அஜீர்ணத்தில் அன்னத்வேஷம், இருதயம் தெளிவடையாமலிருப்பது போன்ற உணர்ச்சி, தேஹம் பாரமாயிருத்தல் ஆக இக்குறிகள் உண்டாகும். 10½.

அஜீர்ணத்தின் உபத்திரவங்கள்:—மூர்ச்சை, பிதற்றல், வாந்தி, வாயில் உமிழ் நீர் அதிகமாயூறுதல், தேஹமிளைத்தல், தலைச்சுற்றல் இவை அஜீர்ணத்தினால் உண்டாகக் கூடிய உபத்திரவங்கள்; அல்லது அதனால் மரணமாவது நேரிடும்.[1] 11½.

அமிதபோஜனமும் அஜீர்ணமும்:—எவர்கள் விஷயமுணராதவர்களாய் மிருகங்களைப்போல அளவின்றி அமிதமாகப் புஜிக்கிறார்களோ அவர்கள் அநேகவிதமான வியாதிகளுக்குக்[2] காரணமான அஜீர்ண வியாதியை அடைகிறார்கள். 12½.

அஜீர்ணம் விஷூசி முதலிய வற்றிற்கும் காரணம்:—ஆமம், விஷ்டப்த்தம், விதக்த்தம் என்று கூறப்பட்ட எந்த அஜீர்ணமுண்டோ அதனால் விஷூசி யென்ன, அலஸக மென்ன, விளம்பிகை யென்ன இவ்வியாதிகளும் உண்டாகும்.[3] 13½.

விஷூசி:—வாயுவானது எந்த வியாதியில் அவயவங்களை ஸூசிகளால் குத்துவது போலத் தொந்தரவு செய்கின்றதோ[4] அது "விஷூசி" யென்று கூறப்படுகிறது. சாஸ்திரமறிந்து, மிதமாக புஜித்து வருபவர் அவ்வியாதியைப் பெறமாட்டார்; இந்த்ரியங்களை அடக்கியாள முடியாத மூடர்கள், தோன்றியவாறு உணவுகளைத் தின்பதிற் பேராவா கொண்டவர்களாய் இவ்வியாதிக்கு ஆளாகிறார்கள். இதில் மயக்கம், அதிஸாரம், வாந்தி, அதிக நாவறட்சி, வயிற்றுளைத்தல், தலைச்சுற்றல், காலின் ஆடுசதை முதலியவற்றின் வலிப்பு, கொட்டாவி, தேஹதாபம், உடல் கறுநிறங் கொள்ளல், நடுக்கல், இருதயத்தில் வேதனை, தலைவலி ஆக இந்த லக்ஷணங்கள் காணும்.[5] 14—16.

1. கடுமையான அஜீர்ணம் மரணத்திற்கும் காரணமாகும் என்று விஜயரக்ஷிதன்.

2. அனேக வித வியாதிகள் என்பதால் விஷூசி, அலஸகம், விளம்பிகை முதலியவை குறிக்கப்படுகின்றன. அஜீர்ணத்திற்கு முற்கூறியவை ஸாமாந்ய காரணம், அமித போஜனம் அதற்கு விசேஷகாரணமாகும்.

3 "ஆமாஜீர்ணத்தால் விஷூசியும், விஷ்டப்த்தாஜீர்ணத்தால் அலஸகமும், விதக்த்தாஜீர்ணத்தால் விளம்பிகையும் முறையே உண்டாகும்" என்று கார்த்திககுண்டன் முதலியவர் கூறுகிறார்கள். "ஆனால் விதக்த்தம் என்பது விசேஷமாக பித்தத்தினால் உண்டாவது. விளம்பிகை யென்பது வாத-கபங்களின் ஆதிக்யத்தால் உதிப்பது. ஆகவே-விதக்த்தாஜீர்ணம் விளம்பிகைக்குக் காரணமென்று கூறுவது யுக்தமல்ல. ஆகவே மூன்று அஜீர்ணங்களில் எதனாலும் எந்த அஜீர்ணமும் ஸம்பவிக்கலாமென்று மொழிவது ந்யாயம். 'அஜீர்ணத்தினால் வாதம் முதலிய தோஷங்கள் வெகு பலமாகக் கோளாறடைகின்றன; என்கிற இப்பிரமாணத்தை அநுஸரித்து, அஜீர்ணத்தினால் பொதுவாக விஷூசி முதலிய எக்கோளாறும் காணக்கூடும்" என்று வகுளகரர் என்பவர் அபிப்பிராயப்படுகிறார்.

4. ஸூசி யென்றால் ஊசி. பொதுவாக உடலெங்கும், முக்கியமாக வயிற்றில் ஊசிகளால் குத்தப்படுவது போன்ற வேதனை விஷூசியில் உண்டாவதால் இதற்கு விஷூசி யென்கிற பெயர் வந்தது எனக் கருத்து.

5. வாந்தியும் அதிஸாரமும் ஒரு மிக்கக் காணும் வியாதியே விஷூசியாகும் என்று ஸுச்ருதமதத்தை



அலஸகம்:—எவனொருவனுக்கு வயிறு மிகவும் விம்மிக்கொள்கிறதோ, சோர்வும் கூக்குரலும் உண்டாகிறதோ, அபானவாயு குதமார்க்கத்தில் தடையுற்று மேல் நோக்கியதாய் குடலின் மேற்புறமாய் ஓடுகின்றதோ, அதிகமாய் மலமும் அபானவாயுவும் கட்டப்பட்டுப்போகின்றனவோ, நாவறட்சியும் தேக்கெறிவும் அதிகமா யுண்டாகின்றனவோ அவனுக்குண்டாயுள்ள ரோகம் "அலஸகம்" எனப்படும்.[1] 17, 18.

விளம்பிகா:—புஜிக்கப்பட்ட உணவு கபத்தினாலும், வாததோஷத்தினாலும் விகாரமடைய, அது வாந்தி ரூபமாய் வாயினாலாவது மலரூபமாய் குதத்தினாலாவது வெளிவராமல் எவன் வருந்துகிறானோ அவனுக்குண்டாயுள்ள வியாதி "விளம்பிகை" எனப்படும்[2]. இது சிகித்ஸைக்கு எளிதில் வசப்படாத வெகு கஷ்டஸாத்யமான வியாதி யென்றும் பிராசீன சாஸ்திரஞ்ஞர்கள் கூறுகிறார்கள். 19.

ஆமதோஷ-விஷூசிகளிற் காணும் விசேஷ லக்ஷணங்கள்:—(1) ஆமதோஷமானது தேஹத்தில் எவ்விடத்தில் தங்குகிறதோ, அவ்விடத்திலேயே விசேஷமானக் கோளாறுகளைப் பலவாறு உண்டுபண்ணிக்கொண்டு தொந்தரவளிக்கும்; மேலும் எந்த தோஷம் சரீரத்தில் விசேஷமாக வியாபித்திருக்கின்றதோ, அத்தோஷ ஸம்பந்தமான விகாரங்களும் ஆமதோஷஸம்பந்தமான கோளாறுகளோடுகூட பிணியாளியை வருந்தச் செய்யும்[3]. (2) எவனுக்குப் பற்களும் உதடுகளும் நகங்களும் கறுநிறங் கொள்கின்றனவோ, ஞாபகசக்தி மிகவும் சொற்பமாய் விடுகிறதோ, வாந்தியினால் மிகவும் வருந்த நேரிடுகின்றதோ, கண்கள் ஆழத்தில் புதைந்து விடுகின்றனவோ, குரல் மிகக் குன்றிப்போகின்றதோ, தேஹமெங்கும் பூட்டுகள் வெகுவாகத் தளர்ந்து விடுகின்றனவோ அவ்விஷூசி ரோகி உயிர் துறப்பான். 20, 21.

உணவு நன்கு ஜீர்ணமாவதன் குறிகள்:—புளித்த தேக்கெறிவு முதலிய துர்க்குணங்கள் நிவ்ருத்தியாதல், உத்ஸாஹம் விருத்தியாதல், தகுந்தவாறு அந்தந்த வேகங்கள் நன்கு வெளியாதல், தேஹம் இலகுவான நிலைமையைப் பெறுதல், பசியும் தாஹமும் உற்றவாறுண்டாதல் ஆக இவை யெல்லாம் உணவு நன்கு ஜீர்ணமாவதற்கான குறிகளாம். 22.

## 7. கிருமி நிதானம்.

பலவகையான கிருமிகள்:—(1) பாஹ்யக் கிருமிகள் என்றும், ஆப்யந்தரக் கிருமிகள் என்றும்[4] கிருமிகள் பொதுவாக இருவகைப்படும். (2) வெளியில் சர்மம் முதலியவற்றின் அழுக்கிலும், கபத்திலும், இரத்தத்திலும், குடலிலுள்ள மலத்திலும் ஆக நான்கிடங்

அநுஸரித்தவர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகவே உலக வழக்கத்திலும் இது வாந்தி-பேதி யெனப்படுகிறது. "மேல் நோக்கி வாந்தியும், கீழ் நோக்கி அதிஸாரமும் காணும். இதில் நீர் ரூபமான திரவதாதுவைத் தவிர மலரூபமான வஸ்து விசேஷமாகக் கலந்திராது. இது விஷூசி யென்றறிக" என்று சரகர் கூறுகிறார்.

1. அலஸகம் என்பது, தோஷம் ஓரிடத்தில் அசையாமல் நின்று விடுவதைக் குறிப்பிடும் பெயர். "புஜித்த உணவு மேல் நோக்கியும் வருவதில்லை, கீழ் நோக்கியும் போவதில்லை, ஜீரணமுமாவதில்லை; ஆனால் ஆமாசயத்திலேயே மந்தித்துத் தங்கிக்கொண்டு தொந்தரவளிக்கும்; ஆகவே இவ்வியாதி அலஸகம் எனப்படுகிறது." என்று வாக்படர்.

2. அலஸகத்திலும் விளம்பிகையிலும் இலக்ஷணங்கள் ஸமானமாயிருப்பதால், இவ்விரண்டுக்கும் உள்ள பேதம் என்ன வென்பது ஒரு பிரச்னை. அலஸகத்தில் சூலை முதலிய கோளாறுகள் வெகு கடுமை யானவை, விளம்பிகையில் அவ்விதமிரா.

3. பிறகு கூறப்படப்போகிற ஆமவாதம் என்கிற வியாதி இதனால் சுருக்கமாகக் கூறப்படுவதாய் அறிக.

4. பாஹ்யக்கிருமிகள்—தேஹத்தின் வெளிப்புற

களில் உற்பத்தியாவதால் கிருமிகள் ஜன்மபேதத்தைக்கொண்டு நான்குவகையாகக் கூறப்படுகின்றன. (ஃ) முற்கூறப்பட்ட கிருமிகள் பெயர்களைக்கொண்டு இருபதுவிதங்களாகும்.[1] 1¼.

பாஹ்யக் கிருமிகள்:—அவற்றுள் பாஹ்யக் கிருமிகள் சர்மாதிகளிலுண்டாகும் அழுக்குகளில் உற்பத்தியாகின்றன. அவை உருவத்திலும் நிறத்திலும் எள்ளுக்குச் சமானமானவை. உரோமங்களையும் அழுக்கு வஸ்திரங்களையும் ஆச்ரயித்து வளரும். அவற்றிற்குக் கால்கள் அநேகம் உண்டு. உருவத்திற் சிறியவையாகவுமிருக்கும். இவற்றுள் அதிக கால்களுள்ளவை யூகங்கள் என்றும்,[2] சிறியவையாயிருப்பவை லிக்ஷைகள் என்றும்[3] ஆக இக்கிருமிகள் இரண்டு வகையாக வழங்கப்படும். இக்கிருமிகள் கோடவென்கிற தழும்புகள், பிடகைகள் என்னும் கட்டிகள், சொறி, கொப்புளங்கள் இவற்றை யுண்டுபண்ணும்[4]. 2. 3.

கிருமிக்குப் பொதுக் காரணம்:—புஜித்த உணவு ஜீர்ணமாகாமலிருக்கையிலேயே மீண்டும் உண்பவன், இனிப்பும் புளிப்புமான பதார்த்தங்களை அதிகமாய் புஜிப்பவன், திரவமான வஸ்துவை விசேஷமாகப் பருகுபவன், மாப்பண்டங்களையும் வெல்லத்தையும் அமிதமாய் உண்பவன், அத்துடன் வியாயாமம் என்கிற தேஹ வுழைப்பில்லாதவன், பகலில் தூங்குபவன், விருத்தமான ஆஹாரங்களை[5] அருந்துபவன் ஆக இத்தகையவர்கள் கிருமிகளின் உற்பத்திக்கு ஏற்றவராவர். 4.

கிருமிக்கு விசேஷ காரணம்.—(1) உளுந்து, மாப்பண்டம், அம்லரஸம், இலவண ரஸம், வெல்லம், சில சாகங்கள் இவற்றை புஜிப்பதால் புரீஷஜங்கள் எனப்படுகிற மலத்தை ஆச்ரயித்த கிருமிகள் உண்டாகின்றன. (2) மாம்ஸம், மத்ஸியம், வெல்லம், பால், தயிர், சுக்தம் என்கிற ஒருவித காடி இவற்றை மிதமிஞ்சியுட்கொள்வதால் 'கபஜங்கள்' என்கிற சிலேஷ்மத்தைப்பற்றிய கிருமிகள் உற்பத்தியாகின்றன. (3) விருத்த போஜநம், அஜீர்ண போஜநம், சாகாஹாரம் இவை முதலியவற்றால் 'சோணிதஜங்கள்' என்கிற இரத்தத்தைப்பற்றிய கிருமிகள் விருத்தியாகின்றன. 5, 5½.

கிருமி யுண்டாயிருப்பதற்கான பொது லக்ஷணம்:—ஜ்வரம், முகம் முதலிய வற்றின் நிறம் கருப்பாதல், வயிற்றுவலி, இருதயரோகம், தேஹமிளைத்தல, தலைச்சுற்றல், அன்னத்வேஷம், அதிஸாரம் ஆக இவை கிருமி யுண்டாயிருப்பதற்கான குறிகளாம். 6½.

கபஜககிருமிகள்;—கபத்தை ஆதாரமாகக் கொண்டு ஆமாசயத்தில் உற்பத்தியாய் விருத்தியடைந்து கிருமிகள் அப்பால் குடலிலெங்கும் பரவும். அவற்றுள் சில பெரிய நாடாக்களைப் போன்றவை; சில கிருமிகளோ மண்ணுணிப்பாம்பு போன்றிருக்கும்; வேறு சில முளைத்த தானியங்களின் முளைகளைப்போலிருக்கும்; அவை மிக மெல்லியவைகளாய் நீண்டும அல்லது மிகக் குறுகியும் இருக்கும். அவற்றுள் சில வெண்மையாகவும் வேறு சில சிவந்த நிறமாகவும் காணப்படும். அவை அந்

த்தை ஆசரயித்து விருத்தியாகும் நுண்ணுயிர்கள். ஆப்யந்தரக்கிருமிகள்—தேஹத்தின் உட்புற அவயவங்களை ஆச்ரயித்து விருத்தியாகும் ஸூக்ஷ்மக்கிருமிகள்.

1. இங்கே ஸாதாரண கிருமிகள் இருபது விதங்கள் எனப்படுகிறது. ஆனால் இவற்றினும் அதிக ஸூக்ஷ்மமான கிருமிகள், இருபது விதங்களுக்கு மேற்பட்டவையுண்டு என்று சரகர் கூறுகிறார்.

2. யூகம்—பேன்.

3. லிக்ஷா (அல்லது லிக்ஷை)—ஈர் எனனும் பேன் முட்டை. (மலினமான வஸ்திரம் முதலியதிலுள்ள வெண்மையான பேன என்று சிலர்.)

4. பேன்களும் ஈருகளும் விசேஷமாகத் தலையில் உற்பத்தியாவது வழக்கமாகையால், இக்கட்டி முதலிவையும் விசேஷமாகத் தலையிலேயே உண்டாகுமென்று அறிக.

5. விருத்தாஹாரம்—31-ம் பக்கம் டிப்பணியில் 6-என்கிற குறிப்பைப் பார்க்க.



ராதம், உதராவேஷ்டம், ஹ்ருதயாதம், மஹாகுதம், சுரு, தர்ப்பகுஸுமம், ஸுகந்தம் என்கிற பெயர்களைக் கொண்டு ஏழு விதமாகப் பிரிக்கப்படும்.[1] இக்கிருமிகள் இருதயத்திற்கு இயற்கையினும் அதிகமான துடிப்பையும், வாயில் அதிக உமிழ் நீர் ஊறுவதையும், அஜீர்ணத்தையும், அரோசகத்தையும், மூர்ச்சையையும், வாந்தியையும், ஜ்வரத்தையும், வயிற்றுப்பொருமலையும், இளைப்பையும், வீக்கத்தையும், பீநஸத்தையும் உண்டுபண்ணும் 7—10½.

இரக்தஜக் கிருமிகள் —இரத்தக் குழாய்களிலுள்ள இரத்தத்திலுண்டாகும் ஜீவன்கள் அணுரூபமானவை; அவற்றிற்குக் கால்கள் கிடையா; வட்ட வடிவமாகவும் செந்நிறமாகவும் இருக்கும்; வெகு ஸூக்ஷ்மமாயிருப்பதால் வெறுங்கண்ணுக்குத் தென்பட மாட்டா; அவை கேசாதம், ரோம வித்வம்ஸம், ரோமத்வீபம், உதும்பரம், ஸௌரஸம், மாதரு என்று ஆறு வகைப்படும்; இவை குஷ்டத்திற்குக் காரணமாகின்றன.[2] 11, 12.

புரீஷஜக்கிருமிகள்[3] :—குடலில் பக்வாசயத்தில் மலங்களில் கிருமிகள் உண்டாகும்; அவை கீழே குதத்தை நோக்கி ஊர்ந்து செல்லும். அவையே எப்பொழுது முதிர்ந்து பெரிதாகின்றனவோ அப்பொழுதுமேலே ஆமாசயத்தை நோக்கிச் செல்லும். அச்சமயம் இப்பிணியாளிக்கு அதிக ஏப்பமும், பெருமூச்செறிதலும், மலத்திற்குச் சமானமான ஒருவித துர் நாற்றம் அப்பால் ஏற்படுவதும் ஆக இக்கோளாறுகள் காணும். அவற்றுள்சில கிருமிகள் வெகு நீண்டவையாகவும், சில கிருமிகள் உருட்சியாகவும், சில வெகு மெல்லியவையாகவும், வேறு சில மிகப் பருமனாகவும் இருக்கும். அங்ஙனமே நிறத்திலும் சில கிருமிகள் கபிலமாகவும், சில பசுமையாகவும், சில வெண்மையாகவும், வேறு சில கறுவலாகவும் காணப்படும். அக்கிருமிகள் ககேருகம், மகேருகம், ஸௌஸுராதம், ஸுசூலம், லேலிஹம் என்கிற பெயர்களைக் கொண்டு ஐந்து விதங்களாகும். பேதி, வயிற்றுளைத்தல், வயிற்றுப் பொருமல், தேஹவாட்டம், தேஹம் கடினமாதல், தேஹம் வெளுத்தல், [illegible], மயிர்ச்சிலிர்கை, ஜாடராக்னி மந்தமாதல், குதத்தில் தினவு இவையும் பலவிதமான வேறு கோளாறுகளும் இக்கிருமிகளால் காணும். 13-16.

144989

## 8. பாண்டு ரோக-காமலா-கும்பகாமலா-ஹலீமக நிதானம்.*

### பாண்டு ரோகம்.

பாண்டு ரோகம் ஐந்து:—வாத பித்த கபங்களால் தனித்தனியே ஒவ்வொரு பாண்டு ரோகமும், ஸந்நிபாதத்தினால் ஒன்றும், மண்ணுண்பதால்[4] மற்றொன்றும் ஆக பாண்டு ரோகங்கள் ஐந்து விதமாயுண்டாகும். 1.

பாண்டுவின் நிதானமும் ஸம்ப்ராப்தியும்.—சக்தியை மீறி வியாயாமம் செய்தல், அம்லரஸத்தையும் இலவணரஸத்தையும், மதுவையும் அமிதமாய் உபயோகித்தல், மண்ணுண்பது, அதிகமாய் பகலில் நித்திரையுறுவது,

1. இவற்றுள் சில பெயர்கள் அந்தந்தக் கிருமியின் தன்மைக்கு ஏற்றவாறு ஏற்பட்டவை. சில வ்யவஹாரத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பெயர்.

2. இரத்தத்திலேயே இயற்கையில் இக்கிருமிகள் வெகு ஸூக்ஷ்மமாயிருப்பதாகவும், இவை கோளாறடைந்தால் குஷ்டம் உண்டாகுமென்றும் சிலரது கருத்து. வேறு சிலர் இவ்வித கிருமிகள் குஷ்டமுண்டாவதற்கே காரணமானவை யென்றும், ஆகவே குஷ்டரோகிகளுடைய இரத்தத்தில் இவை ஏராளமாயிருக்கு மென்றும் கூறுவதுண்டு, "எந்த குஷ்டமும் ஸந்நிபாத தோஷத்தையும் கிருமிகளையும் காரணமாயுடையதாகும்" என்று ஸுச்ருதர்.

3. புரீஷஜக்கிருமிகள்—குடலிலுள்ள மலத்திலுண்டாகும் கிருமிகள் எனப் பொருள்.

* இந்த அத்தியாயத்தில் பாண்டு ரோகம், காமலா (காமாலை), கும்பகாமலா (வீக்கத்துடன் கூடிய ஒருவித காமாலை), ஹலீமகம் (பலவித உபத்திரவங்களோடு கூடிய கருங்காமாலை) இவை விவரிக்கப்படும்.

4. மண் உண்பதால் உண்டாகும் பாண்டு ரோகத்தைப்பற்றி ஸுச்ருதர் கூறவில்லை. 'கஷாயரஸமுள்ள

தீக்ஷ்ணமான வஸ்துக்களை யுபயோகிப்பது ஆக இவற்றால் வாதாதி தோஷங்கள் கோளாறடைந்து இரத்தத்தைக் கெடுத்து சர்மத்தை வெளிறச் செய்கின்றன.[1] 2.

பாண்டுவின் பூர்வரூபம்:—சர்மம் சிறிது வெடித்துப் போதல், மூக்கிலிருந்து சளி யொழுகுதல், உடல் இளைத்தல், மண்ணுண்பதில் விருப்பம், கண்களைச் சுற்றிலுமுள்ள பாகம் வீங்குதல், மலமும் மூத்திரமும் பசுமை நிறமாதல், உணவு ஜீர்ணமாகாமை ஆக இவை பாண்டு ரோகம் உற்பத்தியாவதை யறிவிக்கும் முற்குறிகளாம். 3.

வாத பாண்டு:—சர்மம், மூத்திரம், கண்கள் இவை முதலியவை ரூக்ஷமாகவும், கறு நிறம் அல்லது சென்னிறமாகவும் ஆதல்,[2] தேஹத்தில் குத்தல் வலி, நடுக்கல், வயிற்றுப் பொருமல், தலைச்சுற்றல் இவை முதலிய குறிகள் வாத ஸம்பந்தமான பாண்டு ரோகத்திற்காணும். 4.

பித்த பாண்டு:—பித்ததோஷக் கோளாறால் உண்டாகும் பாண்டுவில் மூத்திரம், மலம், கண் இவை மஞ்சள் நிறங்கொள்ளும்; தேஹ தாபமும், நாவறட்சியும், ஜ்வரமும் உண்டாயிருக்கும்; பலம் உடைந்து பேதியாகும்; உடல் மிகவும் பசுமையாய் விடும்[3]. 5.

கப பாண்டு:—வாயில் கோழை அதிகமாய் ஊறுதல், வீக்கம், சோம்பல், ஆலஸ்யம், உடல் அதிகமாய் பாரமாதல், சர்மம்-மூத்திரம்-கண்கள்-முகம் இவை வெளிறிப்போதல் ஆக இவ்விகாரங்கள் கபதோஷக் கோளாறுலான பாண்டுவிற் காணும். 6.

ஸந்நிபாத பாண்டு:—மூன்று தோஷங்களும் பிரகோபமடைந்துண்டான பாண்டு ரோகத்தில் ஒவ்வொரு தோஷத்தின் குறிகளும் சேர்ந்து காணும்; அவற்றோடு ஜ்வரம், அரோசகம், இயற்கைக்கு அதிகமான இருதயத்துடிப்பு, வாந்தி, நாவறட்சி, சோர்வு, உடலிளைத்தல், இந்த்ரியங்கள் க்ஷீணித்தல் ஆக இக்குறிகளும் கண்டால் அது அஸாத்ய வியாதியாகும். 7.

ம்ருத்திகையாலுண்டாகும் பாண்டுவின் ஸம்ப்ராப்தி:—மண்ணை உண்ணும் வழக்கமுடையவனுக்கு தோஷங்களில் ஏதேனும் ஒன்று பிரகோபமடையும். அவற்றுள் கஷாயரஸமுள்ள மண் வாதத்தையும், உவர் மண்ணனது பித்தத்தையும், இனிப்பான சுவையுள்ள மண் கபதோஷத்தையும் பிரகோபிக்கச் செய்யும்; மேலும் ம்ருத்திகையானது இரஸாதிதாதுக்களையும், ரூக்ஷத் தன்மையினால் புஜித்த உணவையும் வறண்டு போகச் செய்யும். மெலும் ம்ருத்திகை பக்வமடையாதாகையால், அது அங்ஙனமே ஸ்ரோதஸ்ஸுகள் என்னும் இரஸ இரத்தக்குழாய்களை நிரப்பி அவற்றில் அடைப்பையும் உண்டு பண்ணுகிறது; மேலும் அது இந்த்ரியங்களுடைய சக்தியைப் போக்கி, அங்ஙனமே சரீரகாந்தியையும்,[4] வீர்யத்தையும், ஓஜோதாதுவையும் அழித்து, சீக்கிரத்தில் பாண்டு ரோகத்தை யுண்டு பண்ணும் 8—9$\frac{3}{4}$.

ம்ருத்திகாபாண்டுவின் இலக்ஷணம்—ம்ருத்திகையினாலுண்டாகும் பாண்டுரோகம் தேஹ பலத்தையும், தேஹ நிறத்தையும், ஜாடராக்னியையும் அழிக்கும். கண்மண்டலம், கன்னம், புருவம் இவை வீக்கங்கொள்ள, பாதங்களும், நாபியும்-குதமும் வீங்க, குடலில் கிருமிகள் சேர, இரத்தம் கபம் இவற்றோடு கூடிய மலம் இப்பிணியாளிக்கு அதிஸார ரூபமாய் வெளியாகும். 10, 11.

---

மண் வாதத்தையும், உழமண் பித்தத்தையும், மதுரமான மண் கபத்தையும் பிரகோபிக்கச் செய்யும் என்கிற பிரமாணப்படி ம்ருத்திகாபக்ஷணத்தினாலும் தோஷங்கள் கோளாறடைந்து, அப்பால் தோஷக் கோளாறால் பாண்டு உண்டாகின்றதெனக் கருதி, ஸுச்ருதர் ம்ருத்திகாபக்ஷணத்தினாலான பாண்டுவைக் கூறவில்லைபோலும்.

1. இரத்தம் என்பது உபலக்ஷணம்; மாம்ஸமும் இரஸமும் கூட கோளாறடைவதாக த்ருடபலனும் ஹாரீதரும் கூறுகிறார்கள்.

2. "ஸர்வ வித பாண்டு ரோகங்களிலும் பாண்டுத்வம் என்கிற வெளுமை அதிகமிருப்பதால் இது பாண்டு எனப்படுகிறது" என்று ஸுச்ருதர் கூறுவதால் இங்கே கறுநிறம் சென்னிறங்கள் உண்டாவதாக மொழியப்படினும், ரோகத்தின் முக்கியலக்ஷணமான வெண்மை அதிகமிருக்கு மென்பதை மறக்கக்கூடாது.

3. பாண்டு ரோகம் பொதுவாகப் பித்தத்தினாலேயே உற்பத்தியாவதாகச் சாஸ்திரஞ்ஞர் கூறுவர். அப்படியிருந்தும் இதர தோஷஸம்பந்தமில்லாமல் கேவலம் பித்தத்தினால் உண்டாகும் பாண்டு பித்த பாண்டுவாகும்.

4. தேஜஸ் என்பதை சரீர காந்தி யென்று சிலரும் உடற் சூடு என்று சக்ரதத்தர் முதலியவர்களும் கூறுகிறார்கள்.

அழகானது! சுதேசியமானது!! உபயோகமானது!!!

அழகான 1921 கியாலண்டர்

ஜனவரிமீ 31 தேதிக்குள்ளாக எங்கள் டிபோ மருந்துகளை
6 ரூபாய்க்கு ஒரே தடவை வாங்குபவர்களுக்கு

ஒரு கியாலண்டர் இனாமாக அனுப்பப்படும்

தனியாக கியாலண்டர் 1-க்கு வி. பி. யோடு 0-6-0

மொத்தமாய் வேண்டுமானால் விலை சாசமாய்க் கொடுக்கப்படும்.
வி. பி. இல்லாமல் முன்னதாக தபால்பில்லை அனுப்புவோருக்கு கியாலண்டர் சேராமல் போனால் அதற்கு நாங்கள் ஜவாப்தாரரல்ல.
சில பிரதிகள் மாத்திரமே அச்சிட்டிருக்கிறோம்.
வேண்டியவர் உடனே வரவழைத்துக்கொள்ளவும்.

| படைமருந்து | பற்பொடி | மோஹினி தைலம் |
|---|---|---|
| டப்பி 1-க்கு 0-6-0 | டப்பி 1-க்கு 0-2-0 | டப்பி 1-க்கு 0-1-2-0 |

அமிருதாஞ்சனம்

எல்லா நோய்களுக்கு சித்தௌஷதம்.

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத்தலைநோய், வீக்கம் களுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—8—0, டஜன் 1-க்கு 5—6—0, வி. பி. வேறு.

அமிருதாஞ்சனம் டிபோ.

9 தம்பு செட்டி தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்,
109, ப்ரேரிரோட், பொம்பாய்.

## THE QUEEN OF HAIR OILS

# KAMINIA OIL (Registered.)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

# காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்.)




இந்த காமினியா எண்ணெய் அதிக விலை யுயர்ந்த சாமான்களடங்கியது. இது, மயிர் உதிர்வதையும் மண்டைக் குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கி, புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும், மாணாக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை நிறுத்தி, தலையின் அடிபாகத்தை சுத்தி செய்யும். இதுவும் தவிற அதிக வாசனையுமுடையது.

நற்சாக்ஷி பத்திரம்.

மூவத்து புழையிலிருக்கும் மிஸ்டர் பன்லோஸ் எழுதுகிறார் :—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்துடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப்பற்றி உங்களுக்கு வர்ணனம் செய்ய, போதுமான காரணத்தைக் கண்டேன். இந்த் தைலம் அதிகக் குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிற கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்" தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி. யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட்காக்ஷியில் தங்கமெடலும் அலஹாபாத் பொருட்காக்ஷியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்.

ஒரு புட்டியின் விலை ரூ. 1— 0—0. வி. பி. தபால் சிலவு ரூ. 0—6—0 வேறு.

மூன்று புட்டிகளின் விலை ரூ. 2—10—0. „ 0–14—0 „

☞ எச்சரிக்கை:—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனால் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும் பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும் வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்த காமினியா ஆயிலுக்குப் பதிலாய் கொடுக்க முயற்சி செய்வார்கள். காமினியா ஆயிலை தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடைடாததினால் அவர்கள் முயற்சிக்கு ஏமாறுமல் எப்பொழுதும் இந்தக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள் :—ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸீத் மார்க்கட், பம்பாய்.

மதராஸ் ஏஜண்டு :—மேதா புருஷோத்தம் மூல்ஜி,

29, [illegible], மதராஸ்.